# மயக்கும் மான்விழி



நித்யா கார்த்திகன்

## அத்தியாயம் - 1

"கள்ளனும் தோட்டக்காரனும் ஒன்று கூடினால்

விடியு மட்டுந் திருடலாம்"

ஆவணி மாதம் அமாவாசை இருள் எங்கும் சூழ்ந்திருந்தது... அந்த இரவின் நிசப்தத்தைக் குலைக்கும் சில்வண்டுகளின் ரீங்காரமும்... பத்து வயல்களுக்கு அப்பால் வரப்பில் வானுயர வளர்ந்து நிற்கும் பனைமரத்தின் உச்சியில் சீரியல் விளக்குகளைப் போல் ஒளிரும் மின்மினி பூச்சிகளும்... களத்துமேட்டில் மலைப் போல் அடுக்கடுக்காக அடுக்கப்பட்டிருந்த ஆயிரம் கடலை மூட்டைகளும்... மாரியின் நெஞ்சத்தில் திகிலை உண்டாக்கின.

"குப்பா... எல்லாம் முடிஞ்சுதா....?" தன்னுடைய குரலைக் கேட்க குப்பனைத் தவிர அங்கு ஒரு மைல் தூரத்திற்கு யாரும் இல்லை என்று உறுதியாகத் தெரிந்தாலும் ஏனோ குரலை தாழ்த்திக் கிசுகிசுப்பாகக் கேட்டான் மாரி.

"ம்ம்ம்... ம்ம்ம்... வண்டிய ஓட்டு... பாத்து தடத்தோட போ... வரப்புல விட்டுறாத..." என்றபடி மாட்டுவண்டியின் பின்னால் தாவி ஏறி முன்பக்கம் நகர்ந்து வந்தான் குப்பன்.

"ஜல்... ஜல்... ஜல்... ஜல்..." என்று சத்தமிட்டபடி மாட்டுவண்டி இருபது கடலை மூட்டைகளோடு மாரியையும் குப்பனையும் சுமந்துகொண்டு நகர்ந்தது.

"மாரி... கொஞ்சம் வெரசா போ... ரோட்டு மேல ஏறி கெழக்கால ஒரு மைல் தூரம் போய்ட்டோமுன்னா நிம்மேலி வந்துரும்... தப்பிறலாம்... ம்ம்ம்... மாட்ட அடிச்சு ஓட்டு..."

"ஹேய்... ஹேய்..." மாரி தார்க்குச்சியால் மாட்டை இரண்டு அடிப் போட்டு மூக்கணாங்கயிற்றைச் சுண்டிவிட்டான். வண்டிமாடு வேகமெடுத்து ஓட அவர்களின் பயணமும் சூடு பிடித்தது.

அவர்கள் இன்னும் ஐந்துநிமிடம் பயணம் செய்தால் வயல்வெளியைத் தாண்டி சோலையூரின் எல்லையைக் கடந்து சாலையை அடைந்துவிடலாம் எனும் நிலையில் தூரத்தில் இரண்டு தீப்பந்தங்கள் தெரிந்தன.

"குப்பா... வடக்கத் திரும்பிப் பாரு..." மாரி கலவரத்துடன் சொல்ல, அவசரமாகத் தலையை வடக்குப்பக்கம் திருப்பிய குப்பனையும் கலவரம் தொற்றிக் கொண்டது.

"ஆங்... மாரி... ஓட்டு... ஓட்டு... அடிச்சு ஓட்டு... மோப்பம் புடிச்சிட்டானுவன்னு நெனக்கிறேன்... வெரசா..." குப்பன் படபடத்தான்.

"ஹேய்... ஹேய்..." என்று மாட்டை விரட்டியபடி அதன் வாலை முறுக்கிவிட்டான் மாரி.

வண்டியில் கணம் அதிகம் இருந்ததாலோ, வயல்வெளியின் கரடுமுரடான பாதையாலோ அவர்கள் எதிர்பார்த்த அளவு மாடு வேகம் பிடிக்க மறுத்தது... முதலில் இரண்டாகத் தெரிந்த தீப்பந்தங்கள் இப்போது நான்கைந்தாக மாறி நெருங்கி வந்து கொண்டிருந்தன. இவர்கள் வண்டியின் வேகம் குறைந்து கொண்டிருந்தது. தீப்பந்தங்களின் வேகம் அதிகரித்துக் கொண்டிருந்தன.

மாரிக்கும் குப்பனுக்கும் பீதியில் வயிறு கலங்கியது... மூச்சே நின்று விடுவது போல் இதயம் படபடவென அடித்துக் கொண்டது. அவர்கள் இருவரும் அடுத்தது என்ன என்று யோசிப்பதற்குள் தீப்பந்தங்களுடன் வந்த ஆட்கள் பத்துபேர் அவர்களைத் திமுதிமுவெனச் சுற்றி வளைத்து விட்டார்கள்.

"எலேய்... மாரி... வண்டி எங்கடா போவுது...?" தீபந்தங்களுடன் வந்தவர்களில் தலைவன் தோரணையில் இருந்த வீரன் அதிகாரமாகக் கேட்டான்.

"பெரிய வீட்டுக்குண்ணே..." மாரி பம்மினான்.

"பெரிய வீட்டுக்குப் போறதுக்கு என்னாத்துக்குடா இந்தப் பக்கம் போற...?"

"இப்புடியே போயி ரோட்டு மேல ஏறி தெக்காலப் போனா... அம்பலாந்தெருவப் புடிச்சுப்புடலாம்... இருட்டுக்குள்ள இங்குட்டாலப் போவாம ரோட்டோட போயிடலாமேன்னுதா..." அவன் சாமர்த்தியமாகப் பேசினான்.

"இந்நேரத்துல கல்லமூட்டைய ஏத்திகிட்டுப் போற... ஐயாவுக்குத் தெரியுமா...?"

"ம்ம்... தெ... தெரியாம எப்புடி... தெரியு..." தட்டுத் தடுமாறி சமாளித்தான்.

அவன் சொல்வதைச் சந்தேகக்கண்ணோடு பார்த்த வீரன் "எலேய் காத்தமுத்து... போர்செட்டுல என்னோட சைக்கிள் இருக்கு... எடுத்துக்கிட்டு ஓடிப் போய் ஐயா வீட்டுக்குச் சேதி சொல்லி வெவரத்த தெரிஞ்சுகிட்டு வா..." என்று தன்னுடன் வந்த மற்றொருவனுக்கு உத்தரவிட்டான்.

"அண்ணே... எதுக்குண்ணே பெரியவீட்டுக்குச் சேதி சொல்லி அனுப்புற... நாங்க அங்கதாண்ணே போறோம்... வழிவிட்டு வெலகுண்ணே..." குப்பன் கொஞ்சம் துணிச்சலாகப் பேசினான்.

"தம்பிகளா... செத்தப் பொறுங்க... நா(ன்) கரம்பகளத்துல தான் காவலுக்கு இருந்தே(ன்)... பெரிய வயக்களத்துல நீங்க ரெண்டு பேருந்தான் காவலுக்கு இருக்குறதா ஐயா சொன்னாரு... ஆனா ரெண்டு நாளா உங்களுவ முழி சரியில்லன்னு உங்க மேல ஒரு கண்ணு(ம்) வச்சிருக்கச் சொன்னாரு... அதான் மாட்டுவண்டி சத்தம் கேட்டோன்ன ஆளுகள தெரட்டிக்கிட்டு வந்தேன்... பெரிய வீட்டுலேருந்து சேதி வர்ற வரைக்கும் நீங்க ரெண்டு பேரும் நவர கூடாது... மீறுனிங்க அப்பறம் நான் பேசமாட்டேன்... இந்தச் சுளுக்கி தான் பேசும் சொல்லிப்புட்டேன்..." என்று ஆவேசமாகக் கையில் இருந்த சுளுக்கியை தரையில் குத்திக் காண்பித்தான் அந்த விசுவாசமான முரட்டு வேலைக்காரன்.

வீரனின் ஆவேசத்தில் மாரியும் குப்பனும் குலைநடுங்கிப் போனார்கள். 'இன்னைக்கு விடியலப் பாக்க உசுரோட இருப்பமோ இல்லையோ தெரியல... ஆனா விடிஞ்சா நமக்குச் சங்கு ஊதுறது உறுதி...' என்று நினைத்தபடி வண்டியிலிருந்து இருவரும் கிழே இறங்கி தலையில் கட்டியிருந்த முண்டாசை அவிழ்த்துத் தோளில் போட்டுக் கொண்டு ஆளுக்கொரு பக்கமாக நடுக்கத்துடன் நின்றார்கள்.

###

"ஆத்தா... பெரியாத்தா... பெரியாத்தா.... யாத்தோவ்..." அந்த ஊரிலேயே மிகப்பெரிய வீடான வள்ளியம்மாள் இல்லத்தின் வாசலில் நின்றபடி காத்தமுத்து குரல் கொடுத்தான்.

"ஆர்ராது (யாரடா அது)... ஆர்ரா இந்தச் சாமத்துல...?" அந்த வீட்டின் மூத்த குடிமகள் வள்ளியம்மாள் பாட்டியின் வெண்கல குரல் திண்ணையிலிருந்து அதட்டியது.

பாட்டியின் படுக்கையறை எப்பொழுதுமே திண்ணை தான். கிராமத்தில் திருட்டுப் பயம் இல்லாததால் கேட்டைப் பூட்டாமல் இயற்கைக் காற்றை அனுபவித்துக் கொண்டு, திண்ணையில் ஒரு மூலையில் போடப்பட்டிருக்கும் கட்டிலில் உறங்குவது தான் வள்ளிப் பாட்டியின் வழக்கம்.

"நான்தா(ன்) பெரியாத்தா..."

"நாந்தான்னா... எந்தக் களவாணி பயடா...? பேருல்லையோ...?" என்று

எரிந்து விழுந்தபடி மின்விளக்கின் பட்டனைத் தட்டினார்.

'களத்துமேட்டுல மூட்ட மூட்டையா வண்டிக் கட்டி களவாடிகிட்டுப் போறவனுவள விட்டுப்புட்டு... துப்புச் சொல்ல வந்த என்னயப் போய் களவாணிங்குது பாரு கெழவி...' என்று மனதில் நினைத்ததை வெளியில் சொல்லாமல்

"யத்தா நாந்தாத்தா காத்தமுத்து... வெளிய வந்து சேதியக் கேளுத்தா..." என்று சற்று எரிச்சலுடன் படபடத்தான் காத்தமுத்து.

"காத்தனா...! என்னடா இந்நேரத்துல... வெள்ளி (விடியலில் தோன்றும் நட்சத்திரம்) மொளக்காங்காட்டியும் வந்து நிக்கிற...?" என்று கடிந்து கொண்டே வாசலுக்கு வந்தார் வள்ளி பாட்டி.

"களத்துமேட்டுலேருந்து வர்றேத்தா... மாரியும் குப்பனும் கல்லமூட்டைய வண்டில ஏத்திகிட்டு ரோட்டுப் பக்கமா போனானுவ... கேட்டா இங்க வர்றதா சொல்றானுவ... வீரண்ணே என்னான்னு கேட்டார (கேட்டுவிட்டு வர) சொன்னிச்சு..."

"ஆத்தி... பக்குவமா ஆஞ்சு மூட்டகட்டி வச்ச கல்லைய நடுசாமத்துல வண்டில ஏத்தச் சொல்ல நா என்ன கூறு கெட்டவளா...? பாவிப் பயலுவள காவலுக்கு வச்சா... வேலியே பயிர மேயிற கதையாவுல்ல போயிட்டு... கள்ளனும் தோட்டக்காரனும் ஒன்னு கூடினா விடியு மட்டு(ம்) திருடலாம்கறது சரியாத்தான் இருக்கு..."

"நீ அவனுவள வண்டிக் கட்ட சொல்லலன்னா, ஐயாவ எழுப்பி வெவரத்த கேளுத்தா..."

"என்னத்தடா கேக்குறது... தூக்கத்துல எழுப்புனா உங்கையாவுக்குக் கோவந் தாங்காது... நீ போயி அவனுவள அந்த எடத்துலேருந்து நவரவிடாம பாத்துக்க... அந்தா... மானத்துல (வானத்தில்) வெள்ளி மொளச்சுட்டு... இன்னும் ரெண்டொரு மணி நேரத்துல ராசா முளிச்சிடும். நா வெவரத்தச் சொல்லி களத்துக்கு வரச் சொல்றேன்... நீ போ..." என்று காத்தமுத்துவிற்குப் பதில் சொல்லி அனுப்பிவிட்டு வீட்டிற்குள் நுழைந்தார்.

மின்விளக்கின் வெளிச்சத்தாலும்... பேச்சுக் குரல்களாலும் கூடத்திலும் திண்ணையின் மறுபக்கத்திலும் படுத்து உறங்கிக் கொண்டிருந்தவர்கள் கண்விழித்து விட்டார்கள்.

"என்னத்தா சேதி... காத்தமுத்து எதுக்கு இந்நேரத்துல இங்கன வந்தா(ன்)...?" என்று கேட்டபடி திண்ணையில் படுத்திருந்த ‘குட்டாரு’

என்னும் கணக்கபிள்ளை எழுந்து வந்தார்.

"என்ன... என்ன இந்த நேரத்துல மாநாடு...?" என்று கணீர் குரலில் கேட்டபடி பாட்டியின் மூன்றாவது பேரனான தேவன் கூடத்திலிருந்து எழுந்து வந்தான்.

"அந்தக் கதையை ஏன்டா கேக்குறிங்க...!" என்று ஆரம்பித்து அனைத்தையும் சொல்லி முடித்தார் பாட்டி.

இவர்களின் பேச்சுக்குரல் கேட்டு வீட்டிற்குள் படுக்கையறையில் கதவைத் திறந்து வைத்தபடி உறங்கிக் கொண்டிருந்த பாட்டியின் மருமகள் வைதேகி

"என்னத்த... யாரு வந்தது...?" என்றபடி வெளியே வர... அடுத்த அறையிலிருந்து அதே கேள்வியை வைதேகியைப் பார்த்துக் கேட்டபடி அவளுடைய மருமகள் ராஜேஸ்வரி வந்தாள்.

வீட்டில் இருந்த அனைவருக்கும் விஷயம் கொஞ்சம் கொஞ்சமாகப் பரவியது போல் ஊருக்குள்ளும் கசிந்து ஊர்மக்கள் களத்து மேட்டில் வேடிக்கைப் பார்க்க சூழ்ந்துவிட்டார்கள். அதுவரை முக்கியமான ஆளுக்கு விஷயம் எட்டவில்லை.

###

"அத்த... நடுலவருக்குச் சேதி எட்டுனிச்சா...?" காலை காப்பிக்கு டிக்காஷனைத் தயார் செய்தபடி ராஜேஸ்வரி என்னும் ராஜி வைதேகியிடம் கேட்டாள்.

"மொதல்ல ஒம்புருஷனுக்குச் சொன்னியா இல்லையா...?" மாமியார் மருமகளைப் பதில் கேள்விக் கேட்டாள்.

"அதெல்லாம் சாமத்துலையே சொல்லிட்டேன்... இவரும் சின்னவரும் கருக்கல்லையே களத்துக்குக் கெளம்பிட்டாக... நடுலவருக்குச் சொல்லியாச்சா இல்லையா...? அதச் சொல்லுங்க மொதல்ல..." மருமகள் மாமியாரிடம் உரிமையுடன் எரிச்சலைக் காட்டினாள். அண்ணன் மகளாயிற்றே...!

"பீமனோட தேவனும் கெளம்பிட்டானா... நல்லது... ஐயா டவுனுக்குப் போயிட்டு ராவு ஒரு மணிக்குத்தானே வந்திச்சு... இன்னும் எழும்பல... எழுந்தோன ஆச்சி சொல்லிக்குவாக நீ வேலையப் பாரு..." என்று மருமகளிடம் பேச்சை முடித்துவிட்டு வீட்டின் பின்பக்கம் கடைக்கோடியில் இருக்கும் மாட்டுத் தொழுவத்தை நோக்கிச் சென்றாள் வைதேகி.

மூத்த மகனையும், இளைய மகனையும் பெயர் சொல்லி அழைக்கும் வைதேகி நடு மகனை மட்டும் ஐயா என்றும், ராசு என்றும், சாமி என்றும் தான் அழைப்பாள். அவனுடைய கம்பீரமான உருவமும்... கூர்மையான பார்வையும்... நினைத்ததைச் சாதிக்கும் அறிவும்... இறைவனையே எதிர்த்து நிற்கும் தைரியமும்... அவனைப் பெற்ற தாயையே அவன் பெயரைச் சொல்லி அழைக்கத் தயங்க வைக்கும்.

தொழுவத்தில் ஐம்பத்தி இரண்டு மாடுகளும் சிறப்பாகப் பராமரிக்கப்படுகிறதா என்பதைக் கண்காணித்தவள்...

"அடேய் மாயா... இந்தச் செவல கன்னுக்குட்டி ஏன்டா சோந்தாப்ல நிக்குது...? பாலு குடிக்குதா... தீவனம் திங்குதா...? "

"பால் இன்னிக்கு எத்தன லிட்டர் கண்டுச்சு...?"

"தீவனம் இன்னும் எத்தனை நாளைக்கு வரும்... நாளைக்கு டவுனுக்குப் போயி வாங்கிக்கிட்டு வந்துடு.... குட்டாருகிட்ட சொல்லி வக்கிறேன்... பணம் வாங்கிக்க..." என்று தொழுவத்தில் வேலை செய்யும் முதன்மை வேலைக்காரனான மாயனிடம் உத்தரவோடு பேசிக் கொண்டிருக்கும் போது, வள்ளி பாட்டி வீட்டுக்குள் இருக்கும் மாடிப்படியில் பதித்திருக்கும் பளிங்கு கல்லின் வழவழப்பிற்குப் பயந்து... வீட்டின் பின்பக்கம் உள்ள மரத்தாலான படியில் ஏறி மாடியில் இருக்கும் நடுப் பேரனுடைய அறைக்குச் செல்வது தெரிந்தது.

"ஹும்... இன்னும் கொஞ்ச நேரத்துல நடுலவனுக்குச் சேதி தெரிஞ்சிடும்... என்ன ஆகப் போகுதோ... கெரகம் புடிச்சவனுங்க... குடுக்குற சம்பளத்துக்கு விசுவாசமா வேல செய்யாம களவாணித்தனம் பண்ண பாத்துருக்காணுவ..." என்று முனுமுனுத்தபடி மாடியையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டு நின்றாள் வைதேகி.

வைதேகி மட்டும் அல்ல... தொழுவத்திலும் தோட்டத்திலும் வேலைச் செய்யும் அனைவரின் பார்வையும் கண்டும் காணாதது போல் மாடிப்பக்கம் தான் இருந்தது.

பாட்டி காலை ஆறு மணிக்குப் பேரனின் அறைக்குச் சென்றார். ஆறு முப்பதுக்குக் கீழே வந்தார். சிறிது நேரத்தில் காபி மேலே சென்றது... அதன் பிறகு மாடியில் எந்த அசைவும் தெரியவில்லை. எட்டு மணிக்கு டிஃபன் மேலே சென்றது... மீண்டும் அமைதி... வீட்டு மக்களும் வேலைக்காரர்களும் எதிர்பார்த்தபடி அங்கு எந்த எரிமலையும் வெடிக்கவில்லை. மாறாக மற்ற நாட்களைவிட இன்று அந்த வீடு மிகவும் அமைதியாக இருந்தது.

###

காலை ஒன்பது மணி, இதமான காலை வெயில் வயல்வெளியில் கூடியிருந்த மக்களைக் குளிர்காய வைத்தது.

மாட்டு வண்டியிலிருந்த மூட்டைகள் இறக்கி வைக்கப்பட்டிருந்தன. வண்டி மாடுகள் பக்கத்தில் ஒரு மரத்தில் கட்டப்பட்டிருந்தன. வண்டியில் பீமன் அமர்ந்திருந்தான். தேவன் அடுக்கப்பட்டிருந்த மூட்டை மேல் ஏறி அமர்ந்திருந்தான். மாரியும் குப்பனும் ஒரு பக்கத்தில் கையைக் கட்டியபடி நின்று கொண்டிருந்தார்கள். அவர்களைச் சுற்றி வளையம் போல் மக்கள் முகாமிட்டு அமர்ந்திருந்தார்கள்.

"எலேய் சின்னசாமி... நெதமும் (தினமும்) கருக்கல்ல ஏழு மணிக்கெல்லாம் வயலுக்கு வர்ற ஐயாவ இன்னைக்கு இன்னமும் காணுமே, என்னடா சேதி...?"

"அதாண்ணே எனக்கும் ஒன்னும் புரியல... இந்தப் பயலுவள என்ன செய்யப் போறாருன்னு பாத்துட்டுப் போவலாமுன்னு உக்காந்திருக்கேன்... எந்த வேல எங்கன கெடந்தாலும் கெடக்கட்டும்... இன்னைக்கு இங்க என்ன நடக்குதுன்னு பாக்காம நவர மாட்டேன்..."

"ஆமா... ஆமா... அதுக்குத்தான் நானும் உக்காந்துருக்கேன்..." என்று கூட்டத்தில் உள்ள இருவர் தங்களுக்குள் ரகசியமாகப் பேசிக் கொண்டிருந்த போது தூரத்தில் 'புடுபுடு'வென புல்லட் வரும் சத்தம் கேட்டது. அனைவரின் பார்வையும் ஒருசேர சத்தம் வந்த திசையை நோக்கிப் பாய்ந்தது.

காற்றில் கலைந்து நெற்றியில் புரளும் கேசத்தைத் தங்கக்காப்பு அணிந்த ஒரு கை கோதிவிட, மறு கை ரத்தத்தை ஒத்த சிவப்பு நிறத்தில் பளபளக்கும் புல்லட்டை சீரான வேகத்தில் இயக்க, வெள்ளை வேட்டிச் சட்டையில் ராஜதோரணையுடன் வந்து கொண்டிருந்த ருத்ரனைப் பார்த்த நொடி... வித்தைக்காரனைச் சுற்றி முற்றுகையிடுவது போல் மாரியையும் குப்பனையும் சுற்றி முற்றுகையிட்டு அமர்ந்திருந்த கூட்டம் தானாக எழுந்து நின்றது.

புல்லட் கூட்டத்தை நெருங்கியது. கூட்டம் விலகி உள்ளே புல்லட் நுழைய வழிவிட்டது.

ஓர் ஓரத்தில் மர நிழலில் வண்டியை நிறுத்திவிட்டு இறங்கினான் ருத்ரன். மடிப்புக் கலையாத வெள்ளை வேட்டிச் சட்டையும், நெற்றியில் இடப்பட்டிருந்த அடர்த்தியான சிறு குங்கும பட்டையும் அவன் எவ்வளவு நிதானமாகத் தயாராகி வந்திருக்கிறான் என்பதைத்

தெளிவாகக் காட்டியது.

'இங்கு இவ்வளவு பெரிய பிரச்சனைக்கு முடிவு தெரிவதற்காக ஊரே ஒன்று திரண்டு காத்திருக்கும் போது, காலையில் எழுந்ததும் முகத்தை மட்டும் கழுவிவிட்டு பீமனும் தேவனும் ஓடி வந்தது போல் அரக்கபறக்க வந்து பிரச்சனைக்கு முடிவு கட்டாமல்... வெள்ளை வேட்டி மைனர் கெட்டப் சிறிதும் குறையாமல் முறுக்கு மீசையும் குங்கும பட்டையுமாக ஆற அமர காலை ஒன்பது மணிக்கு வந்து நிற்கிறானே இந்த ருத்ரன்...! ‘வயலுக்கு வருவதற்கு இவ்வளவு மேக்கப் தேவையா....!' என்றெல்லாம் சிறிதும் எரிச்சல்படாமல்... ஏதோ தெய்வத்தையே நேரில் கண்டுவிட்டது போல் அந்த ஊர் மக்கள் முகத்தில் காட்டிய பிரகாசமும்... எழுபது வயது கிழவனும் அந்த முப்பது வயது இளைஞனைப் பார்த்து முதுகை வளைத்து முட்டி வரை குனிந்து துண்டை கக்கத்தில் வைத்துக் கொண்டு வணக்கம் சொன்ன விதமும்... அவனுக்கு அந்த ஊரில் உள்ள மதிப்பைக் காட்டினாலும்... அந்த ஊர்மக்கள் ஒரு நூற்றாண்டு பின்தங்கி இருக்கிறார்கள் என்பதைத் தெளிவாக உணர வைத்தது.

சகோதரன் ஸ்பாட்டுக்கு வந்துவிட்டதை அடுத்து பீமனும் தேவனும் எழுந்து அவனை நெருங்கினார்கள்.

"என்ன பீமா பிரச்சனை... எதுக்கு இங்க இவ்வளவு கூட்டம்...? யாரு மூட்டையெல்லாம் இங்க கொண்டு வந்து அடுக்குனது...? யாரு ஏத்திக்கிட்டு வரச் சொன்னது...?" எதுவுமே தெரியாதவன் போல் அண்ணனிடம் புதிதாக விசாரணையை ஆரம்பித்தான்.

"நா ஏத்திகிட்டு வர சொல்லல தம்பி..." பீமன் மாரியையும் குப்பனையும் முறைத்தபடி பதில் சொன்னான்.

ருத்ரனின் பார்வை தேவனிடம் திரும்பியது. "உன்ன கேக்காம நம்ம வீட்டுலேருந்து யாரும் எதுவும் செய்ய மாட்டாங்கண்ணே... மூட்டைய வண்டி கட்டி இங்க கொண்டுவந்து அடுக்குனது மாரியும் குப்பனுந்தான்..." என்று குற்றவாளிகளைக் கைகாட்டினான் தேவன்.

ருத்ரனின் பார்வை மாரியின் பக்கம் திரும்பியது...

"ஐயா... தப்புப் பண்ணிட்டேன் சாமி... என்ன மன்...னி... ஆ...த்தா...டி..." அவன் பேசி முடிப்பதற்குள் ருத்ரனின் முரட்டுக்கை அவனுடைய பிடரியைத் தாக்கியதில் "ஆத்தாடி....!!!" என்ற அலறலுடன் குப்புற விழுந்தான். விழுந்தவனிடம் அசைவே இல்லை.

நடுங்கியபடி நின்று கொண்டிருந்த குப்பனின் இரண்டு கைகளையும் முறுக்கி முதுகில் அணைகட்டி... தன்னுடைய வலதுக் கை விரல்களை

இறுக்கி மடக்கி... கையையே ஒரு கனமான இரும்பு குண்டலமாக மாற்றி ஓங்கி முதுகில் ஒரு குத்து... அணைக்கட்டியிருந்த கைகளிலிருந்து நழுவி அரையடி முன்னால் நகர்ந்தது குப்பனின் முதுகு. 'பட்..டட்' என்று இரண்டு முறை நெட்டி முறியும் சத்தம் அவன் கை முட்டியிலிருந்து வெளிப்பட்டது... அவன் வலியில் துடித்தபடி தரையில் விழுந்து புரண்டான். நிமிட நேரத்தில் அவனுடைய இரண்டு கைகளும் புசுபுசுவென யானைக்கால் போல் வீங்கிவிட்டன.

"ஐயா சாமி... விட்டுடுங்கையா..." என்று பெருங்குரலெடுத்துக் கத்தியபடி ஒரு நடுத்தர வயது பெண் ருத்ரனின் காலடியில் கவிழ்ந்தாள்.

"ஏய்... இந்தா... எந்திரி மொதல்ல..." ருத்ரனின் அதட்டல் அவளுடைய அழுகையை அடக்கியது. அந்தப் பெண் கண்ணீருடன் எழுந்து நின்றாள்.

"உங்களுக்குப் புண்ணியமா போகுமுங்க... புத்திக்கெட்ட மனுஷன்... அவர விட்டுடுங்கையா..." இன்னொரு பெண் யாசிப்பது போல் அவனிடம் மடியேந்திக் கேட்டாள்.

அவன் அந்தப் பெண்களின் முகத்தைக் கூர்ந்துப் பார்த்தான். அவர்கள் இருவரும் அடிபட்டுக் கிடப்பவர்களின் மனைவிமார்கள் என்பது தெரிந்தது. என்ன நினைத்தானோ... "ஒரு மணிநேரம் உங்களுக்கு அவகாசம்... மூட்ட முடிச்சக் கட்டிக்கிட்டு ஊரை விட்டு ஓடிடுங்க..." கர்ஜனையாக எச்சரித்தான்.

கூட்டமே அதிர்ந்தது. பிறந்து வளர்ந்த சொந்த ஊரைவிட்டு ஓடு என்றால் எங்கு ஓடுவது...! என்ன பிழைப்பு அவர்களுக்குத் தெரியும்...! பிள்ளைகளின் கதி என்ன...! ஒரு மணிநேரத்தில் எந்த மூட்டையைக் கட்டிக் கொண்டு எங்குப் போவது...! கதிகலங்கிப் போன பெண்கள் இருவரும்...

"ஐயோ சாமி... புள்ளக் குட்டிகாரவுகள இப்புடி வெரட்டுறிகளே... நாங்க எங்கப் போவோம்... என்ன செய்வோம்... பேசாம இந்த வீணாப் போன பாவி பயலுவளுக்கு முன்னாடி எங்களையும் எங்க புள்ளைகளையும் உங்க கையாலையே கொன்னுடுங்கைய்யா..." என்று தலையில் அடித்துக் கொண்டு அழுவதைப் பொருட்படுத்தாமல் புல்லட்டை ஸ்டார்ட் செய்தபடிச் சொன்னான்....

"ஏய்... காத்தமுத்து.... இந்த மூட்டையெல்லாம் வண்டில ஏத்திக்கிட்டு களத்துக்கு ஓட்டுறா..." அதிகாரத்தில் அதட்டலாக ஒலித்தது அவனுடைய குரல்.

# # #

ருத்ரனுக்குக் கட்டுக்கடங்காத ஆத்திரம்... 'உண்ட வீட்டுக்கே ரெண்டகம் நெனச்சுட்டானுவளே...! துரோகிங்க... உயிரோட விட்டதே தப்பு... கொன்னுப் பொதச்சிருக்கணும்...' என்று கொதித்தபடி சோலையூர் ஆற்றுப் பாலத்தில் வண்டியை விட்டான். தூரத்தில் சுடிதார் அணிந்த பெண்ணொருத்தி பாலத்தில் நின்றபடி ஆற்றை உற்றுஉற்றுப் பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

“தண்ணியில்லாத ஆற்றில் இந்தக் காலை வேளையில் அப்படி என்ன உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறாள் இந்தப் பெண்...” என்று சம்மந்தம் இல்லாமல் அவனுடைய கோபம் அந்தப் பெண்ணின் மீது திரும்பியது. நொடியில் அவனுடைய வண்டி அந்தப் பெண்ணிடம் நெருங்கிவிட்டது.

"ந்தா... ஏய்... பொண்ணு..." அலட்சியமான அவனுடைய குரலில் வெடுக்கெனத் திரும்பிப் பார்த்தாள் அந்தப் பெண்.

"எந்த ஊரு...? இங்க என்ன பண்ணிக்கிட்டு இருக்க...?" அதிகாரத் தொனியில் வந்தது கேள்வி.

அவனை மேலும் கீழும் ஒருமுறை அளந்தவள் பதில் சொல்லாமல் திரும்பவும் ஆற்று மணலை வேடிக்கைப் பார்க்க ஆரம்பித்துவிட்டாள்.

அவளுடைய அலட்சியம் அவனை மேலும் எரிச்சல்படுத்தியது...

"இந்தா புள்ள... இங்கெல்லாம் நிக்கக் கூடாது... கௌம்புக் கௌம்பு..." விரட்டினான்.

பாலத்துக்கு அடியில் தண்ணியடிப்பதும், சீட்டு விளையாடுவதும் அந்த ஊர் கழிசடைகளின் வழக்கம். அந்த இடத்தில் இந்தப் பெண் தனியாக நின்று கொண்டிருக்கிறாளே என்கிற அக்கறை கலந்த எரிச்சல் அவனுக்கு.

அவனுடைய எண்ணம் என்ன என்பதைப் படிக்குமளவிற்கு அவள் புத்திசாலி இல்லை என்பதால் அவளுக்கும் கோபம் மூக்கிற்கு மேல் வந்தது.

"ஏன் நிக்கக் கூடாது...? இந்தப் பாலத்த நீங்க பட்டா போட்டு வாங்கியிருக்கியளோ...!" நக்கலாகக் கேட்டாள்.

'ஊர்ல ஒரு பய எதுத்துப் பேசுனது இல்ல... இந்தச் சுண்டெலி இப்படி அலட்சியப்படுத்திட்டாளே...!' என்று நினைத்து அனல் பார்வையை அவளுக்குப் பதிலாகக் கொடுத்துவிட்டு அங்கிருந்து வண்டியை உதைத்து உறுமவிட்டுக் கிளப்பிக் கொண்டு நகர்ந்தான்.

## அத்தியாயம் - 2

"ஆனை வரும் பின்னே; மணியோசை வரும் முன்னே,

கேடு வரும் பின்னே; மதிக் கெட்டு வரும் முன்னே."

மான்விழிக்கு ஏகப்பட்ட எரிச்சல். "ச்ச... ஏன் தான் அப்பா இப்படி இருக்காரோ..." என்று நினைத்தவளுக்கு ஒரு மணிநேரத்திற்கு முன் வீட்டில் நடந்த சம்பவம் கண்முன் படமாக ஓடியது...

"மீனாட்சி... நா தென்னந்தோப்புக்குப் போறேன்... நீ நம்ம வேலன் வந்தான்னா தோப்புக்கு வரச் சொல்லு..."

"சரிங்க..."

"ம்ம்ம்... அப்பறம் நா மத்தியானம் சாப்பாட்டுக்கு வீட்டுக்கு வர முடியாது... தேங்காய லோடு ஏத்தி இன்னைக்கு அனுப்பணும். நீ சேகருகிட்ட சாப்பாட்டக் குடுத்தனுப்பிடு..."

"சரிங்க..."

"க்கும்... நா வாறன்..." வெற்றிலைப் பாக்கை மென்றபடி மனைவிக்கு வரிசையாக உத்தரவுகளைப் பிறப்பித்து விட்டு... ஒரு கனைப்புச் சத்தத்துடன் விடைப்பெற்று வாசலுக்கு வந்தார் சிதம்பரம்.

மகள் இரண்டு பெண்களுடன் வீட்டை நோக்கி வருவதைக் கவனித்துவிட்டு வண்டியில் ஏறுவதைத் தாமதித்து அவளிடம் பேச்சுக் கொடுத்தார்.

"என்ன கண்ணு... காலேஜூ இல்லையா...? எங்கப் போயிட்டு வர்ற...? யாரு இதெல்லாம்...?"

"அப்பா... இவங்க ரெண்டு பேரும் என்னோட காலேஜ் பிரெண்ட்ஸ்... நம்ம ஊருதான்... இவ பேரு காதம்பரி... இவ சுமதி... இன்னிக்கு காலேஜ் லீவ்... அதான் வீட்டுக்கு வரச் சொன்னேன்."

"ஓஹோ... யாரு வீட்டுப் பொண்ணுங்கம்மா நீங்க...?"

"நா வேலுச்சாமி மகப்பா..." காதம்பரி சொன்னாள்.

"நா முனியன் மகங்கையா..." சுமதி வணக்கத்துடன் சொன்னாள்.

அவளுடைய ஐயா என்கிற அழைப்பும் அவள் வணக்கம் சொன்ன விதமும்... அவரை விழித்துக் கொள்ள வைத்தது.

"எந்த முனியன் மகம்மா நீ... எந்தத் தெரு...?"

"நாலாங்கரைங்கைய்யா (தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் பகுதி)... எங்க அப்பா பெரியவீட்டுல தோட்ட வேல செய்யிறாருங்கையா..." அவள் தெருவைச் சொன்னதும் அந்தப் பெண்ணுடைய ஜாதியைத் தெரிந்து கொண்டவர் மகளை உக்கிரமாகக் பார்த்தார்.

அவர் பார்வைக்கான அர்த்தம் மான்விழிக்குப் புரிந்தது... அவருடைய பிற்போக்கான எண்ணத்தைப் புரிந்து கொண்டவள் எரிச்சலுடன் அவரிடம் சொன்னாள்.

"ரெண்டு வருஷத்துக்கு முன்னாடி நம்மூரு பள்ளிக்கூடத்துல பிளஸ் ட்டூல முதல் மார்க்கு வாங்கின பொண்ணுப்பா இவ... "

"ஓஹோ... உன்னோட படிப்புச் செலவுக்கு என்ன செய்றான் உங்கப்பன்..."

"பெரியவீட்டு ஐயா தானுங்கையா உதவி செய்றாரு..."

"ம்ம்ம்... ம்ம்ம்..." என்று முணுமுணுத்தவர் மகளைக் கண்டிக்க இது நேரமல்ல என்பதை உணர்ந்து மனைவியைக் கூவி அழைத்தார்.

"மீனாட்சி.... மீனாட்சி...."

அடுத்த நொடி மீனாட்சி அவர் முன் ஆஜராகி... "என்னங்க...?" என்றாள்.

"இவங்க ரெண்டுபேரும் பாப்போவோட காலேஜில படிக்கிற புள்ளைகலாம்... நீ கூட்டிகிட்டுப் போயி முன்கட்டுல உக்கார வச்சி... என்ன வேணுமோ குடுத்துப் பேசி அனுப்பு..." என்றபடி வண்டியைக் கிளப்பினார்.

இந்தப் பெண்களை வீட்டுக்குள் விடாதே... திண்ணையிலேயே அமரவைத்துப் பேசி அனுப்பிவிடு என்று மறைமுகமாக அவர் சொல்லிவிட்டுச் சென்றது அங்கிருந்த அனைவருக்குமே புரிந்தது.

சிதம்பரம் சொன்னதைக் கர்மச்சிரத்தையாக நிறைவேற்றினாள் மீனாட்சி. மான்விழிக்கு உள்ளுக்குள் எரிந்தது. தன்னுடைய சிநேகிதிகளைப் பெற்றோர் அவமானப்படுத்தி விட்டதாக நினைத்துப் புகைந்தாள்.

நாள் முழுக்கத் தோழிகளுடன் ஜாலியாக இருக்கலாம் என்று அவர்களை வரச் சொன்னவளுக்குப் பெற்றோரின் நடவடிக்கைகள் எரிச்சலை உண்டாக்க... பத்து நிமிடத்திற்கு மேல் வீட்டில் தங்காமல் வந்தவர்களை வெளியே அழைத்துக் கொண்டு வந்துவிட்டாள்.

தோழிகள் மூவரும் ஊர் எல்லையில் இருக்கும் ஆற்றுப் பாலத்தை

அடையும் பொழுது தான் கவனித்தாள் சுமதியின் கண்களில் கண்ணீர் பெருகிக் கொண்டிருந்தது.

"சுமதி... ஏய்... என்னடி ஆச்சு...?" மான்விழி பதறினாள்.

"நாந்தான் உங்க வீட்டுக்கெல்லாம் வரமாட்டேன்னு சொன்னேல்ல... நீ... நீதான் கேட்கல..." அவள் மான்விழியைக் குற்றம் சொன்னாள்.

தன் பெற்றோரின் செயல் அவளை வேதனைப்படுத்திவிட்டது என்பதைப் புரிந்து கொண்டவள்,

"சாரிடி..." என்று உயிரற்ற குரலில் சொன்னாள்.

"என்னடி சாரி... உங்க அப்பா அம்மாவைப் பற்றி உனக்குத் தெரியாதா...? நாங்களா உங்க வீட்டுக்கு வர்றோமுன்னு சொன்னோம்...? நீயாத்தானே கூப்பிட்ட.... இப்பப் பாரு என்ன ஆச்சுன்னு... இதல்லாம் எங்களுக்குத் தேவையா...?" காதம்பரிக்கு இந்த விதமான அவமானம் புதிது. அவளும் மான்விழியின் இனம்தான் என்றாலும் சுமதியுடன் வந்ததால் அவளையும் வீட்டிற்குள் சேர்க்கவில்லை மான்விழியின் பெற்றோர். அதில் ஆத்திரம் அடைந்திருந்தவள் சுமதியின் கண்ணீரைப் பார்த்ததும் வெடித்துவிட்டாள்.

தோழி என்றும் பார்க்காமல் மான்விழியைக் கன்னாபின்னாவென்று திட்டிவிட்டு சுமதியை அழைத்துக் கொண்டு சென்றுவிட்டாள். மான்விழி திகைத்துப் போய் அதே இடத்திலேயே நின்றுவிட்டாள்.

மனதை அமைதிப்படுத்த முயன்று ஆற்று மணலை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த பொழுதுதான் பின்னாலிருந்து அந்த அலட்சியமான குரல் கேட்டது.

"ந்தா... ஏய்... பொண்ணு..."

கடுப்புடன் திரும்பிப் பார்த்தவள் அங்கு புல்லெட்டில் அமர்ந்திருந்தவனின் மைனர் கெட்டப்பில் இன்னும் கடுப்பானாள். 'இவனுக்கெல்லாம் என்ன பதில் சொல்ல வேண்டிக் கிடக்கு...' என்று நினைத்து அவனுடைய அலட்சியத்தை அலட்சியம் செய்து வெடுக்கெனத் திரும்பிக் கொண்டாள்.

அவன் விடாமல் மேலும் துரத்த இவளும் சரியான பதில் கொடுத்தாள். பெரிய இவன் மாதிரி முறைத்துக் கொண்டே போய்விட்டான். “இவன மாதிரி ஆளுங்க தான் ஜாதி மதத்தையெல்லாம் அடுத்தடுத்த தலைமுறைக்குக் கடத்தறது...” என்று எரிச்சலுடன் நினைத்தபடி

மீண்டும் ஆற்று மணலை வேடிக்கைப் பார்க்க ஆரம்பித்துவிட்டாள் மான்விழி.

# # #

மூன்று ஏக்கர் தென்னந்தோப்பின் நடுவில் இருந்த அந்தச் சிறு கொட்டகையில் போடப்பட்டிருந்த கயிற்றுக் கட்டிலில்... ஊரில் ருத்ரனின் குடும்பத்திற்கு அடுத்தப்படியாகப் பாரம்பரியமும் பணமும் நிறைந்த குடும்பத்தின் தலைவரான சிதம்பரம் அமர்ந்திருந்தார். அவருக்கு முன் கோபால்சாமி, கலியபெருமாள், நாராயணமூர்த்தி மூவரும் மூன்று நாற்காலிகளில் அமர்ந்து... வேலைக்காரன் ஊற்றிக் கொடுத்த சாராயத்தை உள்ளே அனுப்பிக் கொண்டிருந்தார்கள்.

லேசாகப் போதை ஏறியதும் சிதம்பரம் வேலைக்காரனிடம் சைகைக் காட்டித் தூரமாகப் போகச் சொன்னார். உடனே அவன் அங்கிருந்து நகர்ந்தான்.

"பங்காளிகளா... நா கண்ணக் காட்டுனோன்ன அந்த வேலைக்கார நாயி தெறிச்சு ஒடுனானே... இன்னும் ரெண்டு வருஷத்துக்குப் பொறவும் இவன் இப்புடி ஒடுவான்னு நெனக்கிறியளா...?" யோசனையுடன் கேட்டார் சிதம்பரம்.

"ஏன்... ரெண்டு வருஷத்துக்குப் பொறவு இவனுக்கு என்ன தலையில கொம்பா மொளைக்கப் போவுது..." நக்கலாகப் பதில் கேள்விக் கேட்டார் கலியபெருமாள்.

"மொளைக்கதான் போவுது..." சிதம்பரம் தீர்மானமாகச் சொன்னார்.

"என்ன பங்காளி சொல்ற...? அது எப்புடி மொளைக்கும்...!" நாராயணமூர்த்திக் குழப்பத்துடன் கேட்டார்.

"கொம்புத் தானா மொளைக்காது பங்காளி... ருத்ரன் மொளைக்க வைக்கப் போறான்..."

"ருத்ரனா..!!!" மூவரும் வாயைப் பிளந்தார்கள்.

"என்ன பெரியப்பா சொல்ற...? எனக்கு ஒன்னுமே புரியலையே..." கோபால்சாமி கேட்டான்.

இந்த நால்வரில் கோபால்சாமி மட்டும் அடுத்தத் தலைமுறை. மற்ற மூவரும் ஐம்பதிலிருந்து அறுபது வயதிற்குள் உள்ளவர்கள்.

"கோவாலு... நீ கேட்டக் கேள்விக்கு நா பொறவு பதில் சொல்லுறேன்... நீ நா கேக்குற கேள்விக்கு மொதல்ல பதில் சொல்லு..." சிதம்பரம் புதிர்

போட்டார்.

"என்ன பெரியப்பா...?"

"என்னோட வயல்லையோ... வெளச்சல்லையோ... ஒருத்தன் கைய வச்சுட்டு இந்த ஊர்ல இருந்துட முடியுமா...?"

"அது எப்புடி பெரியப்பா... தொலச்சுப்புடுவிங்களே..."

"ஒன்னோட வயல்ல கை வச்சா நீ சும்மா இருப்பியா...?"

"வெட்டிப் பொதச்சுட மாட்டேன்...?"

"நீ சிங்கம்டா... நம்ப பரம்பர அப்புடி... வடக்கித் தெருவுல நேத்தைக்கு நடந்த சமாச்சாரம்... கேள்விப்பட்டியா...?"

"ஆமாம் பெரியப்பா... பெரியவீட்டுக் களத்துல காவக்காரனே கை வச்சிட்டானாமுள்ள..."

"அதுக்கு அந்தப் பெரியவீட்டு பெரியமனுஷன் என்ன பண்ணியிருக்கான் தெரியுமா...? அந்தப் பயலுவள ரெண்டு தட்டுத் தட்டிப்புட்டு... பொறவு இவனே ஆசுபத்திரில சேத்து வைத்தியம் பாக்குறான். இன்னைக்குத் தப்புப் பண்ணுனவனத் தட்டிக் குடுத்தா... நாளைக்கு எவனுக்குப் பயம் இருக்கும்...? எல்லாப் பயலுவளுக்கும் துளுருட்டுப் போயிறாதா...?" சிதம்பரம் பொரிந்துக் கொட்டினார்.

"பங்காளி... நீ அரகொறையா சொல்லுறப்பா... ருத்ரன் அவனுவள ஊரைவிட்டு போவச் சொல்லிட்டான். ஆனா அவனுவ வீட்டு பொண்டுவ(பெண்கள்) போயி பெரியாத்தாக் கிட்ட அழுதுப் பொலம்பிக் கெஞ்சியிருக்காளுவ... பெரியாத்தாவும் பாவத்துக்கு இரக்கப்பட்டு ருத்ரனுட்ட பேசி அவனுவள ஆசுபத்திரிக்குக் கொண்டு போவ ஏற்பாடு பண்ணியிருக்கு... ருத்ரனும் இந்த ஒரு தடவ போயித் தொலையிறானுவன்னு விட்டுட்டான்... இதானப்பா நடந்தது..." கலியபெருமாள் விளக்கமாகச் சொன்னார்.

"பொம்பள ஆயிரம் சொல்லுவாய்யா... இவனுக்குப் புத்தி வேண்டாம்...? இன்னைக்குத் தப்புப் பண்ணினவனுக்கு ஒழுங்கா தண்டனைக் குடுக்கலன்னா... நாளைக்கு இன்னொருத்தனும் இதே தப்பச் செய்யத் துணிவான்னுத் தெரிய வேண்டாம்... இவனெல்லாம் என்னய்யா பெரிய மனுஷன்..." எரிச்சலுடன் பேசினார் சிதம்பரம்.

அனைவரும் அவருடைய பேச்சுச் சரிதான் என்பது போல் அமைதியாக இருந்தனர்.

"பாருங்க பங்காளிகளா... நாமெல்லாம் அதிகாரம் பண்ணியே பழகிட்டோம்... நம்ம முன்னாடி கைகட்டி நின்ன பயலுகளாம் கை நீட்டிப் பேச ஆரம்பிச்சா என்ன ஆகும் யோசிச்சுப் பாருங்க..."

"நீங்க தேவை இல்லாம பயப்படுறிங்க பங்காளி... அதெல்லாம் ஒரு பயலும் நிமிர மாட்டான்... நாலாங்கரையில இருக்க எவனும் ஊருக்குள்ள செருப்புப் போட மாட்டானுவ... சட்டப் போட மாட்டானுவ... தோள்ள துண்டுப் போட மாட்டானுவ... இவனுவளா நிமுந்து நின்னுக் கேள்விக் கேப்பானுவன்னு இப்புடி நடுங்குறிய... ஹா... ஹா..." எக்காளமாகச் சிரித்தார் கலியபெருமாள்.

"சிரி பங்காளி... நல்லா சிரி... இந்த வருஷத்தோட இந்தச் சிரிப்புக் காலி..." தீவிரமான குரலில் எச்சரித்தார் சிதம்பரம்.

அவருடைய குரலில் இருந்த தீவிரம் கலியபெருமாளின் சிரிப்பை நிறுத்தியது.

"இன்னும் எண்ணி மூணே நாள்... நம்ம நாலு பேரையும் ருத்ரன் அவன் வீட்டுக்குக் கூப்பிடுவான். நம்ம நெலத்து வழியா நாலாங்கர நெலத்துக்குத் தண்ணிவிடச் சொல்லிக் கேப்பான்..."

"நாலாங்கர நெலத்துக்கு நாம தண்ணி விடணுமா...! எதுக்கு...?" நாராயணமூர்த்தியின் குரலில் ஆச்சர்யம்.

"இதுவரைக்கும் ஒரு போகம் வெள்ளாமை (விவசாயம்) பண்ணிக்கிட்டு இருந்த பயலுக நமக்குச் சமமா மூணு போகம் வெள்ளாம பண்ணனுமே... அதுக்குத்தான்..." சிதம்பரம் நிதானமாகச் சொல்ல... நாராயணமூர்த்தி ஆவேசமாக எழுந்தார்...

"என்ன அநியாயம்யா இது... அவனுக நமக்குச் சமமா மூணு போகம் வெள்ளாம செய்றதா...? அதுவும் நாம குடுக்குற தண்ணிய வச்சே...!"

"ஆமாம் பங்காளி... அதுக்குத்தான் ருத்ரன் ஏற்பாடு செய்றான்..." சிதம்பரம் நிதானமாகச் சொன்னார்.

சிறிதுநேரம் அங்கே பேச்சற்ற அமைதி... அனைவரும் வருங்காலத்தைப் பற்றிச் சிந்தித்தார்களோ...!

"பங்காளிகளா... இந்தக் காலத்துல யாரும் யாருக்கும் அடிமை இல்ல... எல்லாரும் பணத்துக்குத்தான் அடிமை... பணம் இருக்கவன் இல்லாதவன அடிமைப்படுத்தி வச்சுக்கலாம்... நம்மக்கிட்ட சிக்கியிருக்க அடிமைகளைத் தக்க வச்சுக்க நம்மக்கிட்ட பணம் இருந்தா மட்டும் போதாது... அவனுகக்கிட்ட பணம் இருக்கக் கூடாது... அது ரொம்ப

முக்கியம். அவனுவளும் நம்மள மாதிரியே மூணு போகம் வெவசாயம் செய்ய ஆரம்பிச்சிட்டானுவன்னா நம்ம வயல்ல வெவசாயம் பண்ண நாமதான் கலப்பையப் புடிக்கணும்... இல்லன்னா எங்க வயல்லயும் வந்து கலப்பையப் புடிடான்னு அவனுவ காலப் புடிக்கணும்..."

"ஐயையோ... பங்காளி... அவனுவள நிமிர விட்டுடவே கூடாது... அது நாம எல்லாரும் குடும்பத்தோட தற்கொல பண்ணிக்கிறதுக்குச் சமம்..." நாராயணமூர்த்தி ஆவேசப்பட்டார்.

"ஆமாம் பெரியப்பா... நீங்க சொல்றது சரிதான்... அவனுகளுக்கு எப்புடிக் கொம்பு மொளைக்கப் போகுதுன்னு இப்பப் புரியுது... ஆனா விடக்கூடாது பெரியப்பா... விடவே கூடாது..." கோபால்சாமியின் குரலில் கோபம் பொங்கியது...

"நீங்களுவ சொல்றதெல்லாம் சரிதான்... நாலாங்கரைக்குத் தண்ணி விடறதா இல்லையான்னு ஊரு பஞ்சாயத்துல்ல முடிவுப் பண்ணனும்... நாம பேசி என்ன ஆகப் போவுது?" கலியபெருமாள் நிதானமாகக் கேட்டார்.

"பஞ்சாயத்து என்னாத்த முடிவுப் பண்ணப் போவுது...? அந்த ருத்ரன் முடிவுதானே பஞ்சாயத்து முடிவு... அவந்தான் தண்ணி விடறதுன்னு முடிவுப் பண்ணிட்டா(ன்) போலருக்கே... அவன எதுத்து நம்மளால என்ன செய்ய முடியும்... அடுத்த வருஷத்துலேருந்து கலப்பையப் புடிக்கத் தயாராக வேண்டியதுதான்..." கோபால்சாமி விரக்தியாகப் பேசினான்.

"அட ஏன்டா கோவாலு நாம கலப்பையப் புடிக்கணும்...? அந்தப் பயலுகளுக்குத் தண்ணி விட முடியாதுன்னு சொல்ல வேண்டியதுதான்... "

"எப்படிப் பெரியப்பா...?"

"அடேய்... நாலாங்கரைக்குத் தண்ணி விடறதுன்னா நம்ம நாலு பேரோட நிலத்து வழியாதான் விடணும்... நாம நாலுபேரும் முடியாதுன்னு சொல்லிட்டா எவனும் நம்மள எதுவும் செய்ய முடியாது... ஆனா தைரியமா ருத்ரன எதிர்த்து நிக்கணும்... உங்களால முடியுமா...?" என்று சிதம்பரம் கேட்க,

**‘ஆனை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே; கேடு வரும் பின்னே மதிக் கெட்டு வரும் முன்னே...’** என்கிற உண்மை புரியாமல் சிறிதுத் தயக்கத்திற்குப் பின் அனைவரும் ருத்ரனைத் தீவிரமாக எதிர்ப்பது என்று முடிவுச் செய்தார்கள்.

###

சிதம்பரம், கலியபெருமாள், நாராயணமூர்த்தி மற்றும் கோபால்சாமி ஆகிய நால்வரும் ஒன்றாகப் பெரியவீட்டிற்கு வந்தார்கள்.

"வாப்பா செதம்பரோ... நல்லாருக்கியா...? என்ன இந்தப் பக்கம் உந்தெரு ஆளுகளோட வந்துருக்க...? "

"நல்லாருக்கே(ன்) பெரியாத்தா... நடுத்தம்பி வரச் சொல்லிச் சேதி அனுப்பியிருந்துச்சு... அதாந் தோப்புக்குப் போறதுக்கு முன்ன ஓரெட்டு இங்குட்டு வந்துட்டுப் போயிடலாமுன்னு வந்தேன்..."

"அப்புடிச் சொல்லு... சேதியில்லாம நீ இங்குட்டு வருவியா...! சரி சரி... ஏ(ன்) வெளியவே நின்னுப் பேசுறிய... உள்ளுக்கு வாங்க... "

நால்வரும் கூடத்திற்கு அனுமதிக்கப்பட்டார்கள். கள்ளிச்சொட்டு போல் திக்காக வீட்டில் கறக்கப்பட்டுச் சுண்டக்காய்ச்சிய பசும்பாலில் தயார் செய்த வெல்லக் காப்பியைச் சுவைத்தபடி ருத்ரனின் வரவுக்காகக் காத்திருந்தவர்களை அதிகநேரம் காத்திருக்க வைக்காமல் மாடியிலிருந்து கூடத்திற்கு இறங்கி வந்தான் அவன்.

"வாங்க மாமா... வந்து நேரமாச்சா...?"

அவர்களுக்குள் நேரடிச் சொந்தம் இல்லை என்றாலும்... மாமன் மச்சான் முறை உள்ளவர்கள் என்பதால் மாமா என்று அழைப்பதுதான் வழக்கம்.

"இல்ல மாப்ள... இப்பதா(ன்) வந்தோம்... தங்கச்சி காப்பிக் குடுத்துச்சு... இன்னம் குடிச்சு முடிக்கல... நீங்க வந்துட்டிங்க..." என்று சொன்னவர், அவன் அருகில் நெருங்கி வரும் பொழுது தானாக எழுந்து நின்றார். உடன் வந்திருந்தவர்களும் எழுந்தார்கள்.

"நல்லது... உக்காருங்க... உக்காருங்க..." என்றபடி அவர்களை நெருங்கி அவன் ஓர் இருக்கையில் அமர்ந்ததும்... அவனுடன் சேர்ந்து அவர்களும் அமர்ந்தார்கள்.

"உங்களையெல்லாம் ஒரு நல்ல விஷயத்தப் பத்திப் பேசத்தான் வரச் சொன்னேன்..."

"சொலுங்க மாப்ள... என்னா சேதி...?"

"நா எதப்பத்திப் பேசப் போறேன்னு உங்களுக்குத் தெரிஞ்சிருக்கணுமே...!" அவன் சூசகமாகக் கேட்டான்.

சிதம்பரம் அவனுடைய கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்று ஒரே ஒரு கணம் தடுமாறினார். அந்தத் தடுமாற்றத்தை அவருடைய கண்ணில்

கண்டு கொண்டவன் அவருக்கு விஷயம் தெரிந்திருக்கிறது என்பதை ஊகித்துவிட்டான். ஆனால் சிதம்பரமோ... அவனைப் புத்திசாலித்தனமாகச் சமாளிப்பதாக நினைத்துக் கொண்டு,

"எதப் பத்தி மாப்ள பேசுறிங்க... ஒன்னும் புரியலையே...!" என்றார்.

அவன் உதடுகள் லேசாக மேல்நோக்கி வளைந்தன. சிதம்பரத்தை எண்ணி உள்ளுக்குள் சிரித்தானோ...!

"புரியலன்னா என்ன மாமா... வெளக்கிச் சொன்னா புருஞ்சுக்கப் போறீங்க..."

"ஹி... ஹி... நீங்க சொல்றதும் சரிதான் மாப்ள..."

"நம்ம ஊர்ல நாலாங்கர நெலத்துல ஒரு போகம்தான் விவசாயம் செய்றோம். இனி மூணு போகம் விவசாயம் பண்ண ஏற்பாடு செய்யணும்..."

"மூணு போகமா... அதுக்குத் தண்ணிக்கு எங்கப் போறது...? அதுவும் இல்லாம அந்தப் பக்கத்து நெலமெல்லாம் நாலாங்கரப் பயலுக நெலந்தானே... அந்த நெலத்தப் பத்தி நமக்கு என்னாத்துக்கு மாப்ள கவலை... வேற வேலையப் பாருங்க..." அலட்சியமாகப் பேசினார் சிதம்பரம்.

"அதானே... " என்று மற்ற மூவரும் அவரை ஆமோதித்தார்கள்.

அவன் தாடையைத் தடவியபடி அவர்களைக் கூர்மையாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"மாப்ள... அந்தப் பயலுக மூணு போகம் விவசாயம் பண்ண ஆரம்பிச்சிட்டானுவன்னா நமக்கு வேலைக்கு வரமாட்டானுவ... இந்த எண்ணத்த இன்னையோட விட்டுடுங்க... அப்பறம் இந்த வேலக்காரனுவளுக்கு ரொம்ப எடம் குடுக்காதிங்க... நாளைக்கு உங்க தல மேலயே ஏறிப்புடுவானுவ..." என்று இலவசமாக அறிவுரையும் வழங்கினார்.

"இந்த ஊர்ல நம்ம ரெண்டு குடும்பத்துக்கு மட்டும் இருக்க நிலத்துக்கு... நாலாங்கரையில இருக்க மொத்த நிலமும் ஈடாகாது. நீங்க அவனுகள நமக்குப் போட்டியா நெனக்கிறிங்க...! பாவம் மாமா... கஷ்டப்படறானுங்க... புள்ளைகளப் படிக்கவைக்க முடியாம வேலைக்கு அனுப்பறானுவ... பொழச்சுட்டுப் போகட்டுமே..." அவன் அவருக்குப் புரிவது போல் எடுத்துச் சொன்னான்.

யாரும் எதுவும் பேசவில்லை. அமைதியாக இருந்தார்கள்.

"இந்த வருஷம் நாலாங்கர நெலத்துல ரெண்டாம் போகம் வெள்ளாம நடக்கணும்... தண்ணி நா என்னோட போர்லேருந்து குடுக்கப் போறேன்... ஆனா நாலாங்கர நிலத்துக்கும் என்னோட நிலத்துக்கும் எடையில உங்க நாலு பேரோட நெலமும் வேலி மாதிரி வழிமறிச்சுக்கிட்டுக் கெடக்கு... அதுனால உங்க நெலத்து வழியாத்தான் நாலாங்கரைக்குத் தண்ணி பாஞ்சாகணும்... நீங்க என்ன சொல்றிங்க?"

"மன்னிச்சிடுங்க மாப்ள... எங்களுக்கு இதுல விருப்பம் இல்ல..."

"ஏன்...?"

"எங்க விவசாயத்துக்குப் பாதிப்பு வரும்..."

"எப்படி...?"

"அ... அது... வந்து... "

"உங்களுக்கு எந்தப் பாதிப்பும் வராம... இன்னும் சொல்லப் போனா... உங்க வயல்ல என்னோட போர் தண்ணி ஈரம் கூடப் படாம பூமிக்குள்ள பத்தடி ஆழத்துல பைப்பப் பொதச்சு... தண்ணிய அந்தப் பக்கம் கொண்டு போக ஏற்பாடு செஞ்சுக்குறேன்... என்ன சொல்றிங்க...?"

"அதுக்கு நீங்க அவனுவளுக்கு அந்தப் பக்கம் போர் போட்டு குடுத்துடலாமே..." கோபால்சாமி கேட்டான்.

"அந்தப் பக்கம் அறநூறு அடி ஆழத்துல கூடத் தண்ணி சரியா இல்ல... இந்தப் பக்கத்துலேருந்து கனெக்க்ஷன் குடுத்துட்டா ஆத்து தண்ணியையும் திருப்பிவிடலாம்... ஆத்துல தண்ணி வராதப்ப போர் தண்ணிய தெறந்து விடலாம்... அந்தப் பக்கம் விவசாயம் செழிக்க நீங்க நாலுப் பேரும் ஒத்துழச்சுதான் ஆகணும்..." அவன் நேரடியாகவே நிர்பந்தித்தான்.

சிதம்பரத்திற்கு எரிச்சலாக வந்தது...

"இல்ல மாப்ள... நாங்க இதுக்கு ஒத்துக்க மாட்டோம்... இனிமே இதப் பத்திப் பேச நீங்க எங்களக் கூப்பிட வேண்டாம்..." பட்டென்று சொல்லியபடி எழுந்தார்.

ருத்ரன் முகத்தில் அடிவாங்கியதைப் போல் உணர்ந்தான். அவனுடைய ஈகோ தலைத்தூக்கியது. நாலாங்கரை பகுதி மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்கிற எண்ணத்தை விட... இந்தப் பக்கத்திலிருந்து தண்ணியை அந்தப் பக்கம் கொண்டு செல்வதில் தான் தன்னுடைய

மரியாதை இருக்கிறது என்று உறுதியாக நம்பினான். தன்னுடைய மரியாதையைக் காப்பாற்றிக் கொள்ள எதையும் செய்ய தயாராகிவிட்டான்.

## அத்தியாயம் - 3

**"ஆறு கடக்கிறவரையில் அண்ணன் தம்பி,**

**ஆறு கடந்தால் நீ யார்... நான் யார்?"**

சிதம்பரத்தின் கறார் பேச்சு ருத்ரனைச் சீண்டிவிட்டது. அவன் நாலாங்கரைக்கு மேட்டுவயலிலிருந்து தண்ணீர் கொண்டு செல்வதற்காக எதை வேண்டுமானாலும் செய்யத் தயாராகிவிட்டான். அதற்கு முதற்கட்டமாகத் தன்னுடைய பெரிய தாத்தா பேரனும்... தன்னுடைய ஒன்றுவிட்ட சகோதரனும்... நண்பனுமாகிய வைத்திலிங்கத்தைக் கைப்பேசியில் அழைத்தான்.

"ஹலோ... வைத்தி... எங்க இருக்க...?"

"டவுனுக்குப் போயிருந்தேன்... ஊருக்குத்தான் வந்துக்கிட்டு இருக்கேன்... ஆத்துப் பாலத்துகிட்ட வந்துட்டேன்.... என்ன விஷயம் ருத்ரா...?"

"சரி... நீ வீட்டுக்குப் போக வேண்டாம்... நேரா மேட்டு வயலுக்கு வந்துடு... அஞ்சு நிமிஷத்துல நானும் அங்க வந்துடுவேன். முக்கியமான விஷயம்.... லேட் பண்ணிடாத..."

"சரிப்பா... வண்டிய இப்புடியே மேட்டுவயப் பக்கம் திருப்பிடுறேன்..." அவனுடைய வண்டி ருத்ரனின் வயல்களில் ஒன்றான மேட்டுவயலை நோக்கிப் பறந்தது.

அடுத்தப் பத்தாவது நிமிடம் ருத்ரனின் முன் நின்ற வைத்திலிங்கம் அவன் சொன்ன விஷயத்தைத் தெளிவாகக் கேட்டுக் கொண்டான்.

"என்ன ருத்ரா இது... நீ கேட்டும் தண்ணிப் பாய வாய்க்கா குடுக்க மாட்டேன்னுட்டானுகளா...!"

ருத்ரன் பதில் சொல்லாமல் வெள்ளை வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு பனியனுடன் நின்றபடி... வரப்பில் நடப்பட்டிருந்த வாழைமரத்தில் காய்ந்துத் தொங்கிக் கொண்டிருந்த பட்டையைக் கத்தியை வைத்துக் கவனமாக நறுக்கிக் கொண்டிருந்தான்.

அவன் எதையோ யோசிக்கறான் என்று உணர்ந்த வைத்தி சிறிதுநேரம் அமைதியாக இருந்தான். பின் அவனே அமைதியைக் கலைத்துப் பேச

ஆரம்பித்தான்.

"என்ன செய்யலாம்...?"

"அவனுங்க தானா என்னுகிட்ட வந்து மண்டியிடணும்டா வைத்தி..."

"எப்புடி...? அவனுங்கதான் புடிவாதமா இருக்கானுவளே...!"

"பிடிவாதத்தையெல்லாம் நொறுக்கிட வேண்டியதுதான்..."

"என்ன சொல்ற...?" வைத்திக் குழப்பத்துடன் கேட்டான்.

"வைத்தி... ஏற்கனவே அவனுவளுக்குள்ள பேசி முடிவுப் பண்ணின விஷயத்த இன்னைக்கு என்னுகிட்ட வந்து ஒப்பிச்சிட்டுப் போறானுவ... இந்தக் கூட்டுக் களவாணிப் பயலுவள தனித்தனியா அடிக்கணும்டா..."

".........................."

"அவனுக நாலு பேர்ல என்னோட மொதோ குறி கலியபெருமாள் தான்... அவன் போன வருஷந்தானே அவனோட மேட்டுவயல வித்தான்...?"

"ஆமா... ஒரு பத்து ஏக்கர நாலு பேருக்கிட்ட தனித்தனியா வித்தான்... அதுக்கு என்ன இப்ப...?"

"பாட்டன் சம்பாரிச்ச பொதுச்சொத்த அண்ணனும் தம்பியும் பங்குப் பிரிச்சுகிட்டானுவ. பங்குப் பிரிச்சதுல தகராறு வந்து ரெண்டுபேரும் தனித்தனியா போயிட்டானுவ... அந்தக் கலவரத்துல பாகப்பிரிவினை பத்திரம் பதிஞ்ச மாதிரி எனக்குத் தெரியல..."

"பண்ணலன்னுதான் நெனக்கிறேன்..."

"அண்ணன் தம்பி சொத்துப் பிரச்சனைய வாய் வார்த்தையா முடிச்சுகிட்டவனுங்க எழுத்துல எதையும் உறுதிப்படுத்திக்கல. இந்த நெலமைல கலியபெருமாளு போன வருஷம் தன்னோட பங்கு நெலத்துல ஒரு பகுதிய வித்துருக்கான். இவன் வித்த நெலத்தப் பட்டா பண்ணும்போது வில்லங்கம் வராம இருக்கத் தம்பிய கூப்பிட்டுக் கையெழுத்துப் போட சொன்னானா...?"

"தெரியலையே..."

"சொல்லியிருக்க மாட்டான்... அவன் தம்பி மணிகிட்ட சொல்லி.... என்ன வந்து பாக்கச் சொல்லு..."

"ருத்ரா...!!!" வைத்தி ஆச்சர்யத்தில் விழி விரித்தான்.

ருத்ரன் முகத்தில் விஷமப் புன்னகையுடன் "ஆறு கடக்கிறவரையில்

அண்ணன் தம்பி, ஆறு கடந்தால் நீ யார் நான் யார்?" என்றான்.

###

அன்று காலை கலியபெருமாள் வயலுக்குச் செல்வதற்கு முன் இரண்டு மூன்று ஆண்களின் கலவையான குரல் வாசலிலிருந்து ஒலித்தது...

"கலியா... ஏம்ப்பா கலியா..."

"வீட்டுல யாரு... வாங்க வெளிய..."

"யாரது...?" என்றபடி கலியபெருமாள் வாசலுக்கு வந்தார்.

வாசலில் நான்கு ஆட்கள் ஆளுக்கொரு சைக்கிளை கையில் பிடித்தபடி நின்று கொண்டிருந்தார்கள்.

"வாங்க... வாங்க சுந்தரம்... என்ன எல்லாரும் ஒன்னா வந்துருக்கிங்க...? என்ன சமாச்சாரம்...?" சாதரணமாகக் கேட்டபடி அவர்களை வீட்டிற்குள் அழைத்துச் சென்றார் கலியபெருமாள்.

"என்னப்பா இது...? உன்னோட நெலத்த வாங்கி ஒரு வருஷம் கூட நாங்க விவசாயம் பண்ணல... அதுக்குள்ள உன் தம்பி பிரச்னையைக் கொண்டு வந்துட்டானே...!" வருத்தத்துடன் சொன்னார் வந்தவர்களில் மூத்தவராக இருந்த சுந்தரம்.

"தம்பியா...! அவன் என்ன பிரச்சனை பண்ணுறான்...?"

"கோர்ட்டுல கேசு குடுத்துட்டானாம்... அரசாங்கம் நாங்க யாரும் வயல்ல இறங்கக் கூடாதுன்னு உத்தரவுப் போட்டுடுச்சாம்... கையில ஒரு பேப்பர வச்சுகிட்டு எங்களுகிட்ட தகராறு பண்ணுறான்... நீ வந்து என்னான்னுக் கேளு... காலையிலையே வந்துட்டான் எங்க வேலையக் கெடுக்க..." எரிச்சலுடன் படபடத்தார் சுந்தரம்.

"என்ன சொல்றிங்க... எனக்கு ஒன்னும் புரியலையே... என்னோட நெலத்த நீங்க காசு குடுத்து வாங்குனிங்க. அது இப்ப உங்களோட நெலம். அதுல உங்கள இறங்க வேண்டாமுன்னு சொல்ல அவனுக்கு என்ன ரைட்டு இருக்கு...?"

"அதை ஏன் எங்களுகிட்டக் கேக்குற... அங்க வந்து உன் தம்பிய கேளு... கெளம்பி வா..." என்று பிடிவாதமாக அவரைக் கிளப்பி வயலுக்கு அழைத்துச் சென்றார்கள்.

###

"ஏய்... என்னடா பிரச்சன... எதுக்கு இவங்கக்கிட்ட தகராறு

பண்ணிக்கிட்டு இருக்க...?" வயலுக்கு வந்த கலியபெருமாள் தம்பியிடம் பாய்ந்தார்.

"இந்தா... சும்மா மெரட்டுற வேலையெல்லாம் வேண்டாம்... எனக்கும் இந்த நெலத்துல பங்கு இருக்கு... என்ன கேக்காம நீ எப்புடி இந்த நெலத்தையெல்லாம் விக்கலாம்...?"

"உன்ன கேக்கணுமா...! அடேய்... இது என்னோட பங்கு நெலம்டா... உனக்கும் இதே போல ஒரு பங்கு கீழக்கரப் பக்கம் இருக்கேடா... அப்பறம் எதுக்கு இப்ப பிரச்சனப் பண்ணுற...?"

"பங்கா... எந்தப் பங்கு...? எல்லா நெலமும் நம்ம ரெண்டு பேருக்கும் பொதுவானதுதான்... கீழக்கரப் பக்கத்துல இருக்க நெலத்துல நா வெவசாயம் பாக்குறேன்... இந்தப் பக்கம் இருக்கறத நீ வெவசாயம் பாக்குற... அவ்வளவுதான் எனக்குத் தெரியும்... நீ என்னடான்னா... எனக்குத் தெரியாம இவனுங்ககிட்ட நெலத்த வித்துருக்க...! அதான் கோர்ட்டுல கேசப் போட்டு ஸ்டே ஆர்டர் வாங்கிட்டேன். இனி கேஸ் முடியிற வரைக்கும் எவனும் நெலத்துல கால் வைக்க முடியாது... மீறினா உள்ள போக வேண்டியதுதான்..." அவரின் தம்பி பேசி முடிப்பதற்குள்...

"அடேய்... துரோகி... " என்று தன் தம்பி மீது பாய்ந்து அவன் சட்டையைக் கொத்தாகப் பிடித்தார். அண்ணன் தம்பி இருவருக்கும் கைகலப்பானது. சுற்றியிருந்தவர்கள் அவர்களைச் சிரமப்பட்டுப் பிரித்துவிட்டார்கள்.

"என்ன கலியா நீ... இவனுகிட்ட எடுத்துச் சொல்லி எங்கப் பிரச்னைக்கு வழி சொல்லுவன்னு பாத்தா... நீயும் உன் தம்பிக்கு இணையா சண்டைக்குக் கௌம்பிட்டியே..."

"இவன ஒரு கை பாக்காம விட மாட்டேன் சுந்தரம்... விட மாட்டேன்... இவனுக்கு என்னோட மல்லுக்கு நிக்கிறதே பொழப்பாப் போச்சு... இதுக்கு ஒரு முடிவுக் கட்டியே ஆகணும்..."

"கட்டு... கட்டு... கட்டுற முடிவ சீக்கிரம் கட்டு... கல்லக் கொடில்லாம் காஞ்சு வந்துட்டு... ரெண்டு நாளைக்குள்ள கல்லக்கொடியப் புடுங்க ஆரம்பிக்கலன்னா எங்களுக்கு நட்டமாயிரும்... பாத்துக்க..." என்று சொல்லிவிட்டு சுந்தரோடு சேர்ந்து கலியபெருமாளிடம் நிலம் வாங்கியிருந்த மற்ற மூவரும் அங்கிருந்து நகர்ந்துவிட்டார்கள்.

கலியபெருமாள் ஆடிப் போய்விட்டார். இரண்டு நாட்களுக்குள் இந்தப் பிரச்சனையைத் தீர்த்தாக வேண்டும். இல்லையென்றால் இந்த நிலத்தை விவசாயம் செய்தவர்களுக்கு நட்டம் வந்து சேரும் என்பது உறுதி...

ஒரு நொடி கூடத் தாமதிக்காமல் வக்கீலைத் தேடி நகரத்திற்குச் சென்றார்.

"மிஸ்டர் கலியபெருமாள். நீங்க வித்திருக்க நிலம் உங்களுக்கும் உங்கள் தம்பிக்கும் பொதுவானது. அவருடைய கையெழுத்தில்லாமல் நீங்கள் அதை விற்றது தப்புத்தான்..."

"ஐயையோ... இல்ல சார்... அந்த நெலம் எனக்குப் பங்குப் பிரிச்சுக் குடுத்த நெலம் சார்... என்னோட நெலத்தத்தான் நான் வித்தேன்..."

"பங்கு பிரித்தபோது பங்குப் பத்திரம் எழுதி ரிஜிஸ்டர் பண்ணினிங்களா...?"

"இல்லையே... வாய் வார்த்தையாதான் பிரிச்சுகிட்டோம்... "

"டாகுமென்ட் இல்லன்னா கோர்ட்ல எதுவும் செல்லாது சார்..."

"எங்க ஊர்ல எல்லாரும் இப்படித்தான் சார் பிரிச்சுக்குவாங்க. யாருக்கும் எந்தப் பிரச்சனையும் வந்ததில்ல... இவன்தான் சார் இப்படிப் புதுப் பூதத்தக் கௌப்பி இருக்கான்..."

"சரி... நீங்க ரெண்டுபேரும் பங்கு பிரித்துக் கொண்டதற்குச் சாட்சி இருக்கா...?"

"இருக்கு சார்... எங்க ஊர்ப் பெரியவங்கதான் பங்குப் பிரிச்சுவிட்டாங்க..."

"அப்படின்னா நீங்க அவங்கள வச்சே இந்தப் பிரச்னையை நேர் பண்ண பாருங்க. கோர்ட்ல ஒரு பெட்டிஷனப் போட்டு அறுவடைச் செய்ய அனுமதி வாங்க என்னால முடியும். ஆனா பிரச்சனை அத்தோட முடிஞ்சிடாது... இது சிவில் கேஸ்... வருஷக் கணக்குல இழுக்கும்... யோசனைப் பண்ணுங்க..."

வழக்கறிஞர் கலியபெருமாளுக்குச் சூழ்நிலையைத் தெளிவாகச் சொல்லிவிட்டார். அவர் சிந்தனையுடன் ஊர் வந்து சேர்ந்தார்.

இந்தப் பிரச்னையை எப்படிச் சரி செய்வது என்று அவருக்கு ஒரே குழப்பமாக இருந்தது. ஊர் பெரியவர்களிடம் நியாயம் கேட்கலாம் என்றால் ருத்ரனிடம் தான் செல்ல வேண்டும். ஒரு வாரத்திற்கு முன் நாலாங்கரைக்குத் தண்ணீர் பாய்ச்சுவதற்காக அவன் வாய்க்கால் கேட்டப் போது, முகத்தில் அடித்தது போல் 'முடியாது...' என்று சொல்லிவிட்டு இப்போது எப்படி அவனிடம் பஞ்சாயத்திற்குப் போய் நிற்பது என்கிற தயக்கம் அவரை அவனிடம் செல்லவிடாமல் தடுத்தது.

நாளுக்கு நாள் பிரச்சனை அதிகமாகிக் கொண்டே இருந்தது. நிலம் வாங்கியவர்கள் அவரை ஒவ்வொரு நொடியும் இம்சை செய்து கொண்டே இருந்தார்கள். தம்பியைச் சமாதானம் செய்யலாம் என்றால் அவன் பழைய பகையை மனதில் வைத்துக் கொண்டு வஞ்சம் தீர்த்துக் கொள்வதிலேயே குறியாக இருக்கிறான். ருத்ரனைத் தவிர மற்ற ஊர் பெரியவர்களிடம் நியாயம் கேட்கச் சென்றால்... அனைவரும் சொல்லி வைத்தது போல் ருத்ரனிடம் ஒரு வார்த்தை சொல்லிவிடுமாறு அறிவுரை கூறுகிறார்கள். அது அந்த ஊரின் வழக்கம் என்பதால் அவரால் அதற்கு மேல் யாரையும் வற்புறுத்த முடியவில்லை. சட்டத்திலும் இந்தச் சிக்கலை அவருக்குச் சாதகமாகத் தீர்க்க வழியில்லை.

எல்லாக் கதவுகளும் அடைப்பட்டு விட்ட நிலையில் அவர் வேறு வழியின்றி ருத்ரனைத் தேடிச் சென்றார்.

## அத்தியாயம் - 4

"கணக்கன் கணக்கறிவான் தன் கணக்கைத் தான் அறியான்"

தன் பிரச்னையைச் சுமூகமாகத் தீர்த்து வைக்க வேண்டி ருத்ரனைத் தேடி அவனுடைய வீட்டிற்கு வந்த கலியபெருமாளுக்கு அவன் மேட்டுவயலுக்குச் சென்றிருப்பதாகத் தகவல் கிடைத்தது.

அவனைத் தேடி அங்குச் சென்றார். அங்கே, அவன் தோப்பில் இருப்பதாகத் தகவல் கிடைத்தது. தோப்பிற்குச் சென்று பார்த்தார். அவன் சோலையூரை அடுத்துள்ள டவுனிற்குச் சென்றிருப்பதாகவும் மாலை மூன்று மணிக்குத் தான் மீண்டும் வருவான் என்றும் அறிந்துகொண்டு வீட்டிற்குச் சென்றார்.

ஊரெல்லாம் ருத்ரனைத் தேடியலைந்து களைத்து வீட்டிற்குச் சென்று தாகத்தைத் தணிக்க மனைவியின் கையால் ஒரு சொம்பு நீர்மோரை நிம்மதியாக அருந்துவதற்குள், நிலத்தை வாங்கியவர்கள் வீட்டுவாசலில் வந்து நின்றார்கள். அவர்களுக்குக் கும்பிடுப் போட்டுப் பதில் சொல்லி அனுப்பிவிட்டு, எப்போதடா மாலை மூன்று மணியாகும் என்று கடிகாரத்தைப் பார்த்த வண்ணம் அமர்ந்திருந்து, சரியாக இரண்டே முக்காலுக்கெல்லாம் ருத்ரனின் தோப்பிற்குக் கிளம்பிவிட்டார்.

"மாப்ள... எங்க இன்னும் அவரக் காணும்...?" என்று ருத்ரனின் அண்ணன் பீமனிடம் கேட்டார்.

"பொறுமையா இருங்க மாமா... தம்பி சரியா மூணு மணிக்கு வந்திடும்..." பீமன் அவருக்குச் சமாதானம் சொன்னான்.

தோப்பு வீட்டுச் சுவற்று ஆணியில் மாட்டியிருந்த பீமனின் வெள்ளை சட்டையின் பாக்கெட்டிலிருந்து அவனுடைய கைப்பேசி அழைத்தது. நாடாக் கட்டிலிலிருந்து எழுந்துச் சென்று கைப்பேசியை எடுத்துப் பார்த்தான்.

"தம்பி தான் மாமா..." என்று சொல்லியபடி கைப்பேசியைக் காதில் வைத்துப் பேசினான்.

"சரி தம்பி..."

"...................."

"சரிப்பா..."

"...................."

"சரி... சரி..."

"...................."

"ம்ம்ம்.... சரி... வச்சிர்றேன்..." என்று பேச்சை முடித்துட்டு கலியபெருமாளின் பக்கம் திரும்பிச் சொன்னான்...

"மாமா... தம்பி வீட்டுக்குப் போயிட்டு... நீங்க அங்க போய்ப் பாருங்க..." என்று சொல்லி தன் வீட்டிற்கு அனுப்பி வைத்தான்.

ருத்ரன் தன்னை வேண்டுமென்றே அங்குமிங்கும் அலைய விடுகிறான் என்கிற உண்மை புரியாமல் வெள்ளந்தியாக முதல்தெருவில் இருக்கும் ருத்ரனின் வீட்டிற்கு விரைந்தார் அவர்.

# # #

வீட்டிற்கு வந்த கலியபெருமாளை இன்முகமாக வரவேற்று... நலம் விசாரித்து... டீ கொடுத்து உபசரித்து... பதட்டம் குறைந்து அவர் நிதானத்திற்கு வந்த பிறகு,

"சொல்லுங்க மாமா... காலையிலேருந்து என்ன வெரட்டிக்கிட்டே இருக்கிங்களாமே... என்ன விஷயம்...?" என்று விசாரணையை ஆரம்பித்தான் ருத்ரன்.

அவர் தன்னுடைய பிரச்சனையை விலாவாரியாக அவனிடம் சொன்னார்.

"இதுதான் மாப்ள இப்ப பிரச்சன... ஒரு மழை வந்தா கல்லக்கொடியெல்லாம் நாசமாப் போயிரும்... நீங்க தான் தலையிட்டு இந்தப் பிரச்சனைய தீக்கணும்..."

அவன் அவருக்கு எந்தப் பதிலும் சொல்லாமல் தாடையைத் தடவி... தலையைக் கோதி... எழுந்து அதே அறையில் குறுக்கும் நெடுக்குமாக இரண்டுமுறை நடந்து... எதையோ சிந்தனைச் செய்துவிட்டுக் கடைசியாகச் சொன்னான்...

"உங்க பிரச்சனயை நான் தீர்த்து வச்சா நான் கேக்கறத நீங்க கொடுக்கணும்..."

அவருக்குப் பகீர் என்று ஆனது. நியாயம் தீர்த்து வைப்பதற்கு இது போல் பேரம் பேசும் வழக்கம் அந்த ஊரில் இல்லவே இல்லை... ருத்ரனுடைய இந்தப் புதுவிதப் பேச்சு அவரைக் கலவரப்படுத்தியது.

"என்ன மாப்ள...? என்ன கேக்கப் போறீங்க...?" அவர் குரலே எழும்பாமல் கேட்டார்.

"உங்களோட நாலாங்கர வயல எனக்குப் பத்திரம் பண்ணிக் குடுங்க..."

"என்னது...!!!" அவர் அதிர்ந்து எழுந்தார்.

"எதுக்கு இவ்வளவு அதிர்ச்சி...? நீங்க எனக்குச் சும்மா ஒன்னும் குடுக்க வேண்டாம்... நெலத்துக்கு உண்டான பணத்த வாங்கிக்கங்க... இல்லன்னா உங்க வயலுக்கு ஈடா என்னோட நெலத்துல மேட்டுவய பக்கமா எழுதித் தர்றேன்..."

"என்ன மாப்ள... இப்புடியெல்லாம் பேசுறிங்க... இதெல்லாம் உங்களுக்கே நல்லா இருக்கா... உங்க தரத்துக்கு நீங்க இப்புடியெல்லாம் பேசக் கூடாது மாப்ள..."

அவன் அவரைப் பார்த்து ஒரு சிரிப்புச் சிரித்தான். அந்தச் சிரிப்பில் இருந்த கேலி அவருக்குச் சந்தேகத்தை எழுப்பியது...

"மாப்ள... நீ...ங்க... நீங்க எதுவும் என் தம்பிக்கிட்ட..." அவர் முடிக்க முடியாமல் தடுமாறினார்.

அவன் அவருடைய தடுமாற்றத்தை நிதானமாக உள்வாங்கிக் கொண்டு அவருடைய கண்களை நேருக்குநேர் பார்த்து... "ஆமா... உங்க தம்பி தானா எதையும் செய்யல... நான் தான் செய்ய வச்சேன்..." என்றான்.

அவர் அமர்ந்திருந்த நாற்காலியிலிருந்து பட்டென்று எழுந்தார்.

"நீங்க இவ்வளவு இறங்குவிங்கன்னு நான் நெனக்கல..." என்றார் கோபத்தை அடக்கியபடி.

"வேற என்ன செய்யணுங்கறிங்க... உங்ககிட்ட வந்து கெஞ்சிக்கிட்டு நிக்கணுமா...? நடக்காது..." என்று உக்கிரமாகச் சொன்னவன்... அடுத்த

நொடியே அமைதியாக "சரி... எப்ப பத்தரப் பதிவு வச்சிக்கலாம்.." என்றான் எதுவுமே நடக்காதது போல்.

"தர மாட்டேன்... என்னோட நெலத்த நான் யாருக்கும் குடுக்க மாட்டேன்..." என்று அவருடைய மனம் அலறினாலும்... வெளியே தன்னை அமைதியாகக் காட்டிக் கொண்டு

"நான் நெலத்த எழுதிக் குடுக்கலன்னா என்ன செய்விங்க...?" என்றார் நிதானமாக.

"உங்க தம்பி உங்க மேல போட்டிருக்க கேஸ் ஒரே மாசத்துல முடியிறதுக்கு என்ன செய்யணுமோ அதச் செய்வேன். கோர்ட் மூலம் உங்களுக்கு மறுபடியும் பங்குப் பிரிக்கும் போது... எனக்குத் தேவையான நெலம் உங்க தம்பி பக்கம் போற மாதிரி பாத்துக்குவேன்... அப்பறம் அவருகிட்டேருந்து என் கைக்கு மாத்திக்கிறது ஒன்னும் சிரமமா இருக்காதுன்னு உங்களுக்கே தெரியும்..." என்று அவருக்கு செக் வைத்தான்.

தன்னை எந்தப் பக்கமும் நழுவ விடாமல் கார்னர் பண்ணிவிட்டான் என்பதைப் புரிந்து கொண்டவர் வீம்பு பிடிக்காமல்

"நாளைக்கே பத்திரப் பதிவ வச்சுக்கலாம்... வயல்ல அறுவடைச் செய்ய உடனே ஆரம்பிக்கணும். அவனுகிட்டச் சொல்லிப் பிரச்சனை எதுவும் பண்ண வேண்டாமுன்னு சொல்லிடுங்க..." என்று சொல்லிவிட்டு பாரமான மனதுடன் வீடு வந்து சேர்ந்தார்.

###

கலியபெருமாள் தன்னுடைய நிலத்தை ருத்ரனுக்குப் பத்திரம் செய்து கொடுத்துவிட்டு அதற்கு ஈடாக அவனிடமிருந்து பணம் வாங்கிக் கொண்டார். இது நடந்த இரண்டாவது நாள் பழையபடி சிதம்பரத்தின் தென்னந்தோப்பில் பங்காளிகள் நால்வரும் கூடினார்கள்.

"நீ இப்புடி செய்வன்னு நா நெனக்கவே இல்ல கலியா... எங்களையெல்லாம் ஏமாத்திப்புட்டப்பா..."

"இல்ல பங்காளி... எனக்கு வேறவழி இல்ல... எல்லாப் பக்கமும் மடக்கிப்புட்டான். எப்புடியும் என்னோட நெலத்த என்கிட்டேருந்து பறிக்கிறதுன்னு முடிவு பண்ணிட்டான். அவனுகிட்ட போராடுறதுக்குத் தெம்பில்லன்னு தெரிஞ்சுடுச்சுன்னா வெலகிட வேண்டியது தான்... அதத்தான் நான் செஞ்சேன்..."

"ஒன்னுகிட்டேருந்து நெலத்த வாங்கிட்டாப் போதுமா... நாங்க

மூணுபேரும் சம்மதிக்கலைன்னா நாலாங்கரைக்குத் தண்ணிப் பாயாது... பாத்தர்றேன்... நானா அவனான்னு..." சிதம்பரம் சூளுரைத்தார்.

"பங்காளி... சொல்லுறேன்னு தப்பா நெனக்காதிங்க... அவனோட சூது... மந்திரமெல்லாம் சுட்டுப் போட்டாலும் நமக்கு வராது... பேசாம தண்ணி விடுறேன்னு சொல்லிட்டு உங்க நெலத்தக் காப்பாத்திக்கங்க... இல்லன்னா ஒரேடியா உங்களுவ நெலத்தையும் புடிங்கிடுவான். எனக்காவது பணத்தக் குடுத்து செட்டில் பண்ணினான். உங்களுக்கெல்லாம் அதையும் குடுக்க மாட்டேனுட்டான்னா ஒன்னும் செய்ய முடியாது... சொல்லிப்புட்டேன்..."

"யோவ்... என்னய்யா பூச்சாண்டிக் காட்டுற... அவன் உன் நெலத்த வாங்கினானா... இல்ல உன்னையே வாங்கிட்டானா... வந்துட்டான் ஞாயம் பேச... உன்னோட நெலத்தப் புடுங்குன மாதிரி எங்ககிட்ட வாலாட்ட முடியாது... எங்கப் பிரச்சனைய நாங்க பாத்துக்குறோம்... நீ கெளம்பு..." சிதம்பரம் கோபமாகப் பேச... மற்ற இருவரும் கோபத்தை வார்த்தைகளில் காட்டாமல் முகத்தில் காட்டியபடி அமர்ந்திருக்க... ‘உங்க விதிய யாரால மாத்த முடியும்... அனுபவிங்க...’ என்று சொல்லாமல் சொல்லிவிட்டு கலியபெருமாள் அங்கிருந்துச் சென்றார்.

அதன்பிறகு மீதமிருந்த பங்காளிகள் மூவரும் என்ன பிரச்சனை வந்தாலும்... மிரட்டல் வந்தாலும்... தங்களுடைய நிலத்தை ருத்ரனுக்குக் கொடுக்கக் கூடாது என்கிற உறுதியை எடுத்துக் கொண்டார்கள்.

இவர்கள் மூவரும் இங்குச் சபதமெடுத்துக் கொண்டிருக்கையில், அவர்களில் ஒருவரான நாராயணமூர்த்திக்கு ஆப்பை தயார் செய்துவிட்டான் ருத்ரன்.

###

நாராயணமூர்த்திக்கு மற்றப் பங்காளிகளைப் போல் நிலம் அதிகம் கிடையாது. ஆனால் மனைவியின் விருப்பப்படி மாளிகை போல் வீட்டை இழைத்து வைத்திருந்தார். அந்த வீட்டிலும், வீட்டைச் சுற்றி உள்ள தோட்டத்திலும் தான், அவர் மனைவியுடைய சந்தோஷமே இருக்கிறது. தனது சக்திக்கு மீறி நாற்பது லட்சம் செலவு செய்து ஒரு அழகிய வீட்டை அந்தக் கிராமத்தில் கட்டியிருந்தார். ஆனால் அவ்வளவு செலவு செய்வதற்கு முன் ஒரு முக்கியமான விஷயத்தைக் கவனிக்கத் தவறிவிட்டார்.

அவர் தன்னுடைய பூர்வீகமனையில் தான் வீட்டைக் கட்டினார். காலங்காலமாகப் புழங்கி வந்த பூர்வீகமனை என்பதால் அந்த மனையில்

ஏதேனும் வில்லங்கம் இருக்கிறதா என்பதைச் சரிபார்க்காமல் அவ்வளவு பெரிய தொகையை அந்த இடத்தில் கொட்டி வீடாக எழுப்பியவருக்குத் தெரியவில்லை... அவருடைய வீட்டு வாசலிலிருந்து மெயின் ரோட்டிற்குச் செல்லும் மண்சாலையை அடைய... ருத்ரனுடைய தாத்தா அந்தக் காலத்தில் வாங்கிப் போட்ட ஐந்து செண்டு மனையைக் கடந்துதான் வர வேண்டும் என்பது...

(ருத்ரன் தன்னை எந்த வகையிலும் தாக்க முடியாது என்று இறுமாப்போடு இருந்தவருக்குத் தெரியவில்லை... தாங்கள் மூன்று தலைமுறையாக மெயின் ரோட்டிற்குச் செல்லும் பாதையாக பயன்படுத்தி வரும் மண்சாலை, ருத்ரனுடைய தாத்தா அந்தக் காலத்தில் வாங்கிப் போட்ட ஐந்து செண்டு மனையின் ஒரு பகுதி என்று. கணக்கன் கணக்கறிவான், தன் கணக்கைத் தான் அறியான் என்பது இவர் விஷயத்தில் உண்மையானது)

ருத்ரனின் குடும்பத்தினர் அந்த மனையை வாங்கிப் போட்டதோடு மறந்துவிட்டார்கள். அனாமத்தாகக் கிடந்த இடத்தில் ஒரு சிறு பகுதியைப் பாதைக்காக நாராயணமூர்த்தியின் குடும்பம் மூன்று தலைமுறையாகப் பயன்படுத்திக் கொண்டிருந்தது. இன்றுவரை அதில் எந்தப் பிரச்சனையும் எழுந்ததில்லை.

ருத்ரன் தன்னை எந்த வகையிலும் தாக்க முடியாது என்று இறுமாப்போடு இருந்தவருக்குத் தெரியவில்லை அனாமத்தாகக் கிடக்கும் இடம் ருத்ரனுக்குச் சொந்தமானது என்பதோடு தங்கள் வீட்டிற்கும்... தெருவின் மண்சாலைக்கும் இடையில் அமைந்திருக்கும் பாதையும் அவனுக்குச் சொந்தமானதுதான் என்பது.. கணக்கன் கணக்கறிவான் தன் கணக்கைத் தான் அறியான் என்பது இவர் விஷயத்தில் உண்மையானது.

நகரங்களில் பிரிப்பது போல் முறையாகச் சாலைவசதியுடன் மனைகள் பிரிக்கப்படாததால் கிராமங்களில் அவ்வப்போது எழும் பாதை பிரச்சனை தான் நாராயணமூர்த்தியைத் தாக்குவதற்கு ருத்ரனுக்கு ஆயுதமானது.

###

வண்டி வண்டியாகத் தன்னுடைய வீட்டிற்கு முன் வந்து இறங்கும் மணலும்... செங்கல்லும்... சிமெண்டும்... ஜல்லியும்... நாராயணமூர்த்தியைக் குழப்பியது. அவர் வண்டிக்காரர்களை நிறுத்தி விபரம் கேட்டார். அவர்கள் ருத்ரனின் பெயரைச் சொன்னார்கள்.

அவனுடைய பெயரைக் கேட்டதும் உடலில் குளிர் பரவியது...

"எ... எதுக்கு... இங்க...? என்ன வேல...?" என்று தடுமாற்றத்துடன் மீண்டும் விசாரித்தார்.

"அவரு மன இங்க இருக்காமே... சுத்துச்சுவரு எழுப்ப... கல்லு மண்ணெல்லாம் எறக்கச் சொல்லியிருக்காரு..." என்று சொல்லிவிட்டு அவன் தன்னுடைய வேலையைக் கவனித்தான்.

'அவன் மனைக்குச் சுவர் எழுப்புறதுக்கு... அவனோட மனையில... நடுவுல கொண்டு போயி சாமான எறக்காம... இங்க... இவ்வளவு தூரம் தள்ளி... நம்மளோட பாதையில எதுக்குக் கொண்டுவந்து எறக்கச் சொல்லியிருக்கான்...! பாதையில அரையடி... இல்லன்னா ஒரடி ஆக்கிரமிப்புச் செய்யப் போறானோ... அப்படி எதுவும் பண்ணிட்டான்னா மாட்டுவண்டி உள்ள வரமுடியாதே...!' என்று அவர் மனம் பலவற்றையும் சிந்தித்துக் கொண்டிருக்கையில்...

இரண்டு அரசு அதிகாரிகள் இடத்தை அளந்து நூல் கட்டி கொண்டிருந்தார்கள். நாராயணமூர்த்திக்குச் சர்வமும் ஒடுங்கிவிட்டது. ஏனெனில் அவர்கள் நூல் கட்டியது அவருடைய பாதையும் சேர்த்துதான்.

"சார்... சார்... என்ன சார் இது... எதுக்கு சார் பாதை அடச்சு நூல் கட்டுறிங்க...?"

"இந்த எல்லையிலேருந்து அந்த மஞ்ச கம்பு நட்டிருக்குப் பாருங்க... அதுவரைக்கும் ருத்ரன் அய்யா வீட்டு எடம்தான்... நீங்க பயன்படுத்திக்கிட்டு இருக்கற பாதையும் அடிபடுது..." என்று சொல்லி அவர் தலையில் ஒரு பெரிய வெடிகுண்டைத் தூக்கிப் போட்டார்கள்.

அவர் செய்வதறியாதுத் திகைத்து நிற்கும் பொழுதே அவருடைய மனைவி அழுது ஆர்ப்பாட்டம் செய்ததால் தெரு கூடிவிட்டது.

நாராயணமூர்த்தி, சிதம்பரம், கோபால்சாமி அனைவரும் தெற்குத் தெருவை சேர்ந்தவர்கள். அந்தத் தெருவில் கிட்டத்தட்ட அனைவரும் பங்காளிகள். ஏதாவது ஒரு விதத்தில் ஒருவருக்கொருவர் சொந்தங்களாக இருந்தார்கள். ருத்ரன் முதல் தெருவை சேர்ந்தவன். அவன் அங்கிருந்து வந்து தங்களுடைய தெருவில் ஆக்கிரமிப்புச் செய்வதை அங்கிருந்த யாரும் விரும்பவில்லை. அதனால் அந்தத் தெருவாசிகள் அனைவரும் நாராயணமூர்த்திக்கு ஆதரவாகப் பேசினார்கள்.

வேலைச் செய்ய வந்தவர்களை வேலைச் செய்யவிடாமல் தடுத்தார்கள்.

பத்துபேர் கூட்டமாகத் திரண்டு ருத்ரனின் வீட்டிற்கு வந்தார்கள்.

அதை எதிர்பார்த்துக் காத்திருந்த ருத்ரனோ அவர்களை அசால்ட்டாக எதிர்கொண்டான்.

"என்ன விஷயமா எல்லாரும் கூட்டமா தெரண்டு வந்திருக்கிங்க...?" அனைவரையும் அமர வைத்து நிதானமாகக் கேட்டான்.

"அது ஒன்னுமில்ல மாப்ள... உங்க ஆளுங்க வந்து அங்க நாராயணமூர்த்தியோட பாதைய அடச்சு நூலு கட்டிட்டாங்க. அதான் உங்ககிட்ட அதப்பத்தி பேசிட்டுப் போகலாமுன்னு வந்தோம்..." சிதம்பரம் பேச்சை ஆரம்பித்தார்.

"என்னோட எடத்த அளந்து தானே நூல் கட்டச் சொன்னேன்... "

"அதா(ன்)... அதா(ன்)... ஆனா... உங்க எடம் அவனோட பாதைய அடச்சாப்ள இருக்கு..." கூட்டத்தில் இருந்த மற்றொரு பெரியவர் பேசினார்.

"அதுக்கு...?"

"இவனுக்குப் பாதைய நீங்க விட்டுக் குடுக்கணும்... பாவம் ரொம்பச் செலவுப் பண்ணி வீட்டக் கட்டிப்புட்டான்... அதுக்குப் போகவர பாத இருக்கான்னு பாக்கல மடப்பய..."

"விட்டுக் குடுக்கணுமா...! ஹா... நான் எதுக்கு விட்டுக் குடுக்கணும்...?" அலட்சியமாகக் கேட்டான்.

யார் யாரோ எதையெதையோ எடுத்துச் சொன்னார்கள்... அவன் எல்லாவற்றையும் பொறுமையாகக் கேட்டுவிட்டுக் கடைசியாக விட்டுக்கொடுக்க முடியாது என்று தெளிவாகச் சொன்னான்.

வந்தவர்கள் வெறுத்துப் போனார்கள். இவ்வளவு நாளும் அவன் மீது அவர்களுக்கிருந்த மதிப்பு சிறிது தொய்வடைந்தது. ஆனாலும் அவனிடம் கடுமைக் காட்ட முடியவில்லை. காட்டினால் பயன் எதிர்மறையாகத்தான் இருக்கும் என்பது அவர்களுக்கு உறுதியாகத் தெரிந்தது.

பஞ்சாயத்தை அவனுடைய பாட்டி வள்ளியம்மாளிடம் எடுத்துச் சென்றார்கள். பாட்டி நாராயணமூர்த்திக்கு ஆதரவாகப் பேசினார்கள். எல்லோரும் நிம்மதி பெருமூச்சு விட்டார்கள். பிரச்சனை முடிந்துவிடும் என்றும் நினைத்தார்கள். ஆனால் அவர்கள் நினைத்தபடி எதுவும் நடக்கவில்லை.

எப்பொழுதும் பாட்டியின் பேச்சைக் கேட்டு நடக்கும் ருத்ரன் இந்தமுறை அவரை அடக்கிவிட்டான்.

"ஆச்சி... இந்தப் பிரச்சனைல நீ தலையிடாத... எத எப்படி முடிக்கணுமுன்னு எனக்குத் தெரியும்... எல்லாம் நல்லபடியா முடியும்..." என்று பாட்டியின் பேச்சிற்கு முற்றுபுள்ளி வைத்துவிட்டான்.

அனைவரும் விக்கித்துப் போனார்கள். எதுவும் பேச முடியாமல்... ருத்ரனின் மீதான கையாலாகா கோபத்துடன் அங்கிருந்துச் சென்றார்கள்.

###

நாராயணமூர்த்தியின் மனைவி ஒப்பாரி வைத்து ஊரைக் கூட்டினாள். தெருவில் உள்ள பங்காளிகளும் சுற்றமும் "மோசம் போயிட்டியேடா நாராயணா..." என்று அவரைப் பயமுறுத்தினார்கள். வீட்டுவாசலில் அடுக்கியிருந்த செங்கல்லும்... கொட்டியிருந்த மணலும் அவர் வயிற்றில் புளியைக் கரைத்தன. சிதம்பரத்திடம் இதைப்பற்றிப் பேசினால்... 'கேஸ் போடலாம்...' என்கிறார்.

“என்றைக்கு கேஸ் போட்டு... அது என்றைக்கு விசாரணைக்கு வந்து... தீர்ப்பு வருவது... அப்படியே தீர்ப்பு வந்தாலும் நமக்குச் சாதகமாகத் தீர்ப்பு வருமா என்பது சந்தேகம்தான்...” என்றெல்லாம் யோசித்தவர், வேறு வழியின்றித் தானே ருத்ரனிடம் சென்றார்.

அவனோ ‘நாலாங்கரப் பக்கம் இருக்கற உங்களோட நிலம் எனக்கு... உங்க வீட்டுக்கு முன்னாடி இருக்கிற என்னோட கட்டுமனை உங்களுக்கு... டீலா...? நோ டீலா...?’ என்கிற ரேஞ்சில் சுருக்கமாகப் பேசினான்.

‘நோ டீல்...’ என்று சொல்லும் நிலையில் நாராயணமூர்த்தி இல்லை என்பதால் உடனடியாக நிலத்தை அவன் பெயரில் மாற்றிக் கொடுக்கச் சம்மதித்துவிட்டார்.

## அத்தியாயம் - 5

"கல்லாடம் [நூல்] படித்தவனோடு மல் ஆடாதே"

சோலையூர் கிராமத்திலிருந்து கல்லூரிக்கும் தனியார் பள்ளிக்கும் செல்லும் மாணவ மாணவிகள்... ஊருக்குள்ளிருந்து மெயின்ரோடு வரை சைக்கிளில் வந்து அங்கிருக்கும் டீக்கடை அல்லது பெட்டிக்கடைகளில் தங்களது சைக்கிளை விட்டுவிட்டுப் பேருந்தில் பக்கத்து டவுனிற்குச் செல்வார்கள். அப்படித்தான் சகோதரிகளான மான்விழியும் காவியாவும்

இரண்டு சைக்கிளில் ஊருக்குள்ளிருந்து வந்து கொண்டிருந்தார்கள்.

"காவியா... நாலு நாளைக்கு முன்னாடி நம்ம நாராயணன் சித்தப்பா வீட்டுக்குப் போற பாதைய அடச்சு காம்பௌண்ட் கட்டப்போறேன்னு தகராறு பண்ணினானே... அவன் யாருன்னு உனக்குத் தெரியுமா...?" மான்விழி தன் தங்கையைக் கேட்டாள்.

"முதல்தெரு... பெரியவீட்டுல ஒரு ஆத்தா இருப்பாங்கல்ல... அவங்களோட பேரனாம்டி..."

"அது தெரியும்டி... அந்தக் கெழவிக்கு மூணு பேரனாச்சே... அதுல எந்தப் பேர(ன்) இப்புடிச் சண்டித்தனம் பண்ணிக்கிட்டுத் திரியிறா(ன்)...

"ரெண்டாவது பேரன்டி... ஒசரமா... புல்லட்டுல போவானே... நீ பாத்ததுல்ல...?"

"இல்லையேடி..."

"பாத்ததுல்லையா...!" ஆச்சர்யமாகக் கேட்டாள் காவ்யா...

"ம்ஹூம்..." அசால்ட்டாகப் பதில் சொன்னாள் மான்விழி.

"அவன் நம்ம தெருப்பக்கம் அதிகம் வரமாட்டான்டி... ஆனா பஸ் ஏறப்போகும் போது சாவடிப் (சத்திரம்) பக்கத்துல அடிக்கடி பாத்துருக்கேன். இனி பாத்தா உனக்கும் காட்டுறேன் பாரு..."

"ஏய்... அவன் என்ன பொருட்காட்சியில இருக்க அதிசயப்பொருளா... எல்லாரும் வாயத் தெறந்துகிட்டுப் பாக்க... ஆமா... அவனையெல்லாம் நீ எதுக்குடிப் பாக்குற...?"

"ஆள் நல்லா இருந்தா கண்ணுப் பாக்கத்தான் செய்யும்... அதையெல்லாம் ஏன் எதுக்குன்னு கேள்விக் கேட்டுக்கிட்டு இருப்பியா... போடி..."

"அக்காகிட்டப் பேசுற மாதிரியாடி, பேசுற நீ...?"

"அக்காவா...! நீ என்னோட ஃபிரன்ட் மாதிரி மானு..."

"ஆனா ஃபிரன்ட் இல்ல... அக்காதா(ன்)... ஞாபகம் வச்சுக்க..."

"இதெல்லாம் நீ அவனப்பத்தி என்னுகிட்ட கேக்குறதுக்கு முன்னாடி நெனச்சிருக்கணும்..." என்று காவியா பதில் சொல்லவும் அவர்கள் மெயின் ரோட்டை அடையவும் சரியாக இருந்தது.

இருவரும் முறைப்புடன் தங்களின் சைக்கிளை ஓரமாக நிறுத்திவிட்டுப் பூட்டினார்கள்.

தூரத்தில் பஸ் வந்தது. பேருந்திற்காகக் காத்திருந்த மாணவிகள் அனைவரும் முண்டியடித்துக் கொண்டு ஏறினார்கள். காவியாவும் மான்விழியும் ஏறி சீட்டைப் பிடித்து அமர்ந்துவிட்டாகள். ஜன்னலோரம் அமர்ந்திருந்த காவியா ருத்ரனின் புல்லெட் தங்கள் பேருந்தைக் கடப்பதைக் கவனித்துவிட்டு... நொடி கூடத் தாமதிக்காமல் "மானு... மானு... இங்க பாருடி..." என்று தன்னருகில் அமர்ந்திருந்த சகோதரியை வெளிப்பக்கம் பார்க்கும்படி சொன்னாள்.

"என்னடி...?"

"அவன்...டி..."

எவன் என்கிற விளக்கம் அவளுக்குத் தேவைப்படவில்லை... தன்னையறியாமல் தலையை வெளிப்பக்கம் நீட்டிப் பார்த்தாள். அந்த புல்லெட் பேருந்தைக் கடந்துவிட்டிருந்தது. இவள் இன்னும் நன்றாகத் தலையை வெளிப்பக்கம் நீட்டிப் பார்த்தாள். அவன் முதுகை மட்டும் பார்க்க முடிந்தது. ஆனால் அவன் அவளுடைய முகத்தைக் கண்ணாடி வழியாக நன்றாகப் பார்த்தான்.

'யார் இந்தச் சின்னப்பொண்ணு... இப்படி வெவரமே இல்லாம தலைய வெளிய நீட்டிகிட்டு இருக்காளே...!' என்று சட்டென்று எழுந்த பொறுப்புணர்ச்சியில் வண்டியை ஓரம் கட்டிவிட்டு பேருந்தைத் திரும்பிப் பார்த்தான்.

"யாரும்மா... அது... தலைய வெளிய நீட்டுறது... உள்ள வாம்மா..." நடத்துனரின் குரல் அதட்டியதில் அவள் தலையை உள்ளே இழுத்துக் கொண்டாள்.

ருத்ரனின் முகத்தை அவள் பார்க்கவில்லை. அவனும் முன்பு வெளியே நீட்டியிருந்த தலை இப்போது இல்லை என்றதும் வண்டியைக் கிளப்பினான்.

ஒரு நொடி மட்டும் கண்ணாடியில் பார்த்த அந்த முகம்... சிறிதுநேரம் அவன் நினைவில் வந்து கொண்டிருந்தது.

'இந்த மூஞ்சிய இதுக்கு முன்னாடி பார்த்துருக்கமா...? யாரு வீட்டுப் பொண்ணுன்னு தெரியலையே...! என்ன இருந்தாலும் நம்ம ஊர் பொண்ணுங்க அழகுதா(ன்)ய்யா...' என்று பொதுப்படையாக நினைத்துவிட்டு வண்டி ஓட்டுவதில் கவனமானான்.

###

கடந்த இரண்டு நாட்களாக கோபால் மிகவும் பரபரப்பாக இருந்தான்.

இரண்டு பேரின் நிலத்தைப் பறித்துவிட்ட ருத்ரன் எந்த நேரமும் தன்னுடைய நிலத்தையும் அபகரிக்கக் கூடும் என்கிற எச்சரிக்கை உணர்வில் தன்னுடைய சொத்தில் உள்ள வில்லங்கங்களை ஒரு வழக்கறிஞரின் உதவியுடன் சரி பார்த்துக் கொண்டிருந்தான். இன்றுதான் அனைத்து வேலைகளையும் முடித்துவிட்டு "அப்பாடா..." என்று அசந்து அமர்ந்தான். ஆனாலும் மனதிற்குள் ஒரு குறுகுறுப்பு இருந்து கொண்டே இருந்தது. நினைத்ததை முடிக்கும் திறமை கொண்ட ருத்ரனைத் தன்னால் அவ்வளவு சுலபமாகத் தோற்கடித்துவிட முடியுமா என்கிற சந்தேகம் அவனை நிம்மதி இழக்கச் செய்துவிட்டது.

அவன் சிந்தனையில் மூழ்கியிருக்கும் பொழுது மேஜை மீதிருந்த கைப்பேசி அழைத்தது... எழுந்துச் சென்று கைப்பேசியை எடுத்து அழைப்பது யார் என்று பார்த்தான். அழைத்தது தீபா... பக்கத்துக் கிராமத்தில் உள்ள மிராசு ஒருவரின் மகள். டவுனில் கல்லூரியில் படிக்கிறாள். இவனுடைய காதலி... மலர்ந்த முகத்துடன் கைப்பேசியை ஆன் செய்து காதில் வைத்து

"சொல்லு தீபா..." என்றான்.

அந்தப் பக்கம் அவளுடைய விசும்பல் சத்தம் கேட்டது...

"ஏய்... என்ன ஆச்சு.... தீபா... தீபா... என்ன... எதுக்கு அழுவுற...?" அவன் பதறினான்.

"அடுத்த வாரம் எனக்குக் கல்யாணம் நிச்சயம் பண்ணப் போறாங்க..." அவள் அழுகையினூடே சொன்னாள்.

"என்னது....!" அவனுடைய உலகமே ஸ்தம்பித்து விட்டது.

அந்தப் பக்கம் அவளுடைய அழுகை அதிகமானது.

"ஏய்... அழுவுறத நிறுத்துடி மொதல்ல... எவன்டி மாப்ள...? ரெண்டு வருஷமா போன்லையே குடும்பம் நடத்திப்புட்டு... இப்ப வந்து எங்காதுல பூ சுத்த பாக்குறியா... உன்ன வெட்டிக் கொன்னேபுடுவே(ன்)..." அவன் ஆத்திரமாகக் கத்தினான்.

"ரொம்பச் சந்தோஷம்... நானும் சாகுறதுக்குத்தான் வழியத் தேடிகிட்டு இருக்கேன்... வாங்க... வந்து வெட்டிக் கொன்னுடுங்க..." அவள் அவனுக்கு மேல் ஆத்திரமாகக் கத்தினாள்.

"நீ எதுக்குடி சாக வழித் தேடுற... நீதான் கல்யாணப் பொண்ணாச்சே... நாந்தான் சாகணும்..."

"கல்யாணப் பொண்ணா...! மண்ணாங்கட்டிப் பொண்ணு... உங்களக் காதலிச்ச பாவத்துக்கு எனக்குக் கல்யாணம் ஒன்னு தான் கேடு..."

"ஏய்... என்னடி வாய் நீளுது... பக்கத்துல இல்லங்குற திமுரா... வந்தேன்... ஒரே அடில பல்ல பேத்துருவே(ன்) ஜாக்கரத..."

"அப்படித்தான் பேசுவேன்... என்னய்யா செய்வ...? காதலிச்சப் பொண்ணு அவசரமா போன் பண்ணினா ஒடனே எடுக்கத் துப்புல்ல... நீ பேசுறியா...?" கிராமத்துப் பெண்ணான தீபா அவனுடைய அதட்டலுக்கு அஞ்சாமல் எகிறினாள்.

"போன எடுக்கலன்னா ஒடனே இன்னொருத்..." அவள் பேசிய பேச்சில் கடுப்பானவன் எதையோ சொல்ல வந்துவிட்டுத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

"என்ன...? என்ன சொல்ல வந்த...? சொல்லிடு... அதையும் கேட்டுத் தொலைக்கிறேன்..." அவள் அழுகையும் ஆத்திரமுமாகக் கேட்க,

"ப்ச்... ஏன்டி இப்புடி உயிரை எடுக்குற...? விஷயத்த மட்டும் பேசித் தொல..." என்று இவனும் எரிச்சலாகக் கத்தினான்.

"ரெண்டு நாளைக்கு முன்னாடி ஒருத்தன் வீட்டுக்கு வந்து பொண்ணுக் கேட்டான்... பொண்ணுப் பாக்குறது... ஜாதகம் பாக்குறதுன்னு எந்தச் சம்ரதாயமும் வேண்டாமுன்னு சொல்லிட்டு நேரடியா நிச்சயத்துக்குத் தேதிக் குறிச்சிட்டுப் போய்ட்டான்... உங்ககிட்ட சொல்றதுக்கு போன் பண்ணிக்கிட்டே இருந்தேன்... ரெண்டுநாளா நீங்க ரொம்ம்ம்ம்பப் பிசி... போன எடுக்கவே இல்ல..." அவள் இயந்திரத்தனமாக ஆரம்பித்து நக்கலாக முடித்தாள்.

இரண்டு நாட்களாகச் சார்பதிவாளர் அலுவலகத்திற்கும் வக்கீல் அலுவலகத்திற்கும் அலைந்துக் கொண்டிருந்ததில் தீபாவின் போனை அலட்சியப்படுத்திவிட்டதை நினைத்து நொந்து கொண்டே கேட்டான்...

"உங்கப்பன் என்ன சொல்றான்...?"

"அந்த ஆள் செம பணக்காரனாம்... அதுனால அப்பாவுக்கு முழுச் சம்மதம்... "

"உங்கப்பன் சொட்டத்தலையன மட்டும் நேர்ல பாத்தேன்... ஒரே அடில ஆளக் காலி பண்ணிடுவேன்..."

"அவரக் காலி பண்றதெல்லாம் அப்பறம் இருக்கட்டும்... மொதல்ல இந்தக் கல்யாணத்த நிறுத்துற வழியப் பாருங்க..."

"நிச்சயத்துக்குத் தேதி வச்சாச்சுன்னு சொல்ற... இனி யாருக்கிட்ட என்னத்தப் பேசுறது... நீ மொதல்ல அங்கிருந்துக் கௌம்பி வா... இன்னிக்கே நான் உன் கழுத்துல தாலியக் கட்டுறேன்..."

"திருட்டுக் கல்யாணமா...?" ஏளனமாக வந்தது தீபாவின் வார்த்தைகள்.

"வேற என்னதான்டி பண்ணச் சொல்ற...? உங்கப்பன்கிட்ட வந்து பேசவா...?"

"பேசுங்க... ஆனா அப்பாகிட்ட இல்ல... அந்த ஆள்கிட்ட..."

"எந்த ஆள்டி...?"

"அதான்... பொண்ணுக் கேட்டு வந்த ஆள்கிட்ட... உங்க ஊர்தானாம்..."

"எங்க ஊரா...!" உள்ளுக்குள் எதுவோ பிசைந்தது கோபாலுக்கு.

"ஆமா..."

"பேரென்னடி...?" குரலில் படபடப்புடன் கேட்டான்.

"பேரு... ம்ம்ம்... ருத்ரன்னு நெனக்கிறேன்..."

"ருத்ரனா...!!!" அந்த நிமிடம் அவன் அடைந்த அதிர்ச்சிக்கு அளவே இல்லை. அவன் மீண்டும் சகஜநிலைக்கு மீள முழுதாக இரண்டு நிமிடம் ஆனது.

"ஏங்க... என்னங்க.... ஹலோ... ஹலோ...!!!" தீபாவின் குரல் அவனுக்குச் சுயநினைவை மீட்டுக் கொடுத்தது.

"சொல்லுடி..."

"என்ன பேச்சையே காணும்...?"

"இங்கதான் இருக்கேன்... "

"சரி... அந்த ஆள் யாருன்னு உங்களுக்குத் தெரியுமா...? உங்க ஊர்காரர்தான... அவர்கிட்டப் பேசிக் கல்யாணத்த நிறுத்த ஏற்பாடு செய்யுங்க... அந்தக் கல்யாணம் நின்னதும் அப்பாகிட்ட நான் உங்களப் பத்திச் சொல்றேன்... "

"சரி தீபா..." அவன் சுரத்தின்றிச் சொல்லிவிட்டு போனை வைத்தான்.

அவனால் நம்பவே முடியவில்லை. ருத்ரன் தன்னை எந்தவிதத்திலும் தாக்கிவிடக் கூடாது என்று பலமான முன்னெச்சரிக்கையுடன் இருந்தும்... சற்றும் எதிர்பார்க்காத விதத்தில் அவன் தன்னை அடித்து வீழ்த்திவிட்டானே என்று ஆச்சர்யப்பட்டான். சொல்லப் போனால்

கோபாலின் மனம் ருத்ரனுக்கு ரசிகனாகிவிட்டது.

'கல்லாடம் படித்தவனோடு மல்லாடாதேங்கறதை நிரூபிச்சுட்டானே...! என்னமா பிளான் போடுறான்...!' என்று மெச்சிக் கொண்டதோடு ருத்ரனைச் சந்திக்கவும் சென்றான். அவனுக்குத் தெரியும்... இவன் அவனிடம் சரண்டராகிவிட்டால் நடக்கவிருக்கும் நிச்சயதார்த்தம் தானாக நின்றுவிடும் என்று.

###

"உக்காரு கோபால்... சொல்லு என்ன விஷயமா என்ன பாக்க வந்த?" மாடியிலிருந்து இறங்கி வந்த ருத்ரன் கோபாலிடம் கேட்டான்.

"என்னைக்குப் பத்தரப்பதிவு வச்சுக்கலாமுன்னு கேக்க வந்தேன்..." அவன் சுற்றி வளைக்காமல்... எந்த விளக்கமும் கேட்காமல் நேரடியாக விஷயத்திற்கு வந்தது ருத்ரனின் முகத்தில் புன்னகையைக் கொண்டு வந்தது.

"வேற எந்த முயற்சியும் பண்ணலையா...? இன்னும் ரெண்டு மூணு நாள் கழிச்சுதான் வருவன்னு நெனச்சேன்... இப்பவே வந்து நிக்கிற...?" என்று கேட்டபடி தேக்குமரத்தால் செய்யப்பட்டு குஷனிடப்பட்டிருந்த சோபாவில் அமர்ந்தான்.

"தீபாவ வீட்டவிட்டு வான்னா ஒடனே வந்துடுவா... அந்த அளவு எம்மேல உசுர வச்சுருக்கா... ஆனா அம்மா அப்பாவ எதுத்துட்டமேன்னு (எதிர்த்துவிட்டோமே என்று) நிம்மதியா இருக்கமாட்டா... எனக்கு இந்த நெலத்தவிட அவளோட நிம்மதிதான் முக்கியம்... எம் மாமனாரு ஒரு பணத்தாசப் புடிச்ச ஆளு... அவர மாதிரியே நானும் இருக்க முடியுமா...!" ருத்ரனுக்கு எதிரில் அமர்ந்தபடி பதில் சொன்னான். 'குப்புற விழுந்தாலும் என் மீசையில மண்ணே ஒட்டல பாரு...!' என்று சொல்வது போல் இருந்தது அவனுடைய பேச்சு.

தீபா தனக்காக என்ன வேண்டுமானாலும் செய்வாள். நானும் அவளுக்காக என்ன வேண்டுமானாலும் செய்வேன். அதனால் எங்களுடைய காதல் தான் உயர்ந்தது. உன்னுடைய பணம் எங்களுக்குப் பெரிதல்ல என்பதை மறைமுகமாக ரோஷத்துடன் சொன்னான் கோபால்.

அவனுடைய ரோஷமான பேச்சில் தோற்றுவிட்டோம் என்கிற ஆற்றாமையை விடத் தோல்வியை ஒத்துக்கொள்ள மாட்டேன் என்கிற பிடிவாதம்தான் அதிகமாக இருந்தது. இப்போது ருத்ரன் சிரிப்பை மறைக்கவில்லை. சத்தமாகச் சிரித்துவிட்டான்.

"ஹா... ஹா... ஹா... நல்லது... சரி கோபால்... நாளைக்குப் பத்திரப்பதிவ வச்சுக்கலாம்... நெலத்துக்கு ஈடா பணத்த வாங்கிக்கறியா... இல்ல வேற மாத்து நெலம் எதுவும் வேணுமா...?"

"பணமாவே குடுத்துடுங்க... கல்யாணச் செலவு இருக்கு..."

"சரி வாங்கிக்க... கல்யாணத்துக்கு எனக்குப் பத்திரிக்கக் குடுப்பல்ல...?" பெரிய மீசைக்குள் ஒளித்து வைத்த புன்னகையுடனே கேட்டான்.

"குடுக்காம... உங்களுக்குத்தான் மொத பத்திரிக்க... நா வாரேன்..." என்று சொல்லிவிட்டுக் கிளம்பியவன்... இரண்டடி எடுத்து வைத்துவிட்டு நின்று ருத்ரனைத் திரும்பிப் பார்த்தான்.

'என்ன...?' என்று புருவத்தை உயர்த்திக் கண்களால் கேட்டான் ருத்ரன்.

"மொதல்ல தண்ணிவிட வாய்க்கா மட்டுந்தானே கேட்டிங்க... இப்ப என்ன எல்லாருகிட்டேருந்தும் நெலத்த எழுதி வாங்கிக்கறிங்க...?"

"உங்க காரியம் முடிஞ்சோன்ன தண்ணிவிட முடியாதுன்னு பிரச்சனைய மறுபடி கிளப்புனிங்கன்னா என்ன செய்றது... அதான் உஷாரா இருக்கேன்..."

'எமகாதகன்......' என்று நினைத்தவன் "ம்ம்ம்... சரி... வாரேன்...." என்று சொல்லிவிட்டு அங்கிருந்து கிளம்பினான்.

## அத்தியாயம் - 6

"காட்டை வெட்டிச் சாய்த்தவனுக்குக் கம்பு பிடுங்கப் பயமா?"

"பெரியப்பா... ருத்ரன் நாம நெனச்சதவிடப் பொல்லாதவனா இருக்கான்... எங்க எல்லாருகிட்டேருந்தும் நெலத்தப் புடிங்கிப்புட்டான்... உங்ககிட்டேருந்து எப்படியும்..." அவன் முடிப்பதற்குள் சீறினார் சிதம்பரம்.

"வாயக் கழுவுடா வீணாப் போனவனே... காதலிச்சானாம் காதலு... பெரிய மன்மதராசா இவரு... நீங்கல்லாம் சில்லற பயலுவடா... அதான் அந்தப்பய சாச்சுப்புட்டான்... ஆனா நா சிங்கம்டா... என்னோட ஒவ்வொரு சொத்தும் ஏழு தலைமுறைக்கு ஆராஞ்சு வாங்கினது... ஒரு வில்லங்கமும் இருக்காது... என்ன எவனும் அசைக்க முடியாதுடா..."

"அதுசரி... நானும் என்ன பத்தி அப்புடித்தான் நெனச்சேன்..." மெல்லிய குரலில் சொன்னான் கோபால்.

அவர் கோபப்படாமல் அவனைச் சிந்தனையுடன் பார்த்தான்.

"மொத ரெண்டு பேருகிட்டயும் நெலத்தப் பணயமா வச்சுத்தான் நாலாங்கர நெலத்த எழுதி வாங்கினான். அதுனாலதான் நா என்னோட நெலத்துல இருக்க வில்லங்கத்த எல்லாம் சரி பாத்துக்கிட்டு இருந்தேன்... இவன் என்னடான்னா நெலத்த விட்டுபுட்டு என் காதல்ல கைய வச்சுப்புட்டான்... பயபுள்ள புத்திசாலியாப் பொறந்துட்டான்... நீ பத்தரமா இரு பெரியப்பா...."

"அட... எனக்கு எந்தக் காதலிடா இருக்கா... காலம் போன கடசில காதலா(ம்)... காதலு... எம்மேல கை வைக்க முடியாதுடா கோவாலு..." அவருடைய குரலில் பழைய நம்பிக்கை இல்லை.

'ம்கும்... பெருசுக்கு மீச நெரச்சுப் போச்சு நெனப்பப் பாரு...' என்று நினைத்தவன் அவரைச் சீண்டினான்.

"காதலி இல்லன்னா என்ன பெரியப்பா... டவுனுக்கு அடிக்கடிப் போற... செட்டப்பு கிட்டப்புன்னு ஏதும்...!"

"அடிங்க... தறுதலப்பயலே... யாருகிட்ட என்ன பேசுறதுன்னு புத்தி வேண்டாம்..." அவர் தோளில் கிடந்த துண்டை உதறிக்கொண்டு ஆவேசமாகக் கட்டிலிலிருந்து எழுந்தார்.

"அட அதுக்கில்ல பெரியப்பா... எதுக்குக் கோவப்படற...? இப்பெல்லாம் ரகசியமா நடக்குற சங்கதியெல்லாம் பொசுக்குப் பொசுக்குன்னு ஃபோட்டா எடுத்து டிவியில போட்டுபுட்றானுவ... நம்பப் பக்கம் வில்லங்கம் இருந்தா உஷாரா இருக்கணுமுள்ள அதாங் கேட்டே(ன்)..."

அவர் மேல்மூச்சு வாங்கப் பேசினார்...

"அதெல்லாம் ஒரு கருமாதியும் இல்லடா..." என்று ஆரம்பித்தவர் அவனை அசிங்கமாகத் திட்டியதோடு "அந்தப்பயல நா பாத்துக்குறேன்... நீ மொதல்ல இங்கேருந்துப் போயித் தொலடா..." என்று கடுப்படித்து கோபாலை விரட்டிவிட்டார்.

இவர் இங்கு ருத்ரனால் தனக்கு என்ன சிக்கல் வரக்கூடும் என்று யோசிப்பதற்குள் அங்கு ருத்ரன் அவரை எப்படிச் சிக்க வைப்பது என்று முடிவு செய்துவிட்டான்.

###

ருத்ரன் அவனுடைய அறையில் என்றும் இல்லாதவிதமாக அன்று சிறிது பரபரப்புடன் அமர்ந்திருந்தான். கைப்பேசி அழைத்தது.... எடுத்துப் பார்த்தான். அவனுடைய நண்பனும் ஒன்றுவிட்ட சகோதரனுமான வைத்திலிங்கம்தான் அழைத்தான்...

"சொல்லு... எல்லாம் ரெடியா...?"

"ரெடிடா..."

"எங்க இருக்க...?"

"காலேஜ் வாசல்ல..."

"சரி... கச்சிதமா முடிச்சிட்டுக் கூப்பிடு..."

"ருத்ரா..."

"சொல்லுடா..."

"நல்லா யோசிச்சிட்டியா..."

"யோசிக்காமதான் உன்ன அனுப்பினேனா...?"

"பொம்புளப் புள்ள சமாச்சாரம்டா..."

"காட்டை வெட்டிச் சாச்சவன்டா நான்... கம்பு பிடுங்கவா பயப்படப் போறேன்... நீ நா சொன்னத மட்டும் செய்யி..."

"சரிடா..."

"வைத்தி..."

"சொல்லுடா..."

"இது என்னோட மானப்பிரச்சன... எந்தத் தப்பும் நடந்துடக் கூடாது..."

"நீ நெனச்சபடி எல்லாம் நடக்கும்... இன்னும் ஒரு மணிநேரத்துலக் கூப்பிட்றேன்..." என்று சொல்லிவிட்டுப் பேச்சை முடித்துக் கொண்டான்.

###

சிலும்பல் இல்லாமல் போடப்பட்ட கொண்டையும்... மூக்குக் கண்ணாடியும்... கையில் தடியான புத்தகமுமாக அந்தச் சிறு மேடையில் நின்று கொண்டிருந்த மத்திய வயது பெண்மணி... தன்முன் பெஞ்சில் அமர்ந்து டெஸ்க்கில் கையை ஊன்றி நோட்ஸ் எடுப்பது போல் பாவனைச் செய்து கொண்டு... கண்களைத் திறந்து வைத்துக் கொண்டே உறங்கிக் கொண்டிருந்த மாணவிகளுக்கு நியூரல் நெட்வொர்க்ஸ் பாடம் நடத்திக் கொண்டிருந்தார்.

"வணக்கம் மேடம்..." ஓர் ஆணின் குரல் இடையிட்டது. விரிவுரையாளர் வாசல்பக்கம் திரும்பிப் பார்த்துக் கேட்டார்...

"யார் நீங்க...? என்ன வேணும்...?"

"எம்பேரு பரமன். மான்விழிங்கற பொண்ணு இங்கதானே படிக்குது. அவங்க அப்பா வெளிய வெயிட் பண்ணுறாரு. மான்விழியக் கூட்டிக்கிட்டு வரச் சொன்னாரு..."

"மான்விழி... இவரை உனக்குத் தெரியுமா...? "

"தெரியும் மேடம்... எங்க ஊர்தான்..." பரமனைத் தன்னுடைய தந்தையுடன் அடிக்கடி பார்த்திருந்த ஞாபகத்தில் மான்விழி சொன்னாள்.

"சரி... போய் என்னன்னு கேட்டுட்டுச் சீக்கிரம் வந்துடு..."

"தேங்க் யு மேடம்..." மான்விழி ஆசிரியைக்கு நன்றி சொல்லிவிட்டு வகுப்பறையிலிருந்து வெளியே வந்தாள்.

"என்ன விஷயம்...? ஏன் அப்பா காலேஜுக்கு வந்திருக்காரு....? எங்க இருக்காரு...?"

"விஷயம் என்னன்னு தெரியலம்மா... காம்பௌண்டுக்கு வெளிய கார்ல காத்துட்டு இருக்காரு..."

"காம்பௌண்டுக்கு வெளியவா...?" அவள் அவனை லேசான சந்தேகத்துடன் பார்த்தாள்.

அவன் அவளுடைய பார்வையை லட்சியம் செய்யாமல் முன்னே நடந்தான். அவனுடைய பதட்டமின்மை அவளுக்குள் முளைவிட்ட சந்தேகத்தை நசுக்கிவிட்டது. அவள் அவனைப் பின் தொடர்ந்து, காத்திருக்கும் காரை அடைந்தாள்.

இவள் அருகில் நெருங்கியதும் பட்டென்று காரின் கதவு திறந்து கொண்டது. கண்ணிமைக்கும் நேரத்தில் இருகரங்கள் அவளை உள்ளே இழுத்துக் கொள்ள, கார் புயல்வேகத்தில் புழுதியைக் கிளப்பிக் கொண்டு பறந்தது.

###

தன்னுடைய அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்த பேரனை குழப்பமாகப் பார்த்தபடி தரையில் கால் நீட்டி அமர்ந்து வெற்றிலையை மடித்து வாய்க்குள் திணித்தபடி கேட்டார் வள்ளி பாட்டி...

"ஏன் ராசா... என்னா இன்னைக்கி எல்லாரையும் வீட்டுலையே புடுச்சு வச்சுட்டு... நீயும் இப்புடி குறுக்கையும் நெடுக்கையும் நட பழவிகிட்டிருக்க....?"

"கொஞ்சநேரம் பேசாம இரு ஆச்சி..."

"அது சரி..."

அவனுடைய கைப்பேசி அழைத்தது.

"ம்கும்.... மனுசாளுகிட்டப் பேசுறியளோ இல்லையோ... இந்த சோப்பு டப்பாவுகிட்ட பேசாம இருக்குறதுல்ல..." என்று பாட்டி அலுத்துக் கொண்டிருக்க ருத்ரன் கைப்பேசியை எடுத்துக் கேட்டான்...

"வைத்தி... என்னாச்சு...?"

"காரியம் முடிஞ்சுது...."

"என்ன பண்றா...?"

"மயக்கத்துல இருக்கா... அரை மணிநேரத்துல ஊருக்குள்ள வந்துடுவோம்..."

"சரி..." கைப்பேசியை அணைத்துவிட்டுப் பாட்டியை நிமிர்ந்துப் பார்த்தான். ஏதோ ஒரு தயக்கம் அவன் கண்களில் தெரிந்தது.

"என்னய்யா...?" பாட்டி ஆதரவாகக் கேட்டார்.

"பெருமாள் கோயிலுக்குக் கௌம்பணும் ஆச்சி..."

பாட்டியின் பார்வை கூர்மையாகியது.

"பெருமா கோயிலுக்கா... என்ன ராசு இந்நேரத்துல...?"

"ஆச்சி..."

"சொல்லு ராசா..."

"நான் கல்யாணம் பண்ணிக்கலாமுன்னு இருக்கேன்... "

"என்னாது.... கல்யாணமா...?" பாட்டிக்கு அதிர்ச்சியில் குரல் உயர்ந்தது.

பொறுமையாகப் பேசி சமாதானம் செய்வதற்கு நேரமில்லை என்பதால்... பாட்டியின் குரலை அடக்கும்விதமாக அவன் அழுத்தத்துடன் பேசினான்.

"ஆச்சி... எந்த விளக்கமும் இப்பக் கேக்காத... இன்னைக்குதான் கல்யாணம்... பொண்ணு கோயிலுக்கு வந்துகிட்டு இருக்கு... அதுக்குள்ள நாம அங்க போகணும்... சீக்கிரம் கீழப் போயி எல்லாரையும் ரெடியாகச் சொல்லு... பத்து நிமிஷத்துல கார் வாசலுக்கு வரும் எல்லாரும் ஏறியாகணும்..." கட்டளையிட்டான்.

"பொண்ணு யாரு...? நம்பச் சாதியா இல்ல வேத்துச் சாதியா...?" பாட்டியின் குரலில் கலக்கம் விரவிக்கிடந்தது.

சட்டெனப் பாட்டியின் முகத்தைத் திரும்பிப் பார்த்தான்.

'வீட்டுக்குள்ளயே உன்ன வச்சுக்கிட்டு ஊரத் திருத்தணுமுன்னு நா நெனச்சா முடியுமா...!' என்று நொடியில் எழுந்த எரிச்சலை நேரடியாகக் காட்டமுடியாமல்,

"நம்ம சாதிதான்... நம்ம ஊருதான்... நமக்குப் பொண்ணு எடுக்குற மொறதான்... கவலைப்படாம கெளம்பு..." என்றான் முறைப்புடன் அழுத்தமாக.

அந்தப் பதில் பாட்டியை சாந்தப்படுத்த அவனுடைய முறைப்பை அலட்சியப்படுத்தி "சரிப்பா..." என்று சொல்லிவிட்டு பரபரப்புடன் கீழே சென்றார்.

பேரன் வேற்றுஜாதிப் பெண் யாரையும் குடும்பத்திற்குள் இழுத்துக் கொண்டு வரவில்லை என்பதே போதுமானதாக இருந்தது அந்த மூதாட்டிக்கு.

வீட்டில் அனைவருக்குமே ருத்ரனின் இந்தத் திடீர்க் கல்யாணம் அதிர்ச்சியாகத்தான் இருந்தது. ஒவ்வொருவரும் தங்களுக்குள் எதையெதையோ முணுமுணுத்தாலும் ருத்ரன் உறுதியாகச் சொல்லிவிட்டப் பிறகு அவனை எதிர்த்துக் கேட்கத் துணிவின்றிக் கோவிலுக்குச் செல்லத் தயாராகிக் கொண்டிருந்தார்கள்.

சரியாகப் பத்துநிமிடத்தில் வீட்டுவாசலில் வந்து நின்ற கார் ருத்ரனின் குடும்பத்தினரை ஏற்றிக்கொண்டு ஊர் எல்லையில் இருக்கும் பெருமாள் கோவில் நோக்கிச் சென்றது.

யாருக்குத் திருமணம் என்றே தெரியாமல் ஐயர் திருமண ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தார். அந்தப் பக்கம் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் கோவிலில் நடக்கும் திருமண ஏற்பாட்டினால் கவரப்பட்டு அந்தப் பக்கமே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தார்கள். அந்த வழியாகக் கடைக்கு... வயலுக்கு... ஆடுமாடு மேய்க்கச் செல்லும் சில பெரியவர்களும் கோவிலை எட்டிப் பார்த்துவிட்டு ஐயரிடம் விபரம் கேட்க முயன்று தோற்றுக் கொண்டிருந்தார்கள்.

பெரியவீட்டின் கார் கோவில் வளாகத்திற்குள் நுழைந்தது. அதைத் தொடர்ந்து ருத்ரன் தன் புல்லட்டில் வந்து இறங்கினான். அங்கிருந்த சிலரின் ஆர்வம் அதிகமானது. கடையாவது... வயலாவது... ஆடு

மாடாவது... என்று அனைத்தையும் உதாசினப்படுத்திவிட்டுக் கோவிலில் என்ன நடக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளும் ஆர்வத்துடன் அங்கேயே நின்றுவிட்டார்கள்.

பெரியவீட்டு மக்கள் முகத்திலிருந்த இறுக்கம் தூரத்தில் ஆலமரத்தடியிலும்... டிராமா போடும் மேடையிலும்... சத்திரத்தில் நின்றபடிக் கோவிலை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் யாரையும் அவர்களிடம் நெருங்கவிடாமல் தடுத்தது.

சற்றுநேரத்தில் வைத்தியின் கார் வந்து நின்றது. அதிலருந்து வைத்தி, வைத்தியின் தோழன் மற்றும் ஓட்டுனர் மூவரும் இறங்கினார்கள். அவர்களிடம் சென்று ருத்ரன் எதையோ பேசினான். பின் அம்மாவையும் அண்ணியையும் கைகாட்டி அழைத்தான். அவர்கள் காரை நெருங்கியதும் அவர்களிடம் எதையோ சொன்னான். அவர்கள் அதிர்ச்சியுடன் அவனிடம் எதையோ கேட்டார்கள். அவன் சிடுசிடுப்பது போல் அவர்களுக்குப் பதில் சொன்னான். பெண்கள் இருவரும் கப்பென்று வாயை மூடிக் கொண்டார்கள்.

பிறகு மாமியாரும் மருமகளும் ஷாலால் முக்காடு போடப்பட்ட ஒரு பெண்ணை காருக்குள்ளிருந்து கைத்தாங்கலாக இறக்கி மணமகள் அறைக்குள் அழைத்துச் சென்றார்கள்.

தூரத்திலிருந்து வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தவர்களின் ஆர்வம் அதிகமானது. கண்களை அகலமாக விரித்து வைத்துக் கொண்டு நடப்பதை இன்னும் தெளிவாக உள்வாங்க முடியுமா என்று முயற்சித்துக் கொண்டிருந்தார்கள்.

அவர்களுக்குத் தீனிப்போடுவது போல் மந்திரம் ஓதிக்கொண்டிருந்த ஐயர் சைகை காட்டியதும் ருத்ரன் மணவறையில் வந்தமர்ந்தான். பார்த்துக் கொண்டிருந்தவர்களின் விழிகள் வெளியே வந்து குதித்துவிடும் அளவிற்கு விரிந்தது.

அடுத்தச் சில நிமிடங்களில் லேசாகத் தொங்கிப் போன தலையுடன் மிதமான மணமகள் அலங்காரத்துடன் ஒரு பெண் அழைத்து வரப்பட்டு மணவறையில் அமர வைக்கப்பட்டாள். இப்போது அவளுடைய முகத்தை அனைவருக்கும் பார்க்க முடிந்தது.

"இந்தப் பொண்ணா...!" "மானு....!" "சிதம்பரத்தண்ண பொண்ணு மானு...!" என்று ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக அதிர்ந்தார்கள். வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தவர்களின் இதயத்துடிப்பு பலநூறு மடங்கு அதிகமாகிவிட்டது. அதில் சிதம்பரத்திற்கு வேண்டிய சிலர்

அவருக்குச் செய்திச் சொல்ல தெற்குத்தெருப் பக்கம் ஓடிக் கொண்டிருந்தபோது... இங்கு ருத்ரன் மான்விழியின் கழுத்தில் மங்கலநாணைப் பூட்டிவிட்டான்.

தாலிக் கட்டிமுடித்த அடுத்த நொடியே வைத்தி தங்களுடைய பங்காளிகளுக்கு போனில் தொடர்பு கொண்டு விஷயத்தைச் சொல்லி பெரியவீட்டில் கூடும்படி சொல்லிவிட்டுக் கோவிலில் இருந்தவர்களைக் கிளப்பி வீட்டிற்கு அழைத்துக் கொண்டு சென்றான்.

## அத்தியாயம் - 7

"எடுத்தாலும் பங்காருப் பெட்டியை எடுக்க வேண்டும்;

இருந்தாலும் சிங்காரக் கழுவில் இருக்க வேண்டும்!"

தாலிக்கட்டி முடிக்கும்வரை ருத்ரனிடம் இருந்த படபடப்பு இப்போது சிறிதும் இல்லை. அவன் அமர்த்தலாக நடுவீட்டில் சோபாவில் அமர்ந்து அம்மா கலந்துக் கொடுத்த டீயைச் சுவைத்துக் குடித்துக் கொண்டிருந்தான். அவனுக்கு எதிரில் வெள்ளையும் சொள்ளையுமாக அவனுடைய பங்காளிகள் பத்துபேர் பயங்கர டென்ஷனாக அமர்ந்திருந்தார்கள்.

திடீர்க் கல்யாணம் என்றதும் காதல் கல்யாணம் என்று நினைத்த அவனுடைய குடும்பத்தார் நடந்து முடிந்திருந்த கடத்தல் கல்யாணத்தால் கதிகலங்கிப் போயிருந்தார்கள்.

"அந்தப் பொண்ணைப் புடிச்சிருக்குன்னு சொல்லியிருந்தா... மொறையா கேட்டுப் பாத்து, கட்டிக்கிட்டு வந்திருக்கலாம்... நம்ம குடும்பத்துக்குப் பொண்ணுக் குடுக்கமாட்டேன்னு எவன் சொல்லுவான்... இப்புடி அவசரப்பட்டிருக்க வேண்..." பொரிந்து கொண்டிருந்த பீமனின் வாய் ருத்ரனின் ஒற்றைப் பார்வையில் தானாக மூடிக்கொண்டது.

ருத்ரனிடம் காட்ட முடியாத கோபத்தை அவனுக்கு உதவிச் செய்த வைத்தியைத் தனியாகத் தள்ளிக்கொண்டு போய் அவனிடம் காட்டினார்கள் அனைவரும்.

"ஆரா மீனுக்கும் அயிர மீனுக்கும் நடு ஏரியில சண்ட வெலக்கப் போன வெறா மீனுக்கு ஒடஞ்சிப் போச்சாம் மண்டங்கற கதையா எல்லாரும் என் தலையப் போட்டு உருட்டுங்க..." என்று முணுமுணுத்தான் வைத்தி.

இவ்வளவு நாள் குடும்பத்தாரிடமும்... ஊர் மக்களிடமும் தான் சம்பாதித்து வைத்திருந்த பயம் கலந்த மரியாதையில் இன்று பெரிய

பள்ளம் விழுந்துவிட்டதை ருத்ரன் உணர்ந்தான்.

"தம்பி... அடுத்து என்னப்பா செய்றது... தெக்கித்தெரு ஆளுங்களையெல்லாம் சிதம்பரம் தெரட்டிக்கிட்டு இருக்காராம். இன்னும் கொஞ்சநேரத்துல அவனுங்க எல்லாரும் இங்க வந்துடுவானுங்க..." பெரியவர் ஒருவர் பேச்சை ஆரம்பித்தார்.

"வரட்டும் பெரியப்பா... நானும் அதுக்காகத்தான் காத்துக்கிட்டு இருக்கேன்..." என்றான் நிதானமாக. அவர்கள் பேசிக்கொண்டிருக்கும் போதே வீச்சரிவாளும் வேல்கம்புமாக ருத்ரனின் வீட்டுவாசலில் படையாகத் திரண்டு வந்து நின்றார்கள் சிதம்பரத்தின் பங்காளிகள்.

"யார்ரா வீட்டுக்குள்ள... வெளிய வாங்கடா..." என்கிற கட்டைக்குரல் வீட்டிற்குள் அமர்ந்திருந்தவர்களை விறைத்து எழ வைத்தது.

"எவன்டா அவன்... வீட்டுவாசல்ல வந்து நின்னுகிட்டுக் கத்துறது...?" என்றபடி பீமன் குதித்துக்கொண்டு வெளியே செல்ல

"பீமா..." என்று அதட்டி அண்ணனை அடக்கினான் ருத்ரன். பின் அனைவரையும் முந்திக்கொண்டு வேகமாக வாசலுக்குச் சென்றான்.

கணுக்காலில் சிக்கிய பட்டுவேட்டியை ஒற்றைக்காலைப் பின்னால் மடக்கி, ஒருபக்க வேட்டியை கையால் பிடித்து லாவகமாக மடித்துக் கட்டிக்கொண்டு வேக நடையுடன் கம்பீரமாக வெளியே வந்தவனைப் பார்த்ததும் மந்திரத்துக்குக் கட்டுப்பட்டது போல் வாசலில் நின்றிருந்த வீச்சருவாள் கூட்டம் ஒரு நொடி அமைதியானது.

"என்ன சத்தம் இங்க...?" என்று அழுத்தமாக ஓர் அதட்டல் போட்டான்.

"எங்கத் தெருப் பொண்ணத் தூக்கிட்டு வந்துட்டு என்னய்யா சவுடாலா பேசுற...?" எதிர்த்துக் கேள்விக் கேட்டான் கூட்டத்திலிருந்த ஒருவன்.

"கல்யாணம் முடிஞ்சுப் போச்சு... பிரச்சனையைப் பேசித் தீர்த்துக்கலாம்... எல்லாரும் அருவா கம்பெல்லாம் கீழப் போடுங்கப்பா..." என்றார் வீட்டிற்குள்ளிருந்து வந்த மீசைக்கார பெரியவர் ஒருவர்.

அதன்பிறகு ஆளாளுக்கு ஒவ்வொன்று பேசினார்கள். கடைசியில் கிராமப் பஞ்சாயத்து... பெண்ணின் வாழ்க்கை... தாலி செண்டிமெண்ட்... போன்ற மந்திர வார்த்தைகளினால் பெண்வீட்டார் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு உடன்பட்டார்கள்.

கூட்டமாக வந்திருந்த இருபத்தைந்து ஆண்களில் எண்ணி மூன்றுபேரை மட்டுமே வீட்டிற்குள் அனுமதித்தான் ருத்ரன்.

"இங்க பாருங்க... இது உங்களுக்கும் எனக்குமானப் பிரச்சனை... நாம ரெண்டுபேர் மட்டும் பேசித் தீர்த்துக்கலாம். உங்களுக்கு சப்போட்டுக்கு ஆளு வேணுமுன்னா உங்க அண்ணன் தம்பிகள்ள ரெண்டுபேர மட்டும் நிறுத்திக்கிட்டு மத்தவங்களையெல்லாம் திருப்பி அனுப்பிட்டு உள்ள வாங்க..." என்று சிதம்பரத்தைப் பார்த்து ருத்ரன் தெளிவாகச் சொன்னதையடுத்து... அவர் வேறு வழியின்றித் தன்னுடைய தம்பிகள் இருவரையும் தன்னோடு இருக்கச் சொல்லிவிட்டு மற்ற அனைவரையும் அனுப்பிவிட்டார்.

ருத்ரனின் வீட்டுக்கூடம் நிறைந்திருந்தது. வைதேகி அம்மா மற்றும் ராஜேஸ்வரி இருவரும் ஒரு பக்கம் ஒதுங்கி நின்றார்கள். பாட்டி ஒரு தூணில் சாய்ந்தபடிக் கால்களை நீட்டி அமர்ந்து வெற்றிலைப்பாக்கை மடித்துக் கொண்டிருந்தார்.

தேவன் மாடிப்படியில் அமர்ந்திருக்க, பீமன் ஒரு தூணில் சாய்ந்தபடி நின்று கொண்டிருந்தான்.

ருத்ரனின் பங்காளி வீட்டு ஆட்கள் சோபாவிலும் நாற்காலிகளிலும் நிறைந்திருக்க... அவர்களுக்கு எதிரில் சிதம்பரமும் அவருடைய தம்பிகள் இருவரும் அமர்ந்திருந்தார்கள்.

ருத்ரன் திண்ணையில் வைத்திக்கு ஏதோ வேலைச் சொல்லி அவனை வெளியே அனுப்பிவிட்டு வீட்டிற்குள் நுழைந்தான்.

அவனைப் பார்த்ததும் "எம்பொண்ணு எங்க...?" என்றார் சிதம்பரம்.

"மாடில தூங்குது..." என்றாள் ருத்ரனின் தாய் வைதேகி முந்திக்கொண்டு.

"அம்மா... இவங்களுக்குக் குடிக்க ஏதாவது கொண்டு வாம்மா...." என்று தாயின் பேச்சில் இடையிட்டான் ருத்ரன்.

வைதேகி கொண்டு வந்த பழச்சாற்றை மறுத்துவிட்ட சிதம்பரம் "எம்பொண்ண நான் பாக்கணும்..." என்றார்.

"அதான் சொன்னாங்களே... எம்பொண்டாட்டி மேலத் தூங்கிக்கிட்டு இருக்கா... எழுந்தோன்ன பாக்கலாம்... இப்ப ஜூச எடுத்துக்கங்க..." என்றான் ருத்ரன் அலட்சியமாக. சற்றுநேரத்திற்கு முன்வாசலில் அவர் காட்டுத்தனமாகக் கத்திக் கூச்சல் போட்டதன் விளைவால் அவனுடைய கோபம் பெருகியிருந்தது.

ஏற்கனவே கடுகடுவென இருந்த சிதம்பரத்தின் முகம் ருத்ரன் காட்டிய அலட்சியத்தில் பயங்கரமாக மாறியது.

"காலேசுக்குப் போன பொண்ண, கார்ல தூக்கிட்டு வந்து தாலியக் கட்டிப்புட்டு... பொண்டாட்டி கிண்டாட்டின்னு உரிமைக் கொண்டாறியளோ... யாருக்குய்யா வேணும் உங்க ஜூசு... எம்பொண்ணு நல்லா இருக்காளான்னு பாத்த பொறவுதான் மத்ததெல்லாம்..." கத்தினார் சிதம்பரம்.

"சிதம்பரம்... பொறுமையாப் பேசுப்பா..." என்று மற்றவர்கள் அவரைச் சமாதானம் செய்தார்கள்.

தான் செய்திருப்பது மிகப்பெரிய அத்துமீறல் என்பது புரிந்தாலும் அதை அலட்சியம் செய்து,

"தூக்கிக்கிட்டு வந்தாலும் தாலிக் கட்டிட்டேன்... இனி அவ எம்பொண்டாட்டி தான்... என்ன மீறி யாரும் அவகிட்ட நெருங்க முடியாது..." என்று எகிறினான் ருத்ரன்.

"என்னய்யா நீ... அவரு பொண்ணப் பாக்கணும்குற ஆசையிலப் பேசுறாரு... நீயும் சரிக்குச்சரி பேசிக்கிட்டு நிக்கிற..." என்று பாட்டி பேரனை அதட்டியதோடு,

"சரி... நீ போயி ஒம்பொண்டாட்டி முழிச்சிரிச்சா பாரு... இல்லன்னா எழுப்பு..." என்று பேரனை மாடிக்கு அனுப்பி வைத்தார்.

அவன் மாடிப்படிகளில் ஏறிக் கொண்டிருக்கும் போது... "ந்தா... செதம்பரம்... கம்மங்கருதக் கண்டா கை சும்மா இருக்குமா? இல்ல, மாமன் மகளக் கண்டா வாய் சும்மா இருக்குமா?? ஏதோ எம்பேரன் மாமன் மகளாச்சேன்னு ஆசைப்பட்டு உம்மக கழுத்துல தாலிக் கட்டிப்புட்டான். இனி அவ எங்கவீட்டு மருமவ... நாங்க எல்லாரும் அவள எங்க கண்ணுக்குள்ள வச்சுப் பாத்துக்குறோம்... இனி நடக்கவேண்டியதப் பேசுவோம்... நீ என்ன சொல்லுற...?" என்று அவர் சிதம்பரத்திடம் பேசுவது கேட்டது.

###

ருத்ரன் தன்னுடைய அறைக்கதவைத் தள்ளித் திறந்துகொண்டு உள்ளே நுழையும் பொழுதே இதுநாள் வரை அவனுடைய அறையில் அவன் நுகர்ந்தறியாத ஒரு புதுமணம் அவன் நாசியை வருடியது. இதமான அந்த மணம் அவனுடைய இறுக்கமான மனநிலையை நொடியில் இலகுவாக மாற்றியது. அதிக அலங்காரம் இல்லாமல் சிகப்புநிற பட்டுப்புடவையில் தந்தத்தில் செய்யப்பட்ட சிலை ஒன்று ஒருக்களித்துப் படுத்திருந்தது அவனுடைய படுக்கையில். அந்தச் சிலையின் அழகில் அவன் மலைத்துப் போய் நின்றான்.

'சிதம்பரத்தோட பொண்ணு இவ்வளவு அழகா....!'

கழுத்திலிருந்து சரிந்துப் படுக்கையில் தவழ்ந்து கொண்டிருந்த கொத்தான தங்கநகைகளை விட அடர்த்தியான புது மஞ்சள்கயிறு அவள் கழுத்தை வசீகரமாக்கியது.

திருமணச் சடங்கின் போது அவன் அவளுடைய நெற்றியிலும் வகிட்டிலும் இட்டுவிட்ட குங்குமம் இப்போது லேசாகக் கலைந்திருந்தது. அதுகூட அவளுடைய அழகை அதிகமாக்குவது போல் தோன்றியது. அவளுடைய பின்னந்தலையிலிருந்து சரிந்துத் தோளில் விழுந்த மல்லிகைச் சரத்தில் உள்ள மலர்களைவிட அவள் முகம் அழகானதென்று அவன் எண்ணினான்.

இதுவரை இருந்த பரபரப்பில் அவளுடைய முகத்தைச் சரியாகக்கூடப் பார்க்க முடியாதவன் இப்போது கிடைத்திருக்கும் வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டு கட்டிலுக்கு அருகே ஒரு நாற்காலியைப் போட்டுக்கொண்டு அமர்ந்து அவளுடைய அழகை இஞ்ச் பை இஞ்ச்சாக ரசித்தான். அப்போதுதான் இன்னொன்றையும் உணர்ந்தான்.

அந்த முகம் அவனுக்குப் புதிதல்ல... ஏற்கனவே பரிச்சயமானது போல் ஒரு உணர்வு... 'எங்கே...! எப்போது...!' அவனுக்குப் புலப்படவில்லை.

அவன் மண்டையைக் குழப்பிக் கொண்டிருக்கும் போது சுவர்கடிகாரம் சத்தமிட்டது. நிமிர்ந்து மணியைப் பார்த்தான். பிற்பகல் இரண்டு.

'காலை பத்துமணிக்குக் கொடுத்த மயக்கமருந்து.... முழுதாக நான்கு மணிநேரம் முடிந்துவிட்டது. இன்னும் ஏன் இவள் விழிக்கவில்லை...! இந்த நான்கு மணிநேரத்தில் அவளுடைய வாழ்க்கையே தடம் மாறிவிட்டது... இதை எப்படி எடுத்துக் கொள்வாள்...? கூச்சலிடுவாளோ...! அழுதுப் புலம்புவாளோ...!' அவனுடைய சிந்தனை ஓட்டத்தைக் கலைப்பது போல் அவளிடம் அசைவு தெரிந்தது.

# # #

அதேநேரம் கீழே சிதம்பரம் அமைதியாக இருந்தார். பத்து பதினைந்து பேர் ஒரே பக்கமாகச் சேர்ந்துகொண்டு நடந்து முடிந்தத் திருமணத்தை நியாயப்படுத்திப் பேசி சிதம்பரம் சகோதரர்களின் சுயச்சிந்தனையை மழுங்கடித்து விட்டிருந்தார்கள். அவரின் தம்பிகளோ கூட்டத்தாரின் போதனையில் மனதளவில் அந்தத் திருமணத்தை ஏற்று கொண்டுவிட்டார்கள்.

நடந்து முடிந்தப் பேச்சுவார்த்தையில் அந்தத் திருமணத்திற்கான

ருத்ரனின் உள்நோக்கம் சிறிதும் வெளிப்படவில்லை. எல்லோரும் 'அவன் அந்தப் பெண்ணின் மீது விருப்பப்பட்டுவிட்டான். அதனால் அவசரப்பட்டுவிட்டான்...' என்பதையே உண்மை என்று நம்பி... அதைச் சொல்லியே பெண்ணின் தகப்பனைச் சமாதானம் செய்தார்கள். சிதம்பரம் முழுவதுமாகக் குழம்பிப் போய் அமர்ந்திருந்தார்.

"என்னண்ணா யோசிக்குற...?" சிதம்பரத்தின் தம்பி கேட்டார்.

"மானு என்ன சொல்லுவான்னு தெரியலையே...! அவளுக்கு இந்தக் கல்யாணம் பிடிச்சிருக்கா இல்லையான்னு தெரியாம நாம என்னடா பேசுறது...?"

"அவ சின்னப் பொண்ணுண்ணே... அவளுக்கு என்ன தெரியும்.. நல்லது கெட்டத நாமதான் எடுத்துச் சொல்லணும்..."

"சொன்னா ஒத்துக்குவாளா...?"

"அவ நம்ம பொண்ணுண்ணே... நாம கிழிக்கிற கோட்டத் தாண்டமாட்டா... உம்முடிவ சொல்லு..." என்று சொன்னார் சிதம்பரத்தின் தம்பி.

அப்போதும் சிதம்பரம் வாயைத் திறக்கவில்லை.

"அண்ணே... இப்புடி வா..." என்று அண்ணனைத் தனியாகத் தள்ளிக்கொண்டு போய்த் தம்பிகள் இருவரும் பேசினார்கள்.

"நாம எட்டு ஊருக்குப் போய்த் தேடினாலும் இந்தமாதிரி சம்மந்தம் கெடைக்காது... எடுத்தாலும் பங்காருப் பெட்டியை எடுக்கணும்... இருந்தாலும் சிங்காரக் கழுவில் இருக்கணுமுன்னு அந்தக் காலத்துல சும்மாவா சொன்னாங்க... ஏதோ நடந்தது நடந்து போச்சு... ஒத்துக்கண்ணே..." என்று ஒருவர் சொல்ல

"இனி கட்டுனத் தாலிய அறுத்துப்புட்டு மறுதாலியா கட்டமுடியும்... அப்புடியே கட்டுனாலும் அது மதிப்பா இருக்குமா...? பேசாம இந்தக் கல்யாணத்த ஒத்துக்கண்ணே..." என்று மற்றொருவர் உபதேசம் செய்தார்.

அவர்களுடைய பத்தாம்பசலித்தனமான பேச்சு அந்தக் கிராமத்து மனிதருக்குச் சரியாகப்பட்டது. மகளின் மனநிலை என்ன என்பதை அறிந்துக் கொள்ளாமலே அந்தக் கல்யாணத்தை ஆதரித்துவிட்டார்.

"சரி... நடந்தது நடந்து போச்சு... நாங்க மொறப்படிச் செய்றதச் செய்றோம்..." என்றார் வள்ளி பாட்டியிடம்.

அவருடைய பேச்சு அங்கிருந்த அனைவரையும் நிம்மதியடைய வைத்தது.

###

மெல்ல மெல்ல சுயநினைவுக்கு வந்து கொண்டிருந்த மான்விழி கண்களைத் திறக்க முயன்றாள். எதிரில் ஓர் ஆண் உருவம் மங்கலாகத் தெரிந்தது. தலை பாரமாக இருந்தது... மீண்டும் கண்களை மூடி மழுங்கிப்போயிருந்த நினைவுகள் மீட்டெடுக்க முயன்றாள். சிலநிமிட போராட்டத்திற்குப் பிறகு அவள் கடத்தப்பட்டிருக்கிறாள் என்கிற விஷயம் அவள் மூளையில் உரைத்தது.

மனதின் வேகம் உடலுக்குத் தெம்பைக் கொடுக்க, சட்டெனப் படுக்கையிலிருந்து எழுந்தமர்ந்தாள். ஒரு கையால் தலையைத் தாங்கிப் பிடித்தபடி எதிரில் நின்று கொண்டிருந்தவனைப் பார்த்தாள்.

"நீ... நீ... அன்னிக்குப் பாலத்துல, என்னுகிட்ட வம்பிழுத்தது நீதானே...!" என்று சோர்வானக் குரலில் முயன்று உறுதியைக் கொண்டுவந்து கேட்டாள்.

'ஓஹோ... அந்தச் சுண்டெலிதானா நீ... அன்னிக்கு சுடிதார்ல சின்னப்பொண்ணா தெரிஞ்ச... இன்னிக்குப் புடவைல பெரிய பொண்ணாதான் இருக்க...' அவன் புன்சிரிப்புடன் அவளைப் பார்வையால் அளவெடுத்தான்.

அவனுடைய பார்வையைத் தவறாகப் புரிந்துக் கொண்டவள் "ஏய்... யார்டா... நீ...? எதுக்கு என்ன இங்க தூக்கிட்டு வந்துருக்க...?" என்று கடுப்பாகக் கேட்டாள்.

அவன் முகம் சட்டென சிரிப்பைத் தொலைத்து இறுகியது... எடுத்த எடுப்பில் 'டா....' போட்டு அவள் அழைத்ததில் இளகியிருந்த அவன் மனம் மீண்டும் முறுக்கிக் கொண்டது. பல்லைக் கடித்தபடி அவள் கழுத்தைச் சுட்டிக்காட்டி... "உனக்குத் தாலிக் கட்டின புருஷன்..." என்றான் அழுத்தம்திருத்தமாக.

அவள் பதறியடித்துக் கொண்டு தன்னை ஆராய்ந்தாள். பட்டுப்புடவை... நகைகள்... பூ... இது எல்லாவற்றிற்கும் மேலாக இந்த மஞ்சள்கயிறு...

"ஆ... ஐயோ... ஐயையோ... நீ... நீ ஏன்டா என் கழுத்துல தாலிக் கட்டின... பாவி... படுபாவி..." கட்டிலிலிருந்து எழுந்து ஆத்திரத்துடன் கத்தினாள்.

"ம்ம்ம்... எல்லாரும் எதுக்குத் தாலிக் கட்டுவாங்க... கல்யாணம்

பண்ணிக்கிட்டுக் குடும்பம் நடத்தத்தான்..."

"ஹாங்... குடு... குடும்...பமா... அடப்பாவி... ராட்சசா... அரக்கா... உன்ன கொல்லாம விடமாட்டேன்டா..." என்றபடி ஆவேசத்துடன் கையில் கிடைத்த பொருட்களை எல்லாம் அவன் மீது வீசியடித்தாள்.

அதையெல்லாம் அலட்சியமாக ஒதுக்கியவன் அவளை நெருங்கினான். அவள் பின்னால் தள்ளாடியபடி நகர்ந்தாள். இவன் இரண்டே எட்டில் அவளிடம் நெருங்கி அவளுடைய இரு புஜங்களையும் உறுதியாகப் பிடித்து உலுக்கி,

"ஏய்... எதுக்குடி இப்ப கத்துற...?" என்று அடிக்குரலில் சீறினான்.

"ச்சி... கையை எடுடா... என்ன தொட்ட உன்ன கொன்னே போட்டுடுவேன்... பொறுக்கி... கைய விடு... விடுடா..." என்று அவள் கத்தக் கத்த அவனுடைய பிடி இறுகியது.

அவளுக்கு வலித்தது... தன்மானம் அதை வெளியே சொல்லவிடாமல் தடுக்க, வேதனையில் கண்களில் நீர் துளிர்த்தது... வார்த்தைகளும் அடங்கின.

அவளுடைய வேதனையை உணர்ந்தவனின் பிடி மெல்ல இளகியது...

"இங்க பாரு... ஒம்பேரு என்ன...? ம்ம்ம்... மான்விழி... மான்விழிதானே...! ஆமாம்... மான்விழிதான்...! இங்க பாரு மான்விழி... நான் சொல்றத நல்லா கேட்டுக்க... நா ஒன்னும் உன்ன பாத்து மயங்கி... உன் அழகுல உருகி... உனக்குத் தாலிக் கட்டல... ஊர வாழவிடாம பண்ணிக்கிட்டு இருக்க உங்கப்பனை வழிக்குக் கொண்டு வரத்தான் உங்கழுத்துல நாந்தாலிக் கட்டவேண்டியதாப் போச்சு... கட்டிட்டேன்... கட்டின கடமைக்காக உன்ன காலம்பூரா வச்சுக் காப்பாத்தவும் போறேன்... ஒழுங்கா... பொண்டாட்டியா லட்சணமா, நான் சொல்றதக் கேட்டு நட.... இல்ல..." என்று சொல்ல வந்ததை முடிக்காமல் அவளைப் பார்வையால் மிரட்டினான்.

அவனுடைய மிரட்டலுக்கு அவள் பெரிதாகப் பயந்துவிடவில்லை என்றாலும் உடலின் சோர்வுக் காரணமாகவோ என்னவோ... அதற்குமேல் எதுவும் பேசாமல் அமைதியாகிவிட்டாள்.

"கீழ வா... உங்கப்பா வந்திருக்காரு... வந்து பாரு..." என்று அவளைக் கையோடு அழைத்துக் கொண்டு கூடத்திற்கு வந்தான்.

## அத்தியாயம் - 8

"இராசா மகளானாலும் கொண்டவனுக்குப் பெண்டு தான்."

சிதம்பரத்தைப் பார்த்ததும்.... "அப்பா....' என்ற அலறலுடன் தந்தையைப் பாய்ந்தோடிக் கட்டிக் கொண்டாள் மான்விழி. சிதம்பரமும் மகளின் கண்ணீரில் கரைந்து போனார்.

"அம்மாடி... ஒன்னுமில்லடா... பயப்படாத... இவங்கல்லாம் நம்ம சொந்தக்காரவங்கதான்டா... எல்லாரும் நமக்கு வேண்டியவங்கதான்... பயப்பட எதுவுமில்ல தாயி... கண்ணத் தொட... தொடச்சுக்க..." என்று கண்ணீருடன் மகளுக்குத் தைரியம் சொன்னார்.

மகளுக்கு முன் ருத்ரனின் குடும்பத்தை விட்டுக் கொடுக்காமல் தாங்கிப் பேசினார்.

"பெரியவீட்டுல வாழ்க்கப்பட நீ குடுத்து வச்சிருக்கணும் தாயி... என்ன ஒன்னு... மாப்ள என்னுகிட்ட நேரடியா கேட்டிருந்தா நானே செறப்பா கல்யாணத்தப் பண்ணி வச்சிருப்பேன்... அவசரப்பட்டுட்டாரு... அதுனால ஒன்னும் இல்லம்மா.. நீ கலங்காத..."

"இவங்கதான் உன்னோட அத்த.. மாப்ளையோட அம்மா... இதோ.. இந்த ஆத்தா தான் மாப்ளையோட ஆச்சி... இனி உனக்கும் ஆச்சி..." என்று அவர்கள் குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரையும் மகளுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்.

அப்போதும் முகம் தெளியாத மகளைத் தனியாக அழைத்துச் சென்று பெற்றவரும் சித்தப்பாக்களும் பேசினார்கள்.

"என்னம்மா இன்னமும் கொழப்பமா இருக்க...?"

"அந்தாளு எதுக்குப்பா என்ன கல்யாணம் பண்ணினாரு...? ஏதோ நீங்க ஊர வாழவிடாமப் பண்றிங்கன்னு சொன்னாரே...!" என்றாள்.

மகளின் கேள்வியைக் கேட்டதும் சிதம்பரம் சிவாஜிகணேசனாக மாறிவிட்டார். 'அடப்பாவிப் பாயலே... இதுதான் உண்மையான காரணமாடா...? பொண்ணக் கடத்திட்டு வந்து தாலிக் கட்டின நிமிஷத்துக்குள்ள எம்பொண்ணுகிட்ட என்ன பத்தித் தப்பாச் சொல்லி அவளப் பயமுறுத்திட்டியேடா...' என்று தனக்குள் பொங்கிய எரிச்சலை வெளியே காட்டாமல்,

"அது சும்மா வயக்காட்டுப் பிரச்சனம்மா... அதெல்லாம் அப்பா சரி பண்ணிடறேன். நீ பயப்படாம இருக்கணும்டா..." என்று சாதாரணமாக மகளுக்குத் தைரியம் சொன்னார்.

சித்தப்பாக்களும் தங்கள் அண்ணனுக்கு ஒத்தூதினார்கள். ருத்ரனை விடச் சிறந்த ஆண்மகன் இந்த உலகிலேயே இல்லை என்பது போல் உயர்த்திப் பேசினார்கள். அவன் தங்களுக்கு மாப்பிள்ளையானது தங்களின் பாக்கியம் என்று பூரித்தார்கள். ருத்ரனுடனான அவளுடைய வாழ்க்கை ஓஹோவென்றிருக்கும் என்று ஆனந்தப்பட்டார்கள்.

'மகளின் விருப்பம் இல்லாமல் நடந்த ஒரு கடத்தல் கல்யாணத்தில் பெற்றவர்கள் இவ்வளவு மகிழமுடியுமா...!' மான்விழிக்குத்தான் குழப்பமாக இருந்தது. ஆனால் சிதம்பரம் சகோதரர்களுக்கு வேறு வழியில்லை.

இராசா மகளானாலும் கொண்டவனுக்குப் பெண்டு தான் என்று நினைத்தவர்கள் மகளின் வாழ்க்கை இதுதான் என்று ஆகிவிட்ட பிறகு அவளை எந்தவிதத்தில் மூளைச்சலவைச் செய்து அந்த வாழ்க்கைக்குத் தயாராக வேண்டும் என்பதைப் புரிந்து மான்விழியை மனதளவில் தயார் செய்தார்கள்.

ஆரம்பத்தில் “நான் இங்கு இருக்கமாட்டேன்... உங்களோடு வந்துவிடுகிறேன்... என்னையும் நம் வீட்டிற்கு அழைத்துச் செல்லுங்கள்...” என்று அழுது அடம்பிடித்த மான்விழி... தந்தை மற்றும் சித்தப்பாக்களின் இரண்டு மணிநேர ஓதலுக்குப் பின் ஓரளவுச் சமாதானமாகி அழுகையை நிறுத்திவிட்டு அந்த வீட்டில் தங்குவதற்கு அரைமனதுடன் சம்மதித்தாள்.

காரணம், அவளுக்குச் சுயமாக எந்த முடிவும் எடுத்துப் பழக்கம் இல்லை. விருப்பமிருந்தாலும் இல்லையென்றாலும் பெற்றவர்கள் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தே பழகிவிட்டதால் இந்தமுறையும் தன்னுடைய விருப்பத்தைத் துறந்துவிட்டுத் தந்தையின் முடிவை ஏற்றுக்கொண்டாள். ஆனால் ருத்ரனை மட்டும் அவளால் மன்னிக்கவே முடியவில்லை...

###

கல்யாணம்தான் திடுமென நடந்துவிட்டது... மற்றச் சடங்குகளெல்லாம் முறையாக நல்லநாள் பார்த்து நடத்தவேண்டும் என்பதற்காக ஐயரை அழைத்து நல்லநாளைக் குறித்து வாங்கிக் கொண்டார்கள் அந்த வீட்டுப் பெரியவர்கள். திருமணம் நடந்த நாளிலிருந்து அடுத்த ஐந்தாவது நாள் அமோகமான நாள் என்று ஐயர் சொல்லிவிட்டுப் போய்விட்டார். அன்றே ஊருக்கும் உறவினருக்கும் விருந்துக் கொடுக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

மான்விழிக்கு ஒவ்வொரு நொடியும் யுகமாகக் கழிந்தது அந்த வீட்டில்.

ஒரு பிடி உணவுக் கூடத் தொண்டையை விட்டு இறங்க மறுத்துச் சண்டித்தனம் செய்தது. எதிரியின் வீட்டில் வசிப்பது போல் ஓர் அசௌகர்யம் அவளை ஆட்டிப்படைத்தது. வேதனைக்குரிய தன் நிலையை மறப்பதற்காகத் தன்னைச் சுற்றி நடப்பவைகளில் கவனத்தைச் செலுத்தினாள். பல அதிசயங்கள் அவள் கண்ணில் புலப்பட்டன.

தூக்கம் வராமல் அதிகாலையிலேயே விழித்துப் படுக்கையில் புரண்டு கொண்டிருக்கும் மான்விழி நான்கு மணிக்கெல்லாம் ஜன்னல் வழியாகக் கீழே நடப்பவைகளை வேடிக்கைப் பார்ப்பாள்.

அந்த வீட்டின் மூத்த மருமகள் ராஜேஸ்வரி சாணம் தெளித்து... கூட்டிப் பெருக்கி... வாசலையடைத்துப் போடும் மாக்கோலம் கண்ணைக் கவரும்.

ருத்ரனின் அறை பால்கனியில் நின்று பார்த்தால் கடைக்கோடியில் இருக்கும் மாட்டுத்தொழுவத்தைப் பார்க்கமுடியும். அதிகாலை ஐந்து மணிக்கெல்லாம் மாட்டுத் தொழுவம் சுத்தம் செய்யப்பட்டு ஊதுபத்தி ஏற்றப்பட்டிருக்கும் வாசம் இவள் மூக்கைத் துளைக்கும்.

ஆறு மணிக்கெல்லாம் வேலைக்காரர்கள் முதல் வீட்டு ஆட்கள் வரை அனைவருக்கும் ஒரே தரத்தில் மணக்கும் காப்பி விநியோகிக்கப்படும்.

அவளுடைய பிறந்த வீடும் ஒரு விவசாயக் குடும்பம்தான். இவர்கள் அளவு இல்லையென்றாலும் அவர்களுக்கும் ஏக்கர் கணக்கில் நிலம் இருக்கத்தான் செய்தது. ஆனால் அங்குத் தோட்டவேலைச் செய்பவர்களுக்கு வீட்டில் சாப்பாடு கிடையாது. அவரவர் எடுத்துக் கொண்டு வந்துவிட வேண்டும். அவளுக்குத் தெரிந்து அந்தக் கிராமத்தில் எல்லோருமே அந்த முறையைத்தான் பின்பற்றினார்கள். ஆனால் ருத்ரனின் வீடு மட்டும் வித்தியாசமாக இருந்தது.

இங்கு வீட்டைச் சுற்றியிருக்கும் பெரிய தோட்டத்தில் வேலைச் செய்ய வரும் இருபதிலிருந்து முப்பது வேலைக்காரர்களுக்குத் தினமும் வீட்டில்தான் சமைப்பார்கள். கொள்ளைப்புறம் மண்ணில் அடுப்பைக் கட்டிப் பெரிய பேரல் போலப் பாத்திரங்களை வைத்துத் தினமும் சமையல்காரர்கள் வைதேகியின் மேற்பார்வையில் சமையல் செய்வார்கள். முதலாளி சாப்பிடும் அதே சத்தான உணவைச் சுடச்சுட தொழிலாளியும் சுவைப்பான்.

"இன்னைக்குப் பழைய சோத்துக்குத் தொட்டுக்க ஒன்னும் கொண்டாரல... எதுனாச்சும் இருந்தாக் குடு தாயி..." என்று கேட்கும் தன்

வீட்டு வேலைகாரர்களுக்கு முதல்நாள் மீந்துப்போன பழைய குழம்பைக் கொடுக்கும் தன் தாயை விட வைதேகி உயர்ந்தவளாகத் தெரிந்தாள்.

வேலைக்காரர்களை அதட்டி வேலை வாங்கும் பீமனும் தேவனும் அதே வேலைக்காரர்களுக்காகப் பாட்டியிடம் பரிந்துகொண்டு வரும்பொழுது வேறு மனிதர்களாக மாறிவிடுவார்கள். அவர்களுக்கு முன் வேலைக்காரர்களை மனிதர்களாகவே நடத்தாத தன் தந்தை மிகவும் தாழ்ந்திருப்பதாகத் தோன்றியது அவளுக்கு.

அடுத்தவர்களின் மீதான அக்கறையைக் கூட அதட்டலுடன் காட்டும் வள்ளி பாட்டி... அனைவரையும் அன்பிலேயே குளிப்பாட்டும் வைதேகி... எப்பொழுதும் கிண்டலும் கேலியுமாக இருக்கும் ராஜேஸ்வரி... கபடமில்லாத அவளுடைய இரு பெண் குழந்தைகள்... பொறுப்பான பீமன் மற்றும் தேவன்... என்று அந்த வீட்டில் ருத்ரன் ஒருவனைத் தவிர அனைவருமே நல்லவர்களாகத் தெரிந்தார்கள்.

பாட்டியிடம் இருக்கும் ஆளுமையும் அக்கறையும் அந்த வீட்டில் இருக்கும் நண்டு சிண்டுகளுக்குக் கூட இருந்தது அவளை வியக்க வைத்தது.

அவன் ஒருவன் மட்டும் இல்லையென்றால் இந்த வீடு சொர்க்கம்தான் என்று நினைத்தபடி நாட்களைத் தள்ளினாள். நான்கு நாட்கள் கழிந்து ஐந்தாவது நாள் விடிந்துவிட்டது... இடைப்பட்ட நாட்களில் ஒரே வீட்டில் இருந்தாலும் மான்விழி ருத்ரனைக் கண்ணால் கூடப் பார்க்கவில்லை. எப்போது வீட்டிற்கு வருகிறான் போகிறான் என்பதே தெரியவில்லை. இரவில் கூட வயலிலேயே தங்கிவிட்டான் போலும்...

'இப்படியே அவன் நம் கண்ணில் படாமலே இருந்து தொலைத்தால் நிம்மதி...' என்கிற அவளுடைய எண்ணத்தைப் பொய்யாக்குவது போலக் கதவைப் 'படார்...' என்கிற சத்தத்துடன் திறந்துகொண்டு அவள் இருந்த அறைக்குள் நுழைந்தான்.

அவள் அவனுடைய வேகத்தில் லேசாக அதிர்ந்தாலும் அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் அலட்சியமாகக் கையிலிருந்த பழைய குமுதத்தைப் பத்தாவது முறையாகப் புரட்டினாள்.

"ஏய்... என்னடி... திமிரா...?" அவன் பல்லை நறநறவெனக் கடித்தபடிக் கேட்டான்.

"யாருக்குத் திமிரு...? எனக்கா...!" அவளும் எதிர்கேள்விக் கேட்டாள்.

"மணி பதினொன்னாகப் போகுது... இன்னும் கொஞ்சநேரத்துல

எல்லாரும் வர ஆரம்பிச்சிடுவாங்க... நீ என்னடான்னா இப்படி உக்காந்துருக்க... இதுக்குப் பேரு திமிருல்லாம வேற என்ன...?" எரிச்சலுடன் கேட்டான்.

அவனும் என்ன செய்வான் பாவம்... வெளியூரில் இருந்த சொந்தபந்தங்கள் எல்லோரும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள்... சுற்றுவட்டாரத்தில் பழக்கப்பட்ட அனைவருக்கும் முறையான அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது... ஊரில் உள்ள அனைவரும் ஒன்றாகத் திரளப் போகிறார்கள். எளிமையாக நடந்து முடிந்த ருத்ரனின் திருமணத்திற்கு... ஆடம்பரமான விருந்து ஏற்பாடுச் செய்யப்பட்டிரும் போது, அந்த விழாவின் நாயகி குளிக்காமல், தன்னை அலங்கரித்துக் கொள்ளாமல்... பஞ்சத்தில் அடிபட்டவள் போல் அமர்ந்திருந்தால் யாருக்குத்தான் கடுப்பாகாது.

"ஏன்டி... அம்மாவும் ஆச்சியும் கிளிப்பிள்ளைக்குச் சொல்ற மாதிரி சொல்றாங்களாம்... நீ... சொல்லச் சொல்லக் கேக்க மாட்டேங்கிறியாம்... என்ன சங்கதி...? " அவன் கோபத்தை அடக்கிக் கொண்டு பொறுமையாகக் கேட்டான்.

"இந்த மெரட்டல்லாம் என்னுகிட்டே வேண்டாம்... இங்க நடந்திருக்கிற கல்யாணத்துக்கு விருந்தெல்லாம் ஒரு கேடா...? எனக்கு இதெல்லாம் சுத்தமாப் பிடிக்கல... நான் இந்த ரூம விட்டு வெளிய வரமாட்டேன்... விருந்துக்கு வர்றதுங்களுக்கு நல்லா ஆக்கிப் போடுங்க... கொட்டிக்கிட்டுக் கௌம்பட்டும்..." வெறுப்பாகப் பேசினாள்.

"ஓங்கி ஒன்னுக் குடுத்தேன்னு வச்சுக்க... மூஞ்சி மொகரையெல்லாம் பேந்துரும் ஜாக்ரத... என்ன...? ஊர்க் கூடுன சபைல என்ன அவமானப்படுத்தலாமுன்னு நெனக்கிறியா...? தொலைச்சிடுவேன்... தொலைச்சு..." அவன் சுட்டுவிரலை அவள் முகத்துக்கு நேராக நீட்டி எச்சரித்தான்.

"ஹும்..." என்று அவள் அலட்சியமாக முகம் திருப்பினாள்.

"ஏய்... என்னடி நொடிக்கிற...? நீ வந்து சபைல உக்காரலன்னா ஒன்னும் குடி முழுகிடாது... இன்னும் ஒரு மணிநேரம் இருக்கு விருந்தாளிங்க வர்றதுக்கு... அரை மணிநேரத்துல வீடு பூந்து உந்தங்கச்சியத் தூக்கிட்டு வந்து... தாலியக் கட்டிச் சபைல உக்கார வச்சிருவேன்... உன்ன தூக்க முடிஞ்ச எனக்கு உந்தங்கச்சியத் தூக்க முடியாதா...? பாக்குறியா... தூக்கிக் காட்டட்டுமா...? சொல்லுடி..."

அவனுடைய குரலில் இருந்த தீவிரம் அவளை உலுக்கியது. அவள் செயலிழந்துப் போனாள். அவன் முகத்தைப் பார்த்தபடியே நின்றாள்.

"பத்து நிமிஷத்துல திரும்ப வருவேன்... குளிச்சுட்டு... இந்தப் பட்டுப்புடவை... நகையெல்லாம் போட்டுக்கிட்டுத் தயாரா இருக்கணும்... இல்லன்னா நான் மனுஷனா இருக்கமாட்டேன்..." என்று மிரட்டிவிட்டு அந்த அறையிலிருந்து வெளியேறினான். அவள் கண்களில் தெரிந்த பீதி அவள் தயாராகப் பத்துநிமிடம் கூடத் தேவையில்லை என்பதை அவனுக்குச் சொன்னது.

'இப்ப மட்டும் என்ன மனுஷனாவா இருக்க... கொள்ளிவாய்ப் பிசாசு மாதிரி கண்ணுல நெருப்பப் பறக்கவிட்டுக்கிட்டுப் பேசுற ராட்சச ஜென்மம்தானடா நீ... போயும் போயும் உன்னோட என்ன கூட்டுச் சேர்த்தானே இந்த ஆண்டவன்...! எல்லாம் என் தலைவிதி...' என்று நொந்து கொண்டே குளியலறைக்குள் நுழைந்தாள்.

# # #

அந்தக் கிராமத்து திருமணவிருந்து பட்டிணங்களில் நடக்கும் திருமண வரவேற்பு போல் அல்லாமல் வித்தியாசமாக நடந்துமுடிந்தது. நடுவீட்டில் இருந்த சோபா செட், ஊஞ்சல் போன்ற பெரிய பொருட்களை எல்லாம் அப்புறப்படுத்திவிட்டு விசாலமான கூடம் தயார்ப்படுத்தப்பட்டிருந்தது. மணப்பெண் போல் அலங்கரிக்கப்பட்ட மான்விழி அந்தக் கூடத்தின் நடுவில் வீற்றிருக்க அவளைச் சுற்றி நெருங்கிய உறவுக்கார பெண்கள் அமர்ந்திருந்தார்கள். விருந்துக்கு வந்த அனைத்துப் பெண்களும் மான்விழியை வந்து சந்தித்து வாழ்த்துச் சொல்லிவிட்டுச் சென்றார்கள்.

ருத்ரன் பட்டுவேட்டிச் சட்டையில் வெளியே விருந்துக்காகப் போடப்பட்டிருந்த பெரிய பந்தலில் ஆண்களுடன் பேசிக்கொண்டும்... வருபவர்களை வரவேற்றுக் கொண்டும் இருந்தான். விருந்துக்கு வந்திருந்த பொட்டுப் பொடுசெல்லாம் பந்தலில் வைக்கப்பட்டிருந்த வெற்றிலைப்பாக்குத் தட்டில் இருந்த நிஜாம் பாக்கை ஒரு கை பார்த்துக் கொண்டிருந்தார்கள்...

ஓர் ஆட்டு மந்தையையும்... கோழிப் பண்ணையும் விருந்துக்குப் பலியாக்கி... மட்டன் பிரியாணி, மட்டன் சுக்கா, சிக்கன் கிரேவி, சிக்கன் 65, இரத்தப் பொரியல், குடல் கூட்டு, மூளை வறுவல், முட்டை அவியல் என்று அசைவ விருந்து அமர்க்களப்பட்டது.

"சைடு டிஷ் இங்க இருக்கு... மெயின் எங்கப்பா...?" என்று கேட்கும்

ஆண்களுக்கு வீட்டை ஒட்டியிருக்கும் தென்னந்தோப்பை கைகாட்டினார்கள் பீமனும் தேவனும். அங்கு வேறு தனியாகத் தள்ளாடும் தண்ணி பார்ட்டி நடந்து கொண்டிருந்தது.

இதுதான் கிராமத்தில் விருந்தைக் கொண்டாடும் முறையென்றாலும் அன்று அந்த வீட்டில் கூடியிருந்த மக்கள் வெள்ளம் அந்த விருந்தின் பிரம்மாண்டத்தைப் பறைசாற்றியது.

ஒரேயொரு விஷயம் மட்டும் மான்விழிக்குப் புதிராக இருந்தது... அவளுக்குத் தெரிந்துத் திருமணம் முடிந்துப் பெண் வீட்டுக்காரர்கள் மாப்பிள்ளை வீட்டிற்கு விருந்திற்கு வரும்பொழுது பெண்ணுக்குச் செய்ய வேண்டிய சீர்வரிசை அனைத்தையும் லாரியில் ஏற்றிக்கொண்டு வந்து சபையில் இறக்குவார்கள். ஆனால் இங்கு அது போல் எதுவும் வரவில்லை. சிதம்பரம் அவருடைய உறவினர்களை மட்டும்தான் திரட்டிக் கொண்டு வந்திருந்தாரே தவிர சீர் எதுவும் கொண்டு வரவில்லை...

'இந்த மண்ணாங்கட்டி மாப்பிள்ளைக்குச் சீர் ஒரு கேடா... என்று அப்பா நினைத்திருப்பார்...' என்று மான்விழி கற்பனைச் செய்து கொண்டாள்.

ஆனால் அதிலும் ஒரு குழப்பம் இருந்தது. விருந்துக்கு வந்திருந்த மான்விழியின் தாய், தங்கை மற்றும் உறவினர்கள் மாப்பிள்ளை வீட்டைக் கொண்டாடினார்கள். அவளை அதிஷ்டக்காரி என்றார்கள். சிலர் பொறாமையில் வெந்தார்கள். சிலர் மகிழ்ச்சியில் பூரித்தார்கள். ஆக மொத்தம் எல்லோர் மனத்திலும் கிடைப்பதற்கரிய பொக்கிஷம் மான்விழிக்குக் கிடைத்துவிட்டது என்கிற எண்ணம் நிரம்பியிருந்ததை அவளால் உணரமுடிந்தது. அப்படி இருக்கும்போது, 'மாப்பிள்ளைக்குச் சீர் ஒரு கேடா என்று அப்பா எப்படி நினைத்திருப்பார்...?' என்கிற குழப்பத்திற்கு அவளுக்கு விடை கிடைக்கவில்லை.

அன்று அந்தச் சபையில் சீர்வரிசை வந்து இறங்காததற்குக் காரணம் சிதம்பரம் இல்லை, ருத்ரன் தான் என்று தெரிந்தால் அவள் எப்படி ரியாக்ட் செய்திருப்பாளோ தெரியாது.

மாலை மயங்கியதும் கூடியிருந்த மக்கள் வெள்ளம் கரைந்தது. விருந்து என்கிற பெயரில் இவர்கள் அடித்த கூத்தில் மான்விழி வெகுவாகக் களைத்துப் போயிருந்தாள். அத்தோடு அவளைவிடாமல் அன்றிரவே அவள் தலையில் அடுத்த அணுகுண்டையும் தூக்கிப் போட்டார்கள்.

"மானு... குளிச்சிட்டுத் தலைய சீவி இந்தப் பூவ வச்சுக்கம்மா... புதுசா சாதா சீல எதுனாச்சும் இருந்தா அதக் கட்டிக்க..." மான்விழியுடன்

அன்று தங்கிவிட்ட அவளுடைய மாமன் மனைவி சொன்னாள்.

"தூங்கப் போறப்ப எதுக்கு மாமி இவ்வளவு பூ... வை நாளைக்கு வச்சுக்குறேன்... அதோட ஒரு நாளைக்கு ஒருதரம் குளிச்சா பத்தாதா... சும்மா சும்மா குளிகுளின்னு... போ மாமி..." என்றுவிட்டுக் கட்டிலில் சுருண்டுப் படுத்துக் கொண்டாள்.

அவளைக் கெஞ்சிக் கூத்தாடிக் குளிக்க அனுப்பினாள் அந்தப் பெண். அவள் குளித்து முடித்து மீண்டும் அறைக்குள் நுழையும்பொழுது அந்த அறையே மாறியிருந்தது. தேவையில்லாத பொருட்களெல்லாம் அப்புறப்படுத்தப்பட்டிருந்தது. கட்டில் மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. சிறு டீப்பாயில் பழங்களும் இனிப்பு வகைகளும் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது.

"மாமி... என்ன இதெல்லாம்...!" அவள் அதிர்ந்து போய்க் கத்தினாள்.

"ஏய்... ஷ்... ஷ்... எதுக்கு இப்புடிக் கத்துற...? மெதுவாப் பேசு மானு..."

"என்ன மாமி பண்ணுற இங்க... இதெல்லாம் எதுக்கு இப்ப...?"

"என்னா எதுக்கு...? நீ என்ன சின்னப் புள்ளையா...? இந்த ஏற்பாடெல்லாம் இப்பப் பண்ணாம வேற எப்பப் பண்ணுறது....? பேசாமத் தலையச் சீவிப் பூவ வச்சுகிட்டு லேசா பௌடர பூசிக்க. கண்ணுக்குத் தெரியிற மாதிரி நல்லா பெரிய பொட்டா வச்சுக்க..." என்று அதட்டலாகப் பேசி மான்விழியை அடக்கினாள்.

எதிர்த்து வாதாடிய இளையவளின் பேச்சு மாமியிடம் எடுபடவில்லை. தோற்று போனவளாய் அலங்காரம் செய்து கொண்டு 'உம்' என்ற மூஞ்சியுடன் அமர்ந்திருந்தாள்.

கதவுத் திறக்கும் சத்தம் கேட்டது. அவள் கால்கள் தானாக எழுந்து நின்றன. உள்ளே வந்தது ருத்ரன்தான். எப்பொழுதும் அவன் முகத்தில் அவள் காணும் கடுகடுப்பை இப்போது காணவில்லை. மாறாக ஒரு கனிவு. அதிலும் ஒரு கம்பீரம்.

"உக்காரு... உக்காரு... ஏன் நிக்கிற...?" அதட்டலான அக்கறை.

அவள் கட்டிலின் விளிம்பில் அமர்ந்தாள். இதயம் படபடவென அடித்துக் கொண்டது. அவனிடம் எந்தப் படபடப்பும் தெரியவில்லை.

கதவை அடைத்துவிட்டதால் இறுக்கமாக உணர்ந்தவன் இயல்பாக அவன் அணிந்திருந்த வெள்ளைச் சட்டையைக் கழட்டி ஹாங்கரில் மாட்டிவிட்டு பனியனுடன் காற்று வாங்க காற்றாடிக்குக் கீழே வந்து

அமர்ந்தான். அது அவளுக்கருகில் அமரும்படி ஆகிவிட்டது.

மூச்சுமுட்ட அவள் சட்டென எழுந்தாள். முகத்தில் அடி வாங்கியது போன்ற உணர்வில் அவனுடைய முகம் சுருங்கியது.

"என்ன ஆச்சு...?" பொறுமையை இழுத்துப் பிடித்துக் கொண்டு கேட்டான்.

"உங்களுக்கெல்லாம் மனசாட்சியே கிடையாதா...? ஏன் இப்படி இருக்கீங்க...?"

"ஏன்...? நான் என்ன செஞ்சேன்...?" அவன் புரியாமல் கேட்டான்.

"கல்யாணத்துல தான் என்னோட விருப்புவெறுப்புக்கு மதிப்பு இல்லாமப் போச்சு... மற்றதுக்காவது என்னோட விருப்பத்தக் கேக்கலாம்ல... இந்தக் கருமத்துக்கெல்லாம் இப்ப என்ன அவசரம்...?"

"கல்யாணமுன்னு ஒன்னு நடந்தா இதெல்லாம் இருக்கத்தான் செய்யும்... இதெல்லாம் இல்லாம இங்க என்ன பொம்மக் கல்யாணமா நடந்திருக்கு...?" அவன் கடுப்புடன் கேட்டான்.

"ஆமா... குண்டாக்கட்டியா பொம்ம மாதிரிதானே என்ன தூக்கிட்டு வந்து தாலிக் கட்டுனிங்க... அப்பறம் இதுக்குப் பேரு பொம்மக் கல்யாணம் இல்லாம காதல் கல்யாணமா...?"

"இங்க பாரு மான்விழி... நாம ரெண்டு பேருமே விரும்பி இந்தக் கல்யாணத்தப் பண்ணிக்கல. ஆனாலும் நடந்த கல்யாணம் நடந்ததுதான்... நாம ஒன்னா சேர்ந்து வாழ்ந்துதான் ஆகணும். மாத்து வழியே கெடையாது..." பக்குவமாக எடுத்துச் சொல்ல முயன்றான்.

"எனக்கு உங்களச் சுத்தமா பிடிக்கல..." அவள் எடுத்தெறிந்துப் பேசினாள்.

"எனக்கும்தான் உன்ன ஆரம்பத்துல பிடிக்கல... இப்போ, பிடிக்கிற மாதிரி என்னோட மனச மாத்திக்கிட்டேன். நீயும் மாத்திக்க... எல்லாம் பிடிக்கும்..." மீண்டும் அவனுடைய பேச்சில் அலட்சியம் திரும்பியிருந்தது.

"நா இவ்வளவு தூரம் சொல்றேன்... புரிஞ்சுக்கவே மாட்டிங்களா...?" என்று அவள் எரிச்சலுடன் பொறியும் பொழுது "புரிஞ்சுக்கணுமுன்னுதான் நெனக்கிறேன்... நீ எங்க விடுற...?" என்றபடி அவன் அவளை நெருங்கிக் கொண்டிருந்தான்.

"இ... இங்...க பாருங்க... வே... வேண்டாம்... சொல்லிட்டேன்... அப்...

அப்புறம் நா... நா என்ன செய்வேன்னு எனக்கே தெ... தெரியாது..." அவள் மிரட்டலாகப் பேசிக் கொண்டே பதட்டத்துடன் பின்னடைந்தாள்.

இப்போது அவன் மீசைக்குளிருந்து லேசான சிரிப்பு எட்டிப்பார்த்தது... அதோடு அவன் கால்கள் அவளை நோக்கிப் பயணித்தன...

"சரி.. சரி... இருங்க... நா... நா... மனச மாத்திக்கணும்ல... அதுக்குக் கொஞ்சம் டைம் குடுக்கலாம்ல..." மானரோஷத்தை விட்டுக் கெஞ்சிவிட்டாள்.

அவளுடைய கெஞ்சலை அவன் மதிக்கவில்லை. பின்னடைந்துச் சுவரில் இடித்துக்கொண்டு விழித்தவளைத் தன்னுடைய இருகரங்களையும் சுவற்றில் ஊன்றிச் சிறைச் செய்தான்.

அவனுடைய செயலில் அதிர்ந்தவள் அடுத்து என்ன நடக்குமோ என்கிற பீதியில் விழித்தாள். அவளுடைய கண்களை ரசனையுடன் பார்த்தவன்,

"உனக்கு எம்மாமனாரு பொருத்தமான பேருதான்டி வச்சிருக்காரு..." என்றவன்... "மா...ன்...வி...ழி..." என்று அவளுடைய பெயரை ஒருமுறை அனுபவித்து உச்சரித்துவிட்டு "மயக்கும் மான்விழி..." என்றான் புன்னகையுடன்.

அவள் அவனை விசித்திரமாகப் பார்த்தாள்.

ஒரு கரத்தைச் சுவற்றிலிருந்து எடுத்து ஒற்றை விரல் கொண்டு நெற்றி காது கன்னம் எனக் கோலமிட்டபடி,

"மூக்கு முழியெல்லாம் நல்லாத்தான் இருக்கு... இந்த வாய்தான் கொஞ்சம் ஓவரா பேசுது... என்ன பண்ணலாம்..." என்று கேட்டு அவளை நடுங்க வைத்தான்.

இதழ்களை இறுக்க மூடி, விழிவிரித்துக் கண்களில் பயத்தைக் காட்டியவளைப் பார்த்துக் கட்டுப்படுத்த முடியாமல் சத்தமாகச் சிரித்தவன், அன்பாக அவள் கன்னத்தில் தட்டிப் "போய்த் தூங்கு" என்று அவளை விடுதலைச் செய்தான்.

குடுகுடுவென அவனிடமிருந்து விடுபட்டு அறையின் மறுகோடிக்கு ஓடியவள் அதுவரை அவஸ்த்தையுடன் அரைகுறையாக எடுத்துக் கொண்டிருந்த சுவாசத்தை ஆழமாக எடுத்துத் தன்னைச் சமன்படுத்திக் கொண்டாள்.

அவன் தன்னுடைய படுக்கையைத் தரையில் விரித்துப் படுத்து

நிமிடத்தில் உறங்கிவிட்டான்.

## அத்தியாயம் - 9

"அடுத்த வீட்டுக்காரனுக்கு அதிகாரம் வந்தால்

அண்டை வீட்டுக்காரனுக்கு இரைச்சல் இலாபம்"

அன்று காலை ருத்ரன் அவனுடைய அறையிலிருந்து கீழே வரும் பொழுது சிதம்பரம் மற்றும் அவரது பங்காளிகள் நான்கு பேரும் அவர்கள் குடும்பத்திலிருந்து மான்விழியின் தாயுடன் சேர்த்து மூன்று பெண்களும் வந்திருந்தார்கள்.

அவர்களை வரவேற்று முகமன் விசாரித்தான். பெண்கள் மூவரும் வைதேகியுடன் மான்விழியைத் தேடி உள்ளே சென்றுவிட, ஹாலில் அமர்ந்திருந்த ஆண்களை "வாங்க... சாப்பிட்டுக்கிட்டே பேசலாம்..." என்று அழைத்தான்.

"அதுக்கென்ன மாப்ள... இது நம்ம வீடு... எப்ப வேணுமுன்னாலும் சாப்டலாம்... ஆனா இன்னைக்கு உங்கள மறுவீட்டு விருந்துக்கு அழைக்க வந்திருக்கோம். உங்களுக்கும் மானுக்கும் இன்னைக்கு நம்ம வீட்லதான் சாப்பாடு..." சிதம்பரம் கூறினார்.

"அப்டியா...? என்னுகிட்டே யாரும் இதப் பத்திச் சொல்லவே இல்லையே..." அவன் வியப்பாகக் கேட்டான்.

"நேத்தே பெரியாத்தாட்ட சொல்லிட்டுப் போனேனே...!" சிதம்பரம் விளக்கம் கொடுத்தார்.

"என்ன ஆச்சி இதெல்லாம்..." பாட்டியைப் பார்த்துக் கடுப்படித்தான்.

"அட ஆமா ராசா... நாந்தான் சொல்ல மறந்துட்டேன்... சரி அதுனால என்ன... மானு கெளம்பித்தான் இருக்கு... நீயும் கெளம்பு..." இலகுவாகச் சொன்னார்கள்.

"ப்ச்... என்ன கேக்காம எதுக்கு இந்த ஏற்பாடெல்லாம் செய்றிங்க...?" அவன் கோபத்துடன் முறைத்தான்.

"என்ன ராசா இது...? கல்யாணம்னா மறுவீட்டு விருந்து இருக்கத்தானே செய்யும்... இதுல என்னாத்த நாங்க புதுசா ஏற்பாடு செஞ்சுப்புட்டோம்..." என்று அதட்டினார்.

அவன் பாட்டியை முறைத்துப் பார்த்துவிட்டு வேகமாக டைனிங் ஹாலுக்குள் சென்றான். வந்திருந்தவர்கள் குழப்பத்துடன் அவனைப் பார்த்துக் கொண்டிருந்த போது பாட்டி பதட்டத்துடன் அவனைப்

பின்தொடர்ந்தார்கள்.

"சாப்பாடு எடுத்து வைம்மா..." அவன் டைனிங் டேபிளில் அமர்ந்தபடித் தாயிடம் சொன்னான்.

"தம்பி... பெரியவங்க சொல்றதக் கொஞ்சம் கேளுப்பா..." என்று வைதேகி ஆரம்பிக்க அவன்,

"மான்விழி..." என்று சத்தமாக அழைத்தான்.

உள்ளறையில் தாய் மற்றும் சித்திகளுடன் பேசிக் கொண்டிருந்த மான்விழி ருத்ரனின் அழைப்பைக் கவனித்தும் அலட்சியமாக அமர்ந்திருந்தாள்.

"மானு... மாப்ள உன்ன கூப்பிட்றாரு... போயி என்னன்னு கேளும்மா..." என்கிற தாயின் சொல்லைத் தட்ட முடியாமல் எழுந்து வந்தாள்.

"சாப்பாடு எடுத்து வை..." என்றான் அதிகாரமாக. மான்விழி மறு பேச்சின்றி அவனுக்கு உணவைப் பரிமாறினாள். வைதேகி கையைப் பிசைந்தபடி மாமியாரைப் பார்த்தாள்.

"எதுக்குச் சாமி இம்புட்டுக் கோவம்...? பாட்டி சமாதானம் செய்ய முயன்றார்.

"என்னைக் கேக்காம எது செஞ்சாலும் நா இப்படித்தான் நடந்துக்குவேன்..."

உணவு பரிமாறியபடி இந்த நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த மான்விழிக்குக் காதில் புகையே வந்தது. 'எவ்வளவு திமிர்... இவனைக் கேட்காமல் ஒன்றும் செய்யக் கூடாதாம்... அதுவே இவன் மட்டும் ஒரு பெண்ணுக்கு அவளுடைய சம்மதமே இல்லாமல் தாலியே கட்டுவானாம்...! எந்த ஊர் ஞாயம் இது....?' அவள் கருவி கொண்டிருக்கும் போதே இவன் நிதானமாகக் காலை உணவை முடித்துக் கொண்டு ஹாலுக்குச் சென்றான்.

சிதம்பரம், பாட்டி சொல்லும் சமாதானத்தில் திருப்தியடையாமல் வாதாடிக் கொண்டிருந்தார். பீமனும் தேவனும் அந்த விஷயத்தில் தலையிடாமல் ஒதுங்கி அவர்களுடைய வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

சிதம்பரத்துடன் வந்தவர்கள் தங்களுக்குள் எதையோ பேசியபடி அமர்ந்திருந்தார்கள். அனைவரையும் நிதானமாகப் பார்வையால் ஒரு வட்டமடித்தவன் கடைசியாக சிதம்பரத்தைப் பார்த்து,

"மாமா... மேல வாங்க... பேசலாம்..." சொல்லிவிட்டு மாடியை நோக்கி நடந்தான். அவரும் அவன் பின்னால் சென்றார்.

###

"பாருங்க மாமா... நா சுத்தி வளச்சுப் பேச விரும்பல.... நான் எதுக்கு மான்விழியக் கல்யாணம் பண்ணினேனோ அது இன்னும் நடக்கல... அதுவரைக்கும் நீங்க என்னுகிட்டேருந்து எதிர்பார்க்கிறது எதுவும் நடக்காது... சீர்வரிச எதுவும் இங்க வரக்கூடாதுன்னு சொன்னப்பவே புரிஞ்சுக்கிட்டிருப்பிங்கன்னு நெனச்சேன்... வெளிப்படையா சொல்ல வச்சுட்டிங்க..." என்றான் தெளிவாக.

அவனுடைய பேச்சில் ஒருகணம் திகைத்தவர் உடனே சமாளித்துக் கொண்டு, "எனக்கு இருந்த சந்தேகத்த உறுதிப்படுத்தினதுக்குச் சந்தோஷம் மாப்ள... உங்ககிட்ட இனி நா எந்த எதிர்பார்ப்பும் வச்சுக்க மாட்டேன்... வாரேன்..." என்று சொல்லிவிட்டுத் துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு கிளம்பிவிட்டார்.

எதற்காக மணமக்கள் மறுவீட்டு விருந்துக்கு வரவில்லை என்பதை விளக்கிச் சொல்லாமலே தன்னுடன் வந்திருந்தவர்களைத் திரும்ப அழைத்துக் கொண்டு அங்கிருந்து கிளம்பிவிட்டார்.

விபரம் கேட்ட மனைவிக்குக் கோபத்தையே பதிலாகக் கொடுத்தார். ஏதோ பிரச்சனை என்பதை உணர்ந்து மற்றவர்களும் எதுவும் கேட்காமல் ஒதுங்கிக் கொண்டார்கள்.

ஆனால் மான்விழியின் தாய் கணவனுடைய கோவத்திற்குப் பயந்து ஒதுங்காமல் வீட்டிற்குச் சென்றதும் அவரைத் தனியாக அழைத்து விபரத்தைக் கேட்டுத் தெரிந்து கொண்டார்.

"அந்த நெலத்த மாப்ளைக்கு எழுதிக் கொடுத்துடுங்க... நமக்கு எதுக்கு இனிமே நெலம்... நம்ம புள்ளைங்க நல்லாருந்தா பத்தாதா...?" என்று எடுத்துச் சொன்னார்.

"நீ ஒன்னோட சோலியப் பாத்துக்கிட்டுப் போடி எனக்குத் தெரியும்..." என்று சிதம்பரம் எரிந்து விழுந்தார்.

"ஆ மா ... அடுத்த வீட்டுக்காரனுக்கு அதிகாரம் வந்தா அண்டை வீட்டுக்காரனுக்கு இரைச்சல் லாபமாம்... இந்தக் கோவத்தக் கொண்டு போய் உங்க மாப்பிள்ளைகிட்ட காட்ட வேண்டியது தானே..." என்று நொடித்துக் கொண்டு உள்ளே செல்லும் மனைவியின் முதுகை வெறித்தபடி,

"எம் பொண்ணக் கல்யாணம் பண்ணிட்டா என்னோட நெலத்தப் புடிங்கிடலாமுன்னு நெனச்சுட்டான். அதுமட்டும் நடக்கவே நடக்காது..." என்றார் சிதம்பரம் உறுதியாக.

அதன்பிறகு தினம் தினம் திருமணமான மகளை வீட்டுக்கு அழைத்துக்கொண்டு வந்து சீராட்ட முடியவில்லை என்று மனைவி புலம்புவதையும் அழுவதையும் சண்டையிடுவதையும் பொறுத்துக் கொண்டு அமைதிக் காத்தார்.

# # #

ஏற்கனவே தன்னுடைய சம்மதம் இல்லாமல் தன்னைக் கடத்திக் கொண்டு வந்து திருமணம் செய்ததால் ருத்ரனின் மீது கோபத்தில் இருந்த மான்விழி, இப்போது விருந்துக்கு அழைக்க வந்த தன் பெற்றோரை அவன் அவமதித்துவிட்டான் என்கிற கொலைவெறியும் சேர்ந்துகொள்ள அவனை எந்த விதத்திலாவது பழிவாங்கிவிட வேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்தாள். அடுத்த இரண்டாவது நாள் அவளுக்கு அதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது.

ருத்ரன் வயலில் மீன்குளம் வெட்டுவதற்கு ஆட்களை வரச் சொல்லியிருந்தான். அன்று பூஜைப் போட்டு அவர்களுக்கு அட்வான்ஸ் பணம் கொடுத்து குளம் வெட்ட ஆரம்பிக்க வேண்டும். காலை பதினொரு மணிக்கு வயலில் பூஜை. வீட்டில் எல்லோரும் தயாராகிக் கொண்டிருந்தார்கள்.

கைப்பேசியில் யாருடனோ பேசிக் கொண்டிருந்துவிட்டு பால்கனியிலிருந்து அறைக்குள் நுழைந்த ருத்ரன் மேஜைமீது எதையோ தேடினான். கிடைக்கவில்லை என்றதும் கொஞ்சம் படபடப்பாகி பீரோவைத் திறந்து தேடினான். கிடைக்கவில்லை...

"மான்விழி... இங்க பாஸ்புக் வச்சிருந்தேனே பாத்தியா...?"

"இல்ல..." அவள் ஒற்றை வார்த்தையில் பதில் சொல்லிவிட்டு அவனை வெறுப்பேற்றுவது போல் தன்னுடைய மேக்கப்பில் கவனம் செலுத்திக் கொண்டிருந்தாள்.

"இங்கதானே வச்சுட்டுப் போனேன்... அதுக்குள்ள எங்க போச்சு...?" அவன் கோபமாகக் கத்தினான்.

"என்ன கேட்டா... எனக்கென்ன தெரியும்...? வச்ச எடத்துல நல்லா தேடிப் பாருங்க..."

அவன் டென்ஷனாகிவிட்டான். சொட்டும் வியர்வையுடன் அறை

முழுவதும் தேடியும்... பீரோவை மூன்றுமுறை சலித்தும் கிடைக்கவே இல்லை.

மான்விழிக்குத் திருப்தியாக இருந்தது... "பாஸ் புக்குக்கு இப்ப அப்படி என்ன அவசரம்... இங்கதான் இருக்கும் தேடிக்கலாம் விடுங்க..." என்றாள் அசிரத்தையாக.

"குளம்வெட்ட வந்திருக்கவங்களுக்கு இன்னைக்கு அட்வான்ஸ் குடுத்தாகணும்... பெரிய அமௌன்ட்டு... ATM -லையும் எடுக்க முடியாது... என்ன செய்றது..." என்று தலையைப் பிடித்துக் கொண்டு கட்டிலில் அமர்ந்தவன்... ஏதோ தோன்ற சட்டென மனைவியை நிமிர்ந்து பார்த்தான்.

அதை எதிர்பார்க்காதவள் உதட்டில் தோன்றியிருந்த புன்னகையை நொடியில் மறைக்க முயன்றாள்.

'கவனிச்சிட்டானோ...!' என்று பயந்துப் போனாள்.

ஆனால் ருத்ரன் அவள் முகத்தைக் கூர்மையாகப் பார்த்ததோடு வேறெதுவும் சொல்லாமல்...

"சரி மான்விழி... நா டவுனுக்குப் போயிட்டு வயலுக்கு வந்தடறேன்... நீ மத்தவங்களோட கார்ல வந்துடு..." என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டுவிட்டான்.

'என்ன ரியாக்க்ஷனே குடுக்காமப் போறான்...! நம்மளக் கண்டுப்பிடிச்சானா இல்லையா...!' குழப்பத்துடன் அவளும் கீழே சென்றாள்.

மான்விழி எதிர்பார்த்தபடிக் குளம் வெட்டுவதற்கு அட்வான்ஸ் கொடுப்பதோ பூஜையோ தடைப்படவில்லை. எல்லாம் சிறப்பாக நடந்து முடிந்து குளம்வெட்ட ஆரம்பித்தாயிற்று. ஆனால் மறுநாள் விடிந்ததிலிருந்து அவள் எதிர்பார்க்காத விஷயங்களெல்லாம் நடந்து கொண்டிருந்தன.

###

அன்று காலை, தூக்கம் களைந்து சோம்பல் முறித்தபடி எழுந்து மணி பார்க்க கைப்பேசியைத் தேடினாள் மான்விழி. காணவில்லை...

'எங்க வச்சோம்...' என்று யோசித்துக் கொண்டே சுவர்கடிகாரத்தைப் பார்த்து மணியைத் தெரிந்து கொண்டு எழுந்து பாத்ரூம் நோக்கிச் சென்றாள்.

அதன்பிறகு கைப்பேசியை மறந்துவிட்டவள் காலை உணவு முடிந்தபின் தங்களுடைய அறைக்கு வந்து, பொழுதுபோக்கிற்காகத் தினமும் படிக்கும் 'பொன்னியின் செல்வன்' புத்தகத்தைத் தேடினாள். காணவில்லை. அப்போதுதான் அவள் மண்டைக்குள் மணியடித்தது.

"ஆஹா... வச்சுட்டான்டா ஆப்பு..." என்று சொல்லிக் கொண்டே வேகமாகக் கீழே இறங்கி ஓடினாள்.

வாசலில் ருத்ரன் புல்லட்டில் ஏறி அமர்ந்து ஸ்டார்ட் செய்தான். மனைவி ஓட்டமும் நடையுமாகத் தன்னை நோக்கி வருவதைக் கவனித்துவிட்டு சாவியைத் திருகி வண்டியை அணைத்தான். முகத்தில் புன்னகையுடன் கேட்டான்... "என்ன மா...ன்...விழி...?"

அவன் போட்ட ராகத்தில் எரிச்சலானவள் "என்னோட செல்போன் எங்க...?" என்றாள்.

"என்ன கேட்டா...?"

"பொன்னியின் செல்வன் புக்கு எங்க...?"

"எனக்கு எப்படித் தெரியும்..?" அவள் நேற்று சொன்னதை அப்படியே திரும்பச் சொன்னான்.

"பொய் சொல்லாதிங்க... அந்த ரூம்ல நாம ரெண்டு பேர் மட்டும்தான் இருக்கோம்... எனக்கு நல்லா தெரியும்... உங்களைத் தவிர அதை வேறயாரும் எடுத்திருக்க முடியாது..."

"உனக்கு அது மட்டுந்தான் தெரியுமா இல்ல என்னோட பாஸ்புக்கு எங்க இருக்குன்னும் தெரியுமா...?" அவன் நக்கலாகக் கேட்க இவள் திருதிருவென விழித்தாள்.

அவன் கடகடவெனச் சிரித்துவிட்டுச் சொன்னான். "சரி போ... அந்த செல்போனுக்கும் புத்தகத்துக்கும் இப்ப அப்படி என்ன அவசரம்... இங்கதான் இருக்கும் தேடிக்கலாம்..." என்றான்.

இதுவும் அவள் சொன்னதுதான். 'வார்த்தையைக் கூட மாத்தாம என்னமா ரிபீட்டு அடிக்கிறான்... சதிகாரா...' என்று நினைத்துக் கொண்டே

"ஹாங்... அது இல்லாம எப்படி...? எனக்கு இந்த வீட்டுல அது ஒன்னுதான் பொழுதுபோக்கு..." என்றாள் அதிர்ந்து போய்.

அவன் அவளுடைய இரண்டு கைகளையும் தன்னுடைய இரண்டு கைகளிலும் எடுத்து விரல்களோடு விரல்களைப் பின்னிக் கொண்டு,

"இந்தக் கைல என்னோட பாஸ்புக்கு... அந்தக் கைல உன்னோட பொழுதுபோக்கு... என்ன சொல்ற...?" என்றான்.

அவனிடம் தன்னுடைய கை சிக்கியிருக்கிறது என்பதையே கவனிக்காமல் 'மடக்கிட்டானே... பாவி...' என்று கருவி கொண்டே...

"ம்ம்ம்... ம்ம்ம்..." என்று முனகினாள்.

"சரி சீக்கிரம் போய் பாஸ்புக்க எடுத்துட்டு வா..." என்றான்.

அவள் கொண்டுவந்து கொடுத்ததும் அதை வாங்கிப் பத்திரப்படுத்திவிட்டு... "அண்ணி என்ன பண்ணிக்கிட்டு இருக்க...?" என்றான் தூரத்தில் மரத்தடியில் குழந்தைகளுடன் அமர்ந்திருந்த ராஜியைப் பார்த்து...

"புள்ளைங்களுக்கு மருதாணி வச்சுகிட்டு இருக்கேன் தம்பி..."

"மான்விழிக்கு பொழுது போகலையாம்... அதை இவகிட்ட குடுங்க... அழகா வச்சுவிடுவா..." என்றான்.

இவள் முறைப்புடன் அவனிடம் குரலைத் தாழ்த்தி "நா சொன்னேனா... எனக்கு மருதாணி கிருதாணியெல்லாம் வைக்கத் தெரியாது... என்னோட செல்லையும் புக்கையும் குடுங்க..." என்றாள் கடுப்பாக.

"உன்னோட பொழுதுபோக்கு இன்னிக்கு அந்தப் புள்ளைங்கதான் கண்ணு... பத்தரமா பாத்துக்க... வரட்டுமா..." என்று அனல்கக்கும் அவளுடைய விழிகளைக் காதலுடன் நோக்கி மொழிந்துவிட்டு,

"அண்ணி... பார்த்துக்கங்க..." என்று மான்விழியைக் கண்ணால் ஜாடைக் காட்டி ராஜியிடம் சொல்லிவிட்டு வண்டியைக் கிளப்பினான்.

###

அன்றிரவு ருத்ரன் படுக்கையறைக்குள் நுழையும்பொழுது அவனுடன் வந்த ஒரு எலக்ட்ரீஷியன் பையன் புது டிவியும், டிவிடி பிளேயரையும் கொண்டுவந்து செட் பண்ணி வைத்துவிட்டுச் சென்றான்.

ருத்ரன் கடுகடுப்பான முகத்துடன் அமர்ந்திருந்த மான்விழியை நெருங்கி அவள் கையில் ரிமோட்டைத் திணித்து "பொழுதுபோக்கு பிடிச்சிருக்கா..." என்று டிவியைக் காட்டிக் கேட்டான்.

அவள் அவனைப் பஸ்பமாக்கிவிடுவது போல் பார்த்தாள்.

அவளுடைய பார்வையில் சத்தமாகச் சிரித்தவன் "பிடிக்கல போலருக்கு..." என்று தனக்குள்ளே சொல்வது போல் சத்தமாகவே

சொல்லியபடி அவளிடம் ஒரு கவரை நீட்டினான். அவள் முறைப்புடன் வாங்கிப் பிரித்துப் பார்த்தாள். அவளுடைய கைப்பேசியுடன் புது மாடல் கைப்பேசி ஒன்றும்... பொன்னியின் செல்வன் நாவலோடு இன்னும் சில புத்தகங்களும் இருந்தன.

'ரொம்பத்தான் கரிசனம்...' என்று முணுமுணுத்தாலும் அவன் கொடுத்ததை மறுக்காமல் வாங்கி வைத்துக் கொண்டாள். ஏதாவது சொன்னால் ஹிட்லர் கொடுத்ததைப் பிடிங்கிக் கொண்டு போய்விடுவானோ என்று பயம். எத்தனை பேர் இருந்தாலும் அவளால் நாவல் படிக்காமலும் கைப்பேசி இல்லாமலும் இருக்கமுடியாது.

"இதுதான் முதல் முறைங்கறதுனால இதோட விட்டுட்டேன்... இனிமேலும் இதுமாதிரி சின்னப்புள்ளத்தனமா ஏதாவது பண்ணினா அப்புறம் நீதான் கஷ்டப்படுவ..." என்று புன்னைகை மாறாத முகத்துடன் சொல்லிவிட்டு "சரி வா... வந்து சாப்பாடு எடுத்து வை..." என்றபடி கீழே சென்றான்.

"பெரிய இவரு... வந்துட்டாரு கண்டிஷன் பண்ண.. அதுவும் சிரிச்சுக்கிட்டே.... ஆளையும் மூஞ்சியும் பாரு..." என்று திட்டிக் கொண்டே அவளும் கீழே சென்றாள்.

## அத்தியாயம் - 10

"கடித்த சொல்லினும் கனிந்த சொல்லே நன்மை"

மான்விழி தனக்கு அமைந்துவிட்ட வாழ்க்கையை விதியே என்று வாழ்ந்துக் கொண்டிருந்தாள். அடாவடித்தனமாகத் திருமணம் செய்து கொண்டாலும் அதன்பிறகு முடிந்த அளவு அனுசரணையாக நடந்து கொண்டான் ருத்ரன். அதேசமயம் அவ்வப்போது மனைவியின் அட்டகாசங்களை அதட்டி அடக்கவும் தயங்கமாட்டான்.

அவள் தன் குடும்பத்தாரோடு ஒட்டாமல் இருப்பதைக் கவனித்துத் தாயிடமும் அண்ணியிடமும் சொல்லி அவளைத் தனிமையில் விடாமல் இயல்பாகப் பேசி குடும்பத்தின் சிறு பொறுப்புகளை ஒப்படைக்கச் சொன்னான். அதன்மூலம் அவளையும் அந்தக் குடும்பத்தில் ஒருத்தியாக உணர வைத்தான்.

வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் அவளைச் சீண்டி விளையாடவும் தவறமாட்டான். அவன் இயல்பாகவும் அவள் வேறுவழியின்றியும் இரவு நேரத்தை ஒரே அறையில் கழித்தார்கள். ஒரு மாதம் கழிந்துவிட்ட பிறகு ஒரு நாள் புதிதாக ஒரு பிரச்சனைக் கிளம்பியது.

"மான்விழி... கோவிலூர்ல அப்பாவோட தங்கச்சி இருக்காங்கல்ல... பார்வதி அத்த... அவங்க வீட்டுக்கு நம்மள விருந்துக்குக் கூப்பிட்டுருக்காங்க... நாம போகணும். ரெடியாயிடு..." அன்று காலை உணவின் போது ருத்ரன் மனைவியிடம் சொன்னான்.

"கோவிலூருக்கா... நா வரல... நீங்க மட்டும் போயிட்டு வாங்க..."

"நம்ம கல்யாணத்துக்கு விருந்து குடுக்கக் கூப்பிட்டுருக்காங்க... நா மட்டும் எப்படிப் போறது...?"

"நாந்தான் வரலன்னு சொல்றேன்ல... "

"ப்ச்... நா எது சொன்னாலும் எதிர்ப்புச் சொல்லணுமா...? சும்மா என்ன சீண்டாம ரெடியாயிடு..." அவன் எரிச்சலுடன் சொன்னான்.

"முடியாது... முடியாது... முடியாது... நான் எங்கயும் வர மாட்டேன்..."

"எதுக்கு வரமாட்டேன்னு சொல்ற...?" அவன் விளக்கம் கேட்டான்.

"நீங்க எங்க வீட்டுக்கு விருந்துக்கு வரமாட்டேன்னு சொன்னப்ப நான் காரணம் கேட்டேனா...?" அவள் குத்தலாகப் பேசினாள்.

"ஓஹோ... அதுதான் விஷயமா... இங்க பாரு... உங்கப்பாவுக்கும் எனக்கும் ஒரு டீலிங் பெண்டிங்ல இருக்கு. அது நல்லபடியா முடிஞ்சபிறகு நாங்க ரெண்டுபேரும் ராசியாயிடுவோம். இதுல நீ குறுக்க வராம இருந்தா உனக்கு நல்லது. அரை மணிநேரத்துலத் திரும்ப வர்றேன். ரெடியா இரு..." என்று உத்தரவிட்டுவிட்டு வெளியேறினான்.

'ஆவுன்னா இந்த மிரட்டலுக்கு ஒன்னும் கொறச்சல் இல்ல... ஆளையும் மூஞ்சியும் பாரு... சரியான கொரங்கு மூஞ்சி... வெவ்வே...' என்று அவனுக்கு முதுகுக்குப் பின்னால் பழிப்புக் காட்டியவள் 'ஆமா.. அது என்ன அப்பாவுக்கும் இவனுக்கும் டீலிங்...! கல்யாணத்தன்னைக்குக் கூட இதே மாதிரி ஏதோ சொன்னானே...! அப்பாகிட்ட கேட்டப்ப மழுப்பலா ஏதோ சொன்னாரே...! சாயங்காலம் போன் பண்ணி விபரமா கேட்கணும்...' என்று திட்டமிட்டுக் கொண்டே கோவிலூருக்குத் தயாரானாள்.

###

முதல்முறையாக ருத்ரன் மனைவியைத் தன் புல்லெட்டில் அழைத்துக் கொண்டு வந்திருந்தான். காற்றின் வேகத்தில் கலைந்து அவன் பின்னங்கழுத்தை குறுகுறுக்க வைக்கும் அவளுடைய கேசத்தின் வருடல், ஒரு புது அனுபவத்தைக் கொடுத்தது. புத்தம் புதுப்

பட்டுப்புடவையின் வாசமும், தலையில் சூட்டியிருந்த மல்லிகையின் வாசமும் அவன் மூளையைக் கிறங்கடித்தது.

தெருவில் சில்லுக்கோடு விளையாடிக் கொண்டிருந்த பெண் குழந்தைகள் முதல், வாசலில் அமர்ந்து ஊர் கதைப் பேசிக்கொண்டே வெற்றிலைப் பாக்கை மென்று கொண்டிருந்த கிழவிகள் வரை... கிரௌண்டில் கிட்டி பில் விளையாடிக் கொண்டிருந்த ஆண் குழந்தைகள் முதல், ஒட்டுத் திண்ணையில் அமர்ந்து அரட்டையடித்தபடி துண்டு பீடியை ஊதிக் கொண்டிருந்த கிழவன்கள் வரை அனைவரும் ஊர்வலத்தை வேடிக்கைப் பார்ப்பதுபோல் தங்களை வேடிக்கைப் பார்த்ததை ருத்ரன் உல்லாசமாக அனுபவிக்க மான்விழியோ அவஸ்த்தையுடன் நெளிந்தாள்.

"இது என்ன...! இந்த ஜனங்க இப்படிக் காணாததக் கண்ட மாதிரி வெறிக்குதுங்களே...!" பின் இருக்கையில் அமர்ந்தபடி அவள் முணுமுணுப்பது அவனுக்குத் தெளிவாகக் கேட்டது.

"டெய்லி இந்தக் காட்சியக் கண்டா எதுக்கு இப்படிக் காணாததக் கண்ட மாதிரி வெறிக்கப் போறாங்க... உன்ன இன்னிக்கு ஒருநாள் வெளியே கௌப்பிக் கொண்டு வரவே எனக்கு மூச்சுமுட்டிப் போச்சு... இதுல தினமும் எங்கிருந்து கூட்டிட்டு வர்றது...?" அவன் அவளை வம்புக்கிழுத்தான்.

"ம்க்கும்... மில்ட்ரி ஆபீசர் மாதிரி எப்பவும் மெரட்டிட்டே இருக்கவரோட தினமும் வெளியே வந்துட்டாலும்... வெளங்கிடும்... கொஞ்சமாவது அன்பு... பாசம்னா என்னன்னு தெரிஞ்சிருக்கணும்..." அவள் நொடித்துக் கொண்டாள்.

"ஆடற மாட்ட ஆடிக் கறக்கணும்... பாடற மாட்டப் பாடிக் கறக்கணும்... மெரட்டலன்னா உன்கிட்ட வேலைக்காக மாட்டேங்குது... என்ன பண்ணச் சொல்ற...?"

"ஒன்னும் பண்ண வேண்டாம்... ரோட்டப் பாத்து வண்டிய ஓட்டுங்க..."

"அதெல்லாம் தானா ஓடும்... நீ சும்மா வெடக்கோழி கொழம்புல கொதிக்கிற மாதிரி கொதிக்காம வா..."

"வெடக்கோழியா...! என்ன நீங்க... மொதல்ல மாடுன்னிங்க... இப்ப கோழிங்கறிங்க... என்ன நெனச்சுகிட்டு இருக்கீங்க உங்க மனசுல..."

"மாட்டையும் நெனக்கல கோழியையும் நெனைக்கல... மானத்தான் நெனச்சுட்டு இருக்கேன்..." அவன் குறும்பாகச் சொல்ல, கப்பென்று

வாயை மூடிக் கொண்டாள்.

'என்ன ஆச்சு இவனுக்கு இன்னிக்கு... வசனமெல்லாம் எடுத்து விடறான்...!' அவள் சிந்தித்துக் கொண்டிருக்கும் பொழுதே ஒரு பழையகால மாடிவீட்டின் வாசலில் அவன் வண்டியை நிறுத்தினான்.

###

பார்வதி அத்தைக்கு மூன்று மகள்களும் ஒரு மகனும் இருந்தார்கள். அனைவருக்கும் திருமணம் முடிந்துவிட்டது. மகன் பிழைப்புத் தேடி வெளிநாட்டிற்குச் சென்றுவிட்டதால் வீட்டில் மருமகளும் மாமியாரும் மட்டும் ஒரு வயது குழந்தையுடன் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். இன்று ருத்ரன் மனைவியுடன் விருந்துண்ண வருவது தெரிந்து, மாமியார் வீட்டிலிருந்த பெண்கள் தாய்வீட்டிற்கு வந்திருந்தார்கள் அத்தானையும் அத்தான் மனைவியையும் வரவேற்க.

புல்லெட் சத்தம் கேட்டு பின்கட்டிலிருந்து ஓடிவந்த பார்வதி அத்தையின் மகள்களும் குழந்தைகளும்,

"வாங்க... வாங்க... வாங்க..." என்று விருந்தாளிகளைப் பலமாக வரவேற்றார்கள். சீட்டு விளையாடிக் கொண்டிருந்த அத்தையின் மருமகன்களும் விளையாட்டை விட்டுவிட்டு வந்திருந்தவர்களை முறையாக வரவேற்றார்கள்.

உடல் பருமனால் சிரமப்பட்டு நடந்து வந்த அத்தையும் தம்பதிகளை இன்முகத்துடன் வரவேற்று வீட்டிற்குள் அழைத்துச் சென்றார்கள். மணமக்கள் வீட்டிற்குள் வந்த பிறகு இடுப்பில் குழந்தையுடன் உள்ளேயிருந்து வெளிப்பட்ட அந்த வீட்டு மருமகள் மரியாதையுடன் வரவேற்றாள்.

ருத்ரன் அவர்களுக்காக வாங்கி வந்திருந்த பரிசுப் பொருட்களையும், இனிப்பு மற்றும் பழவகைகளையும் மான்விழி பார்வதி அத்தையிடம் கொடுத்தாள்.

"எதுக்கும்மா இதெல்லாம்..." என்று சம்பிரதாயமாகச் சொல்லிவிட்டு பெற்றுக் கொண்டார் அத்தை.

அந்த வீட்டுப் பெண்கள் அனைவருக்கும் மான்விழியை மிகவும் பிடித்துப் போயிற்று... அவர்கள் கபடமில்லாமல் பழகுவது இவளுக்கும் எளிதாக இருந்தது.

ஹாலில் அமர்ந்து ஆண்களுடன் கதையளந்து கொண்டிருந்த ருத்ரனின் சிந்தனையைக் கலகலவென உள்ளேயிருந்து வரும் பெண்களின்

சிரிப்புச் சத்தம் ஈர்த்துக் கொண்டே இருந்தது. லேசாகத் தலையைத் திருப்பி உள்ளே எட்டிப் பார்த்தான். மான்விழி தன் வயதையொத்தப் பெண்களுடன் மலர்ந்த முகத்துடன் சத்தமாகச் சிரித்துப் பேசிக் கொண்டிருப்பது கண்ணில் பட்டது.

'இவ்வளவு அழகா கூட உனக்குச் சிரிக்கத் தெரியுமா...!' என்று நினைத்தவன், அதன்பிறகு அங்கிருப்பவர்களுக்குத் தெரியாமல் அடிக்கடி மனைவியை நோட்டம்விட்டுக் கொண்டிருந்தான்.

இவ்வளவு நாளும் அவன் கண்ணில்படாத அவளுடைய வசீகரச் சிரிப்பு இன்று அவனைக் கட்டிப்போட்டது.

'அழகிதான்...' என்று பெருமைபட்டுக் கொண்டான்.

.அசைவ உணவை வெளுத்து வாங்கினார்கள். பீடாவும் சோடாவும் தேவைப்பட்டவர்கள் எடுத்துக் கொண்டார்கள். ஆண்கள் சீட்டு விளையாடினார்கள். பெண்கள் தோட்டத்தில் பறித்த பூவைத் தொடுத்தபடி ஊர் கதை அளந்தார்கள். பிறகு அனைவரும் அத்தை வீட்டுக் குலதெய்வத்தைக் கும்பிடச் செல்லும்போது தோப்பிற்குச் சென்று இளநீர் குடித்தார்கள்.

இன்பமாகக் கழிந்த அந்த நாளில் இன்னொரு முக்கியச் சமாச்சாரம்... புதுமணத் தம்பதிகளை அத்தை மகள்கள் பயங்கரமாகக் கேலி செய்துவிட்டார்கள். மான்விழி நாணத்தால் முகம் சிவக்க, ருத்ரனோ உலகஅதிசயத்தைப் பார்ப்பதுபோல் அவளது முகசிவப்பைப் பார்த்து வைத்தான். அவனுடைய பருகும் பார்வை மேலும் அவளை நாணமடையச் செய்ய, தலைக் கவிழ்ந்துக் கொண்டாள்.

'பார்வையப் பாரு... முழிய நோண்டணும்...' என்று அவள் உள்ளுக்குள் கருவினாலும்... அவளுடைய சம்மதத்தை எதிர்பார்க்காமல் மனம் அவனுடைய பார்வையை ரசித்துத் தொலைத்தது.

பொழுது சாய்ந்ததும் அனைவரிடமும் விடைபெற்று வீடு திரும்பும் பொழுது... "அப்படி என்ன கெக்கபுக்கன்னு சிரிப்பு அங்க...?" விளையாட்டாகக் கேட்டான்.

"ஏன் சிரிக்கக் கூடத் தடை உத்தரவா...?" வேண்டுமென்றே எப்பொழுதும் போல் அவனை எதிர்கேள்விக் கேட்டாள்.

"கோவிலூர்ல சிரிக்கறதுக்காகவே சோலையூர்ல வாய்ல ஜிப் போட்டு வச்சிருந்தியா...? இங்க சிரிச்ச சிரிப்புலக் கொஞ்சமாவது அங்கையும் சிரிக்கலாம்ல..." ஆவலுடன் கேட்டவனுக்கு நறுக்கென்று பதில்

சொன்னாள்.

"நல்ல மனுஷங்களப் பார்த்தா சந்தோஷம் வரும்... சந்தோஷம் வந்தா சிரிப்பு தானா வரும்... அங்கதான் ஒன்னுக்கும் வழியில்லையே..."

கடித்த சொல்லினும் கனிந்த சொல்லே நன்மை என்பது அவளுக்குப் புரியவில்லை. அவன் அமைதியாகிவிட்டான். இவ்வளவு நேரமும் சிரிப்பைச் சுமந்து கொண்டிருந்த அவன் முகம் சட்டெனச் சிறுத்துவிட்டதை புல்லெட்டின் பின் இருக்கையில் அமர்ந்திருந்த மான்விழியால் உணரமுடிந்தது.

அதன்பிறகு இருவருமே எதுவும் பேசவில்லை. அவன் மான்விழியை வீட்டில் இறக்கிவிட்டு விட்டு களத்துக்குப் போவதாகச் சொல்லிவிட்டு சென்றுவிட்டான். அன்றிரவு கூட வயலிலேயே தங்கிவிட்டான்.

## அத்தியாயம் - 11

"ஈக்கு விடம் தலையில், தேளுக்கு விடம் கொடுக்கில்"

மற்றவர்களிடமெல்லாம் அதிகம் பேசாமல் இறுக்கமாகத் திரியும் ருத்ரன் அவளிடம் மட்டும் இலகுவாகக் கேலிப் பேசுவதையும் சிரித்து விளையாடுவதையும் மான்விழி மனதிற்குள் ரசித்தாலும் அவளுக்குள் இருந்த கோபமும் குழப்பமும் அதை வெளியே காட்டவிடாமல் தடுக்க, அவனிடம் வெறுப்பை விடாமல் காட்டிக்கொண்டே இருந்தாள்.

அப்படித்தான் இன்று விருந்து முடிந்து வீட்டிற்கு வரும் பொழுதும் அவனிடம் முகத்திலடித்தது போல் பேசினாள். ஒவ்வொரு முறையும் அவளுடைய அலட்சியத்தைத் தன்னுடைய சிரிப்பாலும் தேவைப்படும்போது கடுமையாலும் அடக்கிவிடும் ருத்ரன் இன்று பதில் பேசாமல் அமைதியாகிவிட்டது அவளைச் சங்கடமடைய வைத்துவிட்டது.

தன்னுடைய விருப்பமோ சம்மதமோ இல்லாமல் தந்தையிடம் எதையோ ஜெயிப்பதற்காகத் தன்னைத் திருமணம் செய்து கொண்டவன்தான் ருத்ரன் என்பதை மறந்துவிட்டு,

'பாவம்... நான் ஒரு வார்த்தச் சொன்ன உடனே வாய மூடிட்டான்... யார்கிட்டயும் இப்படிப் பேச்சு வாங்கியிருந்திருக்க மாட்டான்... அதான் முகமே செத்துப் போச்சு...' என்று கணவனுக்காகப் பரிதாபப்பட்டுக் கொண்டே அன்றிரவு உறங்கினாள்.

###

அதேநேரம் வயலில் ருத்ரனும் மான்விழியைப் பற்றித் தான் நினைத்துக் கொண்டிருந்தான். தான் என்ன காரணத்திற்காக அவளைத் திருமணம் செய்தோமோ, அது இந்த நிமிடம் வரை நடக்கவில்லையென்றாலும், 'கிணற்று தண்ணீரை ஆற்று வெள்ளம் அடித்துச் சென்றுவிடாது...' என்கிற நம்பிக்கையில் அந்தப் பிரச்னையை ஆறப்போட்டிருந்தான்.

சந்தர்ப்ப சூழ்நிலையால் அமைந்துவிட்ட திருமண வாழ்க்கை என்றாலும் அதை நிறைவாக வாழ நினைத்து, செயல்படுத்திக் கொண்டிருந்தான். தன்னுடைய முயற்சியில் வெற்றிப் பெற்றுக் கொண்டிருப்பதாக நினைத்துக் கொண்டிருந்தவனுக்கு இன்றுதான் அதில் முதல் அடி விழுந்தது.

அத்தை வீட்டிற்குச் சென்று திரும்பியதிலிருந்து மனம் அமைதியை இழந்துவிட்டிருந்தது. காரணம், மான்விழி கடைசியாக உதிர்த்த வார்த்தைகள்தான்.

'குடும்பத்தில் உள்ள அனைவரும் இவளைத் தங்கத் தாம்புலத்தில் வைத்துத் தாங்குகிறார்கள்... இவள் என்னடாவென்றால் அவர்கள் யாருமே நல்லவர்கள் இல்லை என்கிறாளே...!'

'நான் இவளிடம் அன்பாகவே நடந்து கொள்ளவில்லை என்று குற்றம் சுமத்துகிறாளே...! எப்பப் பார்த்தாலும் சிடுசிடுவென்று இருக்க நான் என்ன சிடுமூஞ்சியா...? இவளே ஒரு சிடுமூஞ்சிக் கழுதை... இவள் என்னைச் சிடுமூஞ்சிங்கறா... ஊரார் வீட்டில் வஞ்சனையில்லாமல் சிரிப்பவள் சொந்தவீட்டில் சிரிக்கவே மாட்டாளாம்...! கிராதகி...!'

தான் சதிச் செய்து அவளைத் திருமணம் செய்து கொண்டிருக்கிறோம். அந்தக் கோபம் அவளுக்கு இருக்கத்தான் செய்யும் என்பதைப் புரிந்துகொள்ளாமல்... அவள் வேண்டுமென்றே சந்தோஷமாக இருக்க மறுக்கிறாள் என்பது போல் குற்றத்தை அவள் பக்கமே திருப்பினான் ருத்ரன்.

கோபமோ... ஆசையோ... என்ன காரணத்தினாலோ அவனுடைய எண்ணங்கள் முழுவதும் அவளையே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தன.

'சிரிக்கவில்லை என்றால் போயேன்...! எனக்கென்ன வந்தது...' என்று உதறிவிட்டு எப்பொழுதும் போல் அவனுடைய வேலைகளில் கவனம் செலுத்த முடியவில்லை ருத்ரனால்.

எப்படியாவது அவளைச் சந்தோசப்படுத்திச் சிரிக்க வை என்று கூவி கொண்டேயிருந்த மனதின் இம்சைத் தாங்காமல் ஒரு முடிவுக்கு வந்து,

விடிந்ததும் முதல் வேலையாக வீட்டிற்குக் கூடச் செல்லாமல் போர் செட்டிலேயே குளித்து உடை மாற்றிக்கொண்டு டவுனுக்குக் கிளம்பிவிட்டான்.

###

மான்விழிக்குத் தேவையான துணிமணி நகை இதர சாமான்கள் எல்லாமே வைதேகியும் ராஜியும் திருமணத் தினத்தன்றே இரவோடு இரவாக டவுனுக்குச் சென்று வாங்கிவந்து குவித்திருந்தார்கள். அதனால் ருத்ரன் தனிப்பட்ட முறையில் கைப்பேசியையும் புத்தகங்களையும் தவிரப் பெரிதாக மனைவிக்கு எதுவும் வாங்கிக் கொடுத்ததில்லை.

அதனால் இன்று அவளுக்கு ஒரு இன்ப அதிர்ச்சிக் கொடுக்க முடிவு செய்து டவுனில் உள்ள நகைக்கடை ஒன்றில் நுழைந்து அவளுக்குக் கொடுக்க வேண்டிய பரிசுப்பொருள் எதுவென்று தேடி அவன் மண்டையை உடைத்துக் கொண்டிருந்த நேரம், மான்விழியின் தங்கை காவ்யா அவளுக்கு ஒரு துன்ப அதிர்ச்சியைக் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

"ஹலோ..." காவ்யாவின் குரல் மான்விழியின் கைப்பேசியில் ஒலித்தது.

"சொல்லு காவ்யா..."

"மானு... உன்கிட்ட ஒரு முக்கியமான விஷயம் பேசணும்..."

"என்ன சொல்லு..."

"அத்தான் உன்ன ஏன் கல்யாணம் பண்ணிக்கிட்டாருன்னு தெரியுமா...?"

தங்கை தீவிரமாகக் கேட்க, தமக்கை பரபரப்பானாள். அவள் தந்தையிடம் கேட்டுத் தெளிவுபெற வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்த விஷயத்தைப் பற்றி இப்பொழுது தங்கை தானாகப் பேச ஆரம்பித்ததும் ஏதோவொரு படபடப்பு...

"ஏன் காவ்யா... எனக்குத் தெரியிலையே..."

"நம்ம கலியபெருமாள் சித்தப்பாகிட்டையும்... நாராயணமூர்த்திச் சித்தப்பாகிட்டையும் அத்தான் பிரச்சனைப் பண்ணினாரே ஞாபகம் இருக்கா..."

"ஆமாம்..."

"கடசியா அவங்க ரெண்டு பேர்கிட்டயும் மிரட்டி நிலத்த எழுதி வாங்கிட்டாராம் மானு..."

"என்னடிச் சொல்ற...?"

"நெஜம்தான்... அதுமட்டுமில்ல... கோபாலண்ணன்கிட்டயும் தகராறு பண்ணியிருக்காரு..."

"என்னன்னு...?"

"அண்ணன் யாரோ ஒரு பொண்ண லவ் பண்ணுதாம்... அதத் தெரிஞ்சுக்கிட்ட அத்தான் திடுதுப்புன்னு போயி அந்தப் பொண்ண நிச்சயம் பண்ணத் தேதிக் குறிச்சுட்டாராம்"

"ஐயையோ..."

"அப்பறம் அந்தப் பொண்ணு அண்ணனுக்கு போன் பண்ணிப் பேசியிருக்கு... அண்ணன் அத்தான வந்து பார்த்து அவரோட பங்குக்குக் கொஞ்சம் நெலத்த எழுதிக் குடுத்துட்டு நடக்க இருந்த கல்யாணத்த தடுத்துரிச்சாம்..."

"அப்பறம்..."

"அதுக்கப்பறம் தான் நீ மாட்டிக்கிட்ட..."

"என்னடிச் சொல்ற நீ...?" மான்விழி நடுங்கிக் கொண்டே கேட்டாள்.

"மானு... அத்தான் நம்ம அப்பாகிட்டயும் நெலத்தக் கேட்டு மெரட்டுறாரு போலருக்கு..."

"உனக்கு எப்படி இதெல்லாம் தெரியும்...?"

"வீட்லதான் டெய்லிக் கூத்து நடக்குதே... அப்பறம் எப்படித் தெரியாம இருக்கும்...? அப்பா நெலத்த அத்தானுக்குக் குடுக்க மாட்டேங்கிறாரு... அம்மா குடுக்கச் சொல்லுது... நேத்து ஃபுல்லா வீட்டுல ஒரே தகராறு..."

"அம்மா எதுக்கு அப்பாகிட்ட சண்டப் போடுது...?"

"நெலத்த அத்தானுக்கு எழுதிக் குடுக்கலன்னா உன்ன நல்லா வச்சுக்க மாட்டாங்களோன்னு பயப்படுது... அதோட அத்தானும் நீயும் கல்யாணம் முடிஞ்சதுலேருந்து இங்க வரவே இல்லைல்ல... அதான் அக்கம் பக்கத்துலயெல்லாம் கண்டபடிப் பேசிக்கிறாங்க போல... அதெல்லாம் அம்மா காதுக்கு வந்துருது... அம்மா டென்ஷனாகி அப்பாவக் காச்ச ஆரம்பிச்சுடுது... அவருக் கடுப்பாயி அம்மாவ அடுச்சுப்புடுறாரு..."

மான்விழியின் விழிகள் கோபத்தில் சிவந்துவிட்டன.

"சரி காவ்யா... நீ கவலைப்படாத... இந்தப் பிரச்சனைய நான்

பார்த்துக்கறேன்..." என்று தங்கைக்குச் சமாதானம் சொல்லி கைப்பேசியை அணைத்துவிட்ட மான்விழி... கணவனைக் கடித்துக் குதறிவிடும் வெறியில் அமர்ந்திருந்தாள்.

###

பன்னிரண்டு மணி உச்சி வெயிலில் டவுனிலிருந்து ஊர் திரும்பிய ருத்ரன் பசிக்கும் வயிற்றைப் பொருட்படுத்தாமல் மனைவியை மகிழ்ச்சிப்படுத்த துடிக்கும் மனதிற்கு முன்னுரிமைக் கொடுத்து வீட்டிற்குள் நுழையும்பொழுதே திண்ணையில் அமர்ந்திருந்த வள்ளி பாட்டியிடம்...

"ஆச்சி... அவ எங்க...?" என்றான்.

"யாரப்பா கேக்குற... மானையா...? "

"ஆமாம்... கூப்ட்டு மேல வரச் சொல்லு..." என்று சொல்லிவிட்டு மாடிக்குச் சென்றான்.

சிறிதுநேரத்தில் திரைசீலையை விளக்கிக் கொண்டு அவர்களுடைய அறைக்குள் நுழைந்தாள் மான்விழி,

"என்ன வரச் சொன்னிங்களாம்...?" என்று அலட்சியமான முகபாவனையுடன் கேட்டாள்.

"அத அங்க நின்னுக்கிட்டேதான் கேக்கணுமா...? இப்படி வந்து உட்காரு..." என்று கட்டிலில் தனக்கருகில் இடம் ஒதுக்கிக் காட்டினான்.

"அதெல்லாம் வேண்டாம்... எனக்குக் கீழ வேலை இருக்கு... எதுக்குக் கூப்டிங்கன்னு சொல்லுங்க..." அவள் வெடுக்கென்று சொல்ல அவன் தனக்குள் எழுந்த எரிச்சலைச் சிரமப்பட்டு அடக்கிக்கொண்டு,

"சரி... இந்தா... பிடிச்சிருக்கா பாரு.." என்று அவளிடம் ஒரு நகைப்பெட்டியை நீட்டினான்.

அதைக் கையில் வாங்காமலே 'என்னதிது..." என்றாள் முகத்தைச் சுளித்துக் கொண்டு.

இப்போது அவனுக்குள் மூண்ட எரிச்சலை அடக்கமுடியாமல்,

"ஒரு பொருளக் கொடுத்தா அதைக் கையில வாங்கணும்கற அடிப்படை அறிவுக் கூட இல்லையா உனக்கு..." என்றான் சுள்ளென்று.

அவளுக்கும் பயங்கரமாக ஆத்திரம் வந்தது... "யார் எதைக் குடுத்தாலும் வாங்கிட முடியுமா...? என்னன்னு கேட்டா சொல்ல

வேண்டியதுதானே...!" என்று கடுகடுத்தவள் அவனுடைய முறைப்பை அலட்சியம் செய்யமுடியாமல் அவன் கையிலிருந்து வெடுகென்று பிடுங்கிப் பிரித்துப் பார்த்தாள்.

நெக்லஸ், கம்மல், மோதிரம், ப்ரேஸ்லெட் என்று அழகிய நகைசெட் ஒன்று உள்ளேயிருந்து மினுமினுத்தது. அதன் அழகில் கொஞ்சமும் கவரப்படாமல்,

"ம்ம்ம்... வாங்கியாச்சு... பார்த்தாச்சு... அடுத்து என்ன...?" என்றாள் வெறுப்புடன்.

"ஏன்டி... என்னதான்டி நெனச்சுட்டு இருக்க நீ...? நேத்து என்னவோ அன்பு இல்ல அவரைக்கா இல்லன்னு மூக்கால அழுத......" அவன் பேசி முடிப்பதற்குள் இவள் இடையிட்டாள்.

"ஓஹோ... அதனாலதான் உங்க அன்ப நிரூபிக்க இத வாங்கிட்டு வந்திங்களாக்கும்...?" ஏளனம் தெறித்தது அவளுடைய பேச்சில்.

அவன் அவளைப் பஸ்பமாக்கிவிடுவது போல் முறைத்தான்.

"உம்பேச்சுக்கு மதிப்புக் குடுத்து வேல மெனக்கெட்டு டவுனுக்குப் போயிக் கடைகடையா ஏறி எறங்கி இத வாங்கிட்டு வந்தேன் பாரு... என்ன சொல்லணும்... உன்னையெல்லாம் தட்டி வைக்கலன்னா தலைமேல ஏறி உக்காந்துருவங்கறது சரியாத்தான் இருக்கு... திமிர் புடிச்சக் கழுத..."

"ஹலோ... போதும் கொஞ்சம் நிறுத்தறிங்களா...? நா திமிர் பிடிச்சக் கழுதையா...? அப்ப நீங்க யாரு...? திமிரு... அகம்பாவம்... பேராச... எல்லாமே பிடிச்சக் கழுத நீங்கதான்..."

அடுத்தநொடி ஜிவ்வென்று எரியும் கன்னத்தைக் கையால் தாங்கிப் பிடித்துக் கொண்டாள். கண்களில் பூச்சி பறந்தது. சில கணங்கள் தன்னை நிதானப்படுத்தித் திகைப்பிலிருந்து மீண்டவள் அவன் தன்னை அடித்துவிட்டான் என்கிற ஆத்திரத்தில் பொங்கினாள்.

"ஏய்... என்ன அடிக்கிற...? உண்மையச் சொன்னா கை நீட்டுவியா...?" முன்னெச்சரிக்கையாக அவனிடமிருந்து சிறிது விலகி நின்றபடிப் பேசினாள்.

"இங்க பாரு... மரியாதையா இதோட வாய மூடிக்க... இல்லன்னா என்ன நடக்குமுன்னு தெரியாது..." அவன் கடுமையான முகபாவனையுடன் எச்சரித்தான்.

"என்னய்யா நடக்கும்... அடிப்பியா...? எங்க இன்னொரு தடவ அடி பார்க்கலாம்... கொஞ்சம் கூட வெட்கமே இல்லாம ஊர்ல இருக்கவன் சொத்தையெல்லாம் மெரட்டி ஓசில எழுதி வாங்குற உனக்கே இவ்வளவு திமிர் இருந்தா... நேர்மையா நடந்துக்கற எனக்கு எவ்வளவு திமிர் இருக்கும்...?"

"ஏய்... எவன்ட்டடி நான் ஓசில சொத்த எழுதி வாங்கினேன்... விஷயம் தெரியாம உளர்ன... கொன்னே போட்டுடுவேன்..." என்று பாய்ந்து வந்து அவள் கழுத்தைப் பிடித்துவிட்டான்.

அப்போதும் அவள் அசரவில்லை. "கிழிச்ச... என்ன கொன்னுப் போட்டுட்டு எங்க அப்பாகிட்ட எப்படி நெலத்த எழுதி வாங்குவ...? செ... செத்தாலும் அந்த நில....த்த உனக்குக் கிடை....க்கவே விடமா...ட்...டே...ன்..." அவள் பேசப்பேச அவனுடைய பிடி இறுகியது.

காலையிலிருந்து பட்டினியாக இருந்த வயிறும், வெயிலில் அலைந்த களைப்பும்... அவள் பேசிய துடுக்கான வார்த்தைகளைப் பொறுத்துக்கொள்ள விடாமல் அவனுடைய கோபத்தைக் கிளறிவிட நொடியில் மிருகமாக மாறி அவளைத் தாக்கிவிட்டான்.

ஒருகட்டத்தில் அவளுக்கு மூச்சுவிட முடியாமல் தொண்டையடைக்க இருமலும் கண்ணீருமாக அவள் பயந்து போய் மிரண்டு விழித்தாள்.

அரண்டுப்போயிருந்த அவளுடைய தோற்றம் அவனை இளக்க "என்ன கொலைகாரனாக்காத... போய்டு..." என்று அவளைக் கட்டிலில் தள்ளி விட்டுவிட்டு வேகமாக அந்த அறையிலிருந்து வெளியேறினான்.

ருத்ரன் கோபமாக வெளியேறிய பிறகு, உடல்வலியை மீறி அவன் தன்னைக் கைநீட்டி அடித்துவிட்டான் என்கிற ரோஷத்தைத் தாங்கமுடியாமல் அழுதுத் தீர்த்தாள் மான்விழி. அரை மணிநேரம் கழிந்திருக்கும்... அறை வாசலிலிருந்து வேலைக்காரப் பெண்ணின் குரல் கேட்டது...

"அக்கா... மானக்கா... யக்கோவ்... பெரியாத்தா உங்களக் கூட்டியாரச் சொன்னிச்சுக்கா..."

"ம்ம்ம்.... வர்றேன்..." கம்மிப் போன குரலில் பதில் கொடுத்துவிட்டு எழுந்து சென்று கண்ணாடியைப் பார்த்தாள்.

கன்னத்திலும் கழுத்திலும் கைவிரல் பதிந்திருந்தது... கண்கள் அழுததால் சிவந்து வீங்கியிருந்தது.

அவள் எதையும் திருத்தி மறைக்க விரும்பவில்லை.

'ஈக்குத் தலையில் விஷம், தேளுக்குக் கொடுக்கில் விஷம்... உங்க பேரனுக்கு உடம்பெல்லாம் விஷம்... பாருங்க உங்க அருமைப் பேரனோட லட்சணத்தை...' என்று சொல்லாமல் சொல்லி பாட்டியின் முன் அவனைக் குற்றவாளியாக்கிவிட வேண்டும் என்கிற வேகத்தில், முகத்தைக் கூடக் கழுவாமல் அப்படியே படியிறங்கிக் கீழே வந்தாள். வந்தவள் அதிர்ந்து போய் மானசீகமாகத் தலையில் கைவைத்துக் கொண்டாள்.

## அத்தியாயம் - 12

"அறிந்தறிந்து செய்கிற பாவத்தை அழுதழுதுத்
தொலைக்கவேண்டும்."

உள்ளூரில்தான் மகளைத் திருமணம் செய்து கொடுத்திருக்கிறோம். அவளும் பிறந்த வீட்டிற்கு வருவதில்லை. நாமும் அவளைச் சென்று பார்ப்பதில்லை. இப்படியே எத்தனை நாட்களுக்கு இருக்கமுடியும் என்று நினைத்து மான்விழியைப் பார்க்க வந்திருந்தார்கள் சிதம்பரம் தம்பதியர்.

வேலைக்காரப் பெண் ஆச்சி கூப்பிட்டதாகச் சொன்னதால் அலங்கோலமான தோற்றத்துடனேயே மாடியிலிருந்து இறங்கிய மான்விழி ஹாலில் அமர்ந்திருந்த பெற்றோரைப் பார்த்ததும் அதிர்ந்துவிட்டாள்.

மகளின் கோலத்தைக் கண்டு "மானு... என்னடி அச்சு...?" என்று தாய் பதற்றத்துடன் எழுந்து ஓடி அவளை ஆராய... தந்தை திகைப்பு நீங்காமல் விதிர்த்துப் போய் நின்றார்.

ருத்ரனின் குடும்பத்திற்கும் அதிர்ச்சிதான். "என்ன தாயி ஆச்சு... ஏ(ன்) இப்புடி இருக்க...?" என்று பாட்டி விசாரிக்க... மாமியார் ஓரகத்தி எனப் பெண்கள் அனைவரும் அவளைச் சூழ்ந்துவிட்டார்கள்.

மான்விழிக்குத் தர்மசங்கடமாகிவிட்டது. அவர்களுடைய அன்பில் நெகிழ்ந்தவள் அழுதுவிட்டாள்.

"என்ன ஆச்சு...? எதுக்கு அழுவுற...? சொல்லு...?" என்று பிடிவாதமாகக் கேட்டப் பெற்றோருக்கும் உறவினர்களுக்கும் என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் தடுமாறினாள்.

"ஒன்னுல்ல... ரொம்ப நாள் கழிச்சு உங்களப் பார்த்ததும் அழுதுட்டேன்..." என்று பெற்றோரிடம் சொல்லிச் சமாளித்தாள்.

ஒருவர் கூட அதை நம்பவில்லை. பெற்றோர் எவ்வளவோ வற்புறுத்திக் கேட்டும் மான்விழிக்கு ஏனோ அந்த ராட்சசனை அவர்களிடம் விட்டுக்

கொடுக்க முடியவில்லை. அவனுடைய குடும்பத்தின் முன் அவனைக் குற்றவாளியாக நிற்க வைக்கத் துணிந்தவளுக்கு, அவளுடைய பெற்றோருக்கு முன் அவனைக் குற்றவாளியாக நிறுத்த மனம் வரவில்லை. அதற்காகத் தன்னைத் தானே நொந்து கொண்டு,

"எங்க ரெண்டுபேருக்கும் ஒரு சின்னச் சண்டைம்மா... அவர் அடிச்சிட்டார்... நானும் நாலு போடு போட்டேன்... வாங்கிக்கிட்டு மனுஷன் ஓடிட்டார்..." என்று தாயிடம் தனியாகச் சிரித்துக் கொண்டே சொல்லிச் சமாளித்தாள்.

பெற்றவளுக்கு மகளின் சிரிப்புக் கொஞ்சம் ஆறுதலாக இருந்தாலும் அவள் சொல்வதை முழுவதும் நம்ப முடியவில்லை. முகத்திலும் கழுத்திலும் பதிந்திருந்த விரல்தடங்கள் அந்தத் தாய்க்கு ஆயிரம் கதைகளைக் கற்பனைச் செய்துகொள்ள வழிவகுத்தது.

மகிழ்ச்சியும் உற்சாகமுமாக மகளைப் பார்க்க வந்தவர்கள் சோர்ந்துப் போய் வீடு திரும்பினார்கள்.

###

அன்றிரவு வயலிலிருந்து வந்து வாசலில் வண்டியை நிறுத்திய ருத்ரன் நேராகக் கிணற்றங்கரைக்குச் சென்று கைகால் கழுவிவிட்டு உணவுக்கூடத்திற்குள் நுழைந்தான். காலையிலிருந்து சாப்பிடாததால் சரியான பசி அவனுக்கு.

"சாப்பாடு எடுத்து வைம்மா..." அம்மாவிடம் சொல்லிவிட்டு டைனிங் டேபிளுக்கு முன் அமர்ந்தவன் "மான்விழி சாப்பிட்டாளாம்மா...?" என்று விசாரித்தான்.

"ம்ம்ம்..." என்று முனகலாகப் பதில் சொல்லிவிட்டு வைதிகி உம்மென்ற முகத்துடன் உணவுப் பரிமாறினாள்.

பீமன் வீட்டில் இல்லை. தேவன் மாடியில் அவனுடைய அறையில் இருக்கிறானோ என்னவோ... ஆளையே காணும். அண்ணி கூடச் சமையலறையிலிருந்து வெளியே வரவில்லை. பாட்டி வெற்றிலையை மென்றபடி டிவியில் சீரியல் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

எப்பொழுதுமே அவனிடம் அனைவரும் அளவோடுதான் பேசுவார்கள் என்றாலும் இன்று ஏதோ வித்தியாசமாக உணர்ந்தான். அந்த அமைதியைக் கலைக்க எண்ணி,

"பிள்ளைங்க எங்கம்மா...?" என்று சாப்பிட்டுக் கொண்டே அண்ணனின் குழந்தைகளைப் பற்றி விசாரித்தான்.

"தூங்கிருச்சுங்க..." ஒற்றை வார்த்தையில் பதில் சொல்லிவிட்டு மீண்டும் வாயை மூடிக்கொண்ட தாயை யோசனையுடன் பார்த்தான் மகன்.

அதே நேரம் டிவி சீரியல் கதாநாயகியை நாயகன் கன்னத்தில் அறைந்தான்.

"அறிஞ்சறிஞ்சு செய்ற பாவத்தை அழுதழுது தொலைக்கணும்டா பாவிப் பயலே...! பொட்டப் புள்ளைய அடிக்கிறியே... தேவலாமாடா இது...? (பெண்ணை அடிக்கிறாயே... முறையா இது...?) உங்கப்ப(ன்)... ஆத்தா நல்ல புத்திச் சொல்லி உன்ன வளக்கலையோ..." என்று பாட்டி டிவியைப் பார்த்துப் பொரிந்து கொண்டிருக்க, இங்கே ருத்ரனுக்குப் புரையேறிவிட்டது...

தலையில் தட்டிக்கொண்டு மடமடவெனத் தண்ணீரைக் குடித்தவன், பாட்டியை எரிச்சலுடன் பார்த்து...

"ஆச்சி... என்ன அங்க பொலம்பிக்கிட்டு இருக்க... நீ பேசுறது அங்க டிவில இருக்கவனுக்குக் கேக்குமுன்னு நெனச்சியா...?" என்று சீறினான்.

"அட என்ன ராசு நீ... அவனுக்குக் கேக்கலன்னா கெடந்துட்டுப் போவுது... நா எம்மன சாந்திக்குப் பேசிகிட்டுருந்துட்டுப் போறேன் விடு..."

"........................."

"கட்டிக்கிட்டு வந்த பொண்ணக் கை நீட்டி அடிக்கிறவனெல்லாம் ஒரு ஆம்பளையா நீயே சொல்லு...? நல்ல குடும்பத்துலப் பொறந்த எவனாச்சும் கட்டுன பொண்டாட்டிகிட்ட கை நீட்டுவானா...? அட அவ்வளவு எதுக்கு ராசா... நீயுந்தான் கல்யாணமானவன்... குடும்பஸ்தன்... ஆயிரம் பிரச்சனையோட அல்லாடிக்கிட்டு இருக்க... இருந்தாலும், உம் பொண்டாட்டிய ஒரு வார்த்தப் பேசியிருப்பியா... இல்ல அடிச்சிருப்பியா...?" பாட்டி ஏற்றிய வாழைப்பழ ஊசியில் அவனுக்கு உணவுத் தொண்டைக்குழியில் சிக்கிக் கொண்டது.

'ஆச்சிக்குத் தெரிஞ்சிருக்குமோ...! இல்ல எதார்த்தமாத்தான் பேசுதா...? தெரிஞ்சிருந்தா நேரடியா கேட்டுருக்குமே...!' என்று பலவிதமாகச் சிந்தித்துக் கொண்டே அவசரமாக வயிற்றை நிரப்பிக்கொண்டு மாடியேறித் தன்னுடைய அறைக்கு ஓடினான்.

###

மான்விழி நல்ல உறக்கத்தில் இருந்தாள். குழந்தை போல் சுருண்டு படுத்திருந்தவளின் முகத்தில் இப்போது அடிவாங்கிய தடம்

எதுவுமில்லை என்றாலும் லேசாக வீங்கியிருந்த அவளுடைய முகம் அவனுடைய குற்றவுணர்ச்சியை அதிகப்படுத்தியது.

'ச்ச... கை நீட்டிட்டேனே...' என்று நினைக்கையில் சுருக்கென்ற வலி அவன் மனதைத் தைத்தது.

'அவ்வளவு வேகமா அடிச்சிருக்கக் கூடாது... ரொம்ப வலிச்சிருக்கும்... பாவம்... எப்படித்தான் தாங்கினாளோ...' என்று அவளுக்கருகில் அமர்ந்துக் கன்னத்தை வருடினான்.

'ஒரு சின்னப் பொண்ணு ஏதோ தெரியாம பேசிட்டான்னா... நமக்கு அப்படி என்ன கோவம்...' என்று தன்னைத் தானே சாடிக் கொண்டான்.

'மன்னிச்சுடு மான்விழி... நான் மனுஷனே இல்ல... உன்ன போய் அடிச்சுட்டேனே...!' என்று கலைந்துக் கிடந்த அவளுடைய கேசத்தை காதோரம் ஒதுக்கியவன் நெற்றியில் காதலுடன் இதழ்பதித்துப் பின் விலகி தன்னுடைய படுக்கையைத் தரையில் விரித்துப் படுத்துக்கொண்டான். மனைவியைக் காயப்படுத்திவிட்ட வருத்தத்துடனேயே அன்றைய இரவைக் கழித்தான்.

###

அன்று சிதம்பரம் மருமகனைச் சந்திக்க மீன்குளத்திற்கு வந்திருந்தார். மீன் குஞ்சுகளுக்குத் தீனிப் போட்டுக் கொண்டிருந்த ருத்ரன் மாமனாரைப் பார்த்ததும்,

"வாங்க மாமா... என்ன இந்தப் பக்கம்... வீட்டுக்கு வந்திருக்கலாமே..." என்று வரவேற்றான்.

"உங்ககிட்ட ஒரு முக்கியமான விஷயம் பேசணும்... அதான் இங்க வந்தேன்"

அவருக்கு ஒரு பிளாஸ்டிக் நாற்காலியைக் காட்டி அமரச் சொல்லிவிட்டு வாய்க்காலில் கைகாலைக் கழுவிவிட்டு வந்து கட்டிலில் அமர்ந்து "சொல்லுங்க மாமா..." என்றான்.

"நாலாங்கர நெலத்த உங்க பேர்ல மாத்திக் குடுத்துடலாமுன்னு முடிவு பண்ணியிருக்கேன்..." என்றார்.

"என்ன திடீர்ன்னு...?"

"முந்தா நேத்து உங்க வீட்டுக்கு வந்திருந்தேன்..." என்று சொல்லிவிட்டுத் தயங்கினார்.

ருத்ரன் புருவம் சுருக்கி அவரைப் பார்த்தான். 'என்ன சொல்றாரு இந்த

மனுஷன்... முந்தா நேத்துன்னா...' அவன் மேலே யோசிப்பதற்குள் அவர் குறுக்கிட்டார்.

"எம்பொண்ணு பச்சப்புள்ள மாப்ள... எம்மேல இருக்கக் கோவத்த அதுங்கிட்டக் காட்டாதிங்க..."

ருத்ரனுக்குச் சட்டென விபரம் விளங்கிவிட்டது. 'அப்படின்னா... எனக்கும் மானுக்கும் நடந்த பிரச்சனை எல்லாருக்கும் தெரிஞ்சிருக்கு... ஆச்சி கூட ஒன்னும் தெரியாதமாரி என்னமா ஜாடப் பேசினிச்சு...' என்று நினைத்துக் கொண்டான்.

"நா இதுவரைக்கும் சம்பாதிச்சது... இனி சம்பாதிக்கப் போறது எல்லாமே எம் மகளுகளுக்குத்தான். அதுங்களுக்கு நிம்மதி குடுக்காத அந்த நெலம் எனக்கெதுக்கு... உங்களுக்கே எழுதிக் கொடுத்தடறேன்... எம்பொண்ண மட்டும் கண்கலங்க வச்சுடாதிங்க..." அவர் உருக்கமாகப் பேச ருத்ரன் அவசரமாக இடையிட்டான்.

"நீங்க தப்பா நெனச்சுட்டிங்க. அன்னிக்கு எனக்கும் மான்விழிக்கும் நடந்த பிரச்சனைக்கு இந்த நிலம் காரணமில்ல... இந்த நெலத்தக் காரணம் கட்டி உங்க பொண்ண நான் கஷ்டப்படுத்துவேன்னு நீங்க பயப்படவேண்டாம். கெளம்புங்க..."

"இல்ல... அன்னிக்கு என்ன பிரச்சனை நடந்திருந்தாலும் எம்பொண்ணு மேல நீங்க கை வச்சிருக்கக் கூடாது..."

"தப்புதான்..."

"இல்ல மாப்ள... உங்களுக்கு எம்மேல இருக்கக் கோவத்த உங்கள மீறி மானுகிட்டக் காட்டிடுவிங்க... அதுக்காகத்தான்..."

"அப்படியெல்லாம் எதுவும் நடக்காது... நீங்க கவலைப்படாதிங்க... அந்த நிலத்துக்காகத்தான் உங்க பொண்ண நான் கல்யாணம் பண்ணினேன். ஆனா அது தப்போன்னு இப்பத் தோணுது..."

பிரச்சனை நடந்த நாளிலிருந்து மான்விழி ருத்ரனிடம் சுத்தமாகப் பேசுவதே இல்லை. அவனாக ஏதாவது கேட்டாலும் பதில் சொல்வதில்லை. அவள் அவனை ஒதுக்குவது அவன் மனதிற்குக் கஷ்டமாக இருந்தாலும் அவனால் ஓரளவுக்கு மேல் இறங்கிப் பேச முடியவில்லை.

அவளை எப்படிச் சமாதானம் செய்வது என்று அவன் குழம்பிக் கொண்டிருக்கும் போதுதான் சிதம்பரம் நிலத்தை எழுதித் தருகிறேன் என்று வந்து நிற்கிறார்.

ஏற்கனவே நம் மீது பயங்கரக் கோபத்தில் இருக்கிறாள். 'செத்தாலும் அந்த நிலத்தை உனக்குக் கிடைக்கவே விடமாட்டேன்' என்று சபதம் வேறு செய்திருக்கிறாள். இந்த நேரத்தில் அவளுடைய சபதத்தைத் தவிடுப் பொடியாக்கிவிட்டு 'நிலத்தைக் கைப் பற்றிவிட்டேன்...' என்ற வெற்றியோடு அவள் முன் சென்று நின்றால் என்னாகுமோ... என்று மான்விழியின் கோபத்தை எண்ணி ஆளானப்பட்ட ருத்ரனே பயந்துபோய் நிலத்தை வேண்டாமென்று மறுத்தான்.

"மாப்ள...!" சிதம்பரம் ஆச்சர்யப்பட்டார்.

"அந்த நெலம் கட்டாயம் எனக்கு வேணும்தான்... ஆனா மான பணயமா வச்சு அத உங்ககிட்டேருந்து நான் வாங்க மாட்டேன்... நீங்க கௌம்புங்க..."

"இல்ல மாப்ள... இந்த நெலத்தால எனக்கும் வீட்டுல நிம்மதி இல்ல... உங்க மாமியாருக்கும் எனக்கும் தெனமும் சண்டைதான். இத உங்ககிட்ட ஒப்படைச்சா தான் எனக்கு நிம்மதி... மறுக்காம வாங்கிக்கங்க..." அவர் இறங்கி வந்து பேசினார்.

அவர் இவ்வளவு தூரம் சொன்னதற்குப் பிறகும் மனைவியின் கோபத்திற்குப் பயந்தால், நூறு குடும்பத்திற்கு நல்லது செய்ய முடியாது என்று மனதைத் தேற்றிக் கொண்டு எல்லாக் கோபத்தையும் ஒன்றாகச் சேர்த்து வைத்துச் சமாதானம் செய்துகொள்ளலாம் என்று நினைத்து நிலத்தை விலைப் பேசினான்.

"நெலத்துக்கான பணத்த வாங்கிக்கிட்டு எழுதிக் குடுங்க..." என்று ஒத்துக் கொண்டான்.

மாப்பிள்ளையிடம் நிலத்திற்கு ஈடாகப் பணம் வாங்க விருப்பமில்லை என்றாலும் அவனுடைய வார்த்தையை மதித்து ஒத்துக்கொண்டார் சிதம்பரம்.

நாளைக்கே பத்திரப்பதிவை வைத்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்துவிட்டு வீட்டிற்குப் புறப்பட்டான்.

###

மான்விழி அவளுடைய தாய்வீட்டிற்குத் தொலைபேசியில் அழைத்தாள். காவ்யாதான் எடுத்தாள்.

"காவ்யா... நல்லா இருக்கியா...?"

"நல்லா இருக்கேன் மானு... நீ எப்படி இருக்க?"

"ம்ம்ம்... அம்மாவும் அப்பாவும் எப்படி இருக்காங்க...? அங்க எதுவும் பிரச்சனை இல்லையே...?"

"அதெல்லாம் ஒன்னுமில்ல மானு... நாங்க எல்லாரும் நல்லா இருக்கோம். இனி உனக்கும் பிரச்சனை இருக்காது..." காவ்யா மகிழ்ச்சியாகச் சொன்னாள்.

அவள் ஏதோ சொல்கிறாள் என்று "ம்ம்ம்" போட்டுவிட்டு "அம்மாவக் கூப்பிடு..." என்றாள் மான்விழி.

"அம்மாவா... அம்மாவும் அப்பாவும் டவுனுக்குப் போயிருக்காங்களே... உனக்குத் தெரியாதா...?"

"எனக்கு எப்படிடி தெரியும்?"

"அத்தானும் தானே போயிருக்காரு. இன்னிக்கு நம்ப நாலாங்கர நெலம் அத்தான் பேருல பதிவாகுது. அத்தான் சொல்லலையா உன்கிட்ட?" தங்கை ஆச்சர்யமாகக் கேட்க,

"என்னது...!" என்று அதிர்ந்தாள் அக்கா.

"மானு... என்ன ஆச்சு...?"

"யாரு... யாருடி அந்தாளுக்கு நெலத்தக் குடுக்கச் சொன்னது...?"

"தெரியலையே மானு... அப்பாவும் அம்மாவும் சேர்ந்துதான் குடுக்கறதா முடிவு பண்ணியிருக்காங்க போல... ரெண்டு பேருமே சந்தோஷமாத்தான் கௌம்பிப் போனாங்க... நீ எதுக்குடி இப்படிக் கத்துற...? அத்தான வேற அந்தாளு இந்தாளுங்கற?" தங்கையின் பேச்சில் எரிச்சலடைந்தவள்,

"ப்ச்... வைடி போனை முதல்ல..." கடுப்படித்துவிட்டு போனை அணைத்துவிட்டாள்.

அவளால் ஜீரணிக்கவே முடியவில்லை. மூன்று நாட்களுக்கு முன்பு அவளுடைய கழுத்தைப் பிடித்து நெரித்தவன் இன்று அவளுடைய தந்தையிடமிருந்து நிலத்தைக் கைப்பற்றிவிட்டான்.

'அவ்வளவு பெரிய சண்டியராடா நீ... இப்படிச் சண்டித்தனம் பண்ணித்தான் இவ்வளவு சொத்தையும் சேர்த்து வச்சிருக்கியா... உன்ன சும்மா விடமாட்டேன்டா...' என்று கருவினாள்.

## அத்தியாயம் - 13

"பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது..."

ருத்ரனை எப்படியாவது பழிவாங்க வேண்டும் என்று வெறியாக இருந்த மான்விழிக்கு அவனைத் தீவிரமாக வதைக்க ஒருவழியும் கிடைக்கவில்லை. குறைந்தபட்சம் உறவினர்கள், தெரிந்தவர்கள் என்று எல்லோரும் அவனைக் கேள்விக் கேட்கும்படி செய்ய ஒரு திட்டம் தீட்டிச் செயல்படுத்தினாள்.

அன்று மதிய உணவு முடிந்ததும் வீட்டில் யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் வாசலில் மற்றும் மரத்தடியில் நிற்பது போல் நின்று பொடிநடையாகத் தாய்வீட்டிற்கு வந்துவிட்டாள். வீட்டில் காவ்யா மட்டும்தான் இருந்தாள். அவளைச் சுலபமாகச் சமாளித்துவிட்டுப் பெற்றோரின் வரவுக்காகக் காத்திருந்தாள்.

ருத்ரனின் வீட்டில் எல்லோரும் மான்விழி மாடியில் அவர்களுடைய அறையில் இருக்கிறாள் என்று நினைத்துக் கொண்டு அவரவர் வேலையில் கவனமாக இருந்தார்கள். மாலைப் பத்திரப்பதிவை முடித்துக் கொண்டு வீட்டிற்கு வந்த ருத்ரன் திண்ணையில் அமர்ந்து வேலையாட்களுடன் சேர்ந்து கடலை உடைத்துக் கொண்டிருத்த தாயிடம்,

"அம்மா... மான்விழிய மேல வரச் சொல்லு..." என்றபடி வீட்டிற்குள் சென்றான்.

"மானு மேலதாம்பா இருக்கு..." என்று சொல்லிவிட்டு வைதேகி தன்னுடைய வேலையில் கவனம் செலுத்தினாள்.

"சரிம்மா..." என்று சொல்லிவிட்டு மாடிக்குச் சென்ற ருத்ரன் உடனே கீழே வந்து "அவ அங்க இல்லம்மா... உள்ள இருக்காளா பாரு..." என்று சொல்லிவிட்டு சோபாவில் அமர்ந்து டிவியைப் போட்டான். சற்றுநேரத்தில் அந்த வீடே மான்விழியைக் காணாமல் கதிகலங்கியது.

வீட்டிலும் வீட்டைச் சுற்றி உள்ள தோட்டத்திலும் எங்குத் தேடியும் மான்விழி கிடைக்கவில்லை.

"வீட்டுல இத்தனை பேரு இருக்கீங்க... வீட்டுல இருக்க ஒரு பொண்ணு எங்க போனான்னு தெரியல... என்ன பண்ணிக்கிட்டு இருப்பிங்க அப்படி...? டிவியப் பாக்குறதும், ஊரு கதையை அளக்கறதும் தான் வீட்டுல இருக்க பொம்பளைங்களோட வேலையா... வீட்ல என்ன நடக்குது ஏது நடக்குதுன்னு கவனிக்கிறது இல்லையா...?" என்று பாட்டி, தாய், அண்ணி என்று யாரையும் விட்டு வைக்காமல் சகட்டுமேனிக்கு விளாசித் தள்ளிவிட்டு போனை எடுத்து மான்விழியின் கைப்பேசிக்கு அழைத்தான். ரிங் போய்க் கொண்டே இருந்தது. அவள் எடுக்கவில்லை.

பிறகு சிதம்பரத்திற்குத் தொடர்பு கொண்டான். அவர் இப்போதுதான் டவுனிலிருந்து பஸ்ஸில் வீட்டிற்குத் திரும்பிக் கொண்டிருப்பதாகத் தகவல் சொன்னார்.

'நாம வண்டியில வந்ததால சீக்கிரம் வந்துட்டோம்...' என்று நினைத்தபடி அவரிடம் மான்விழியைப பற்றி எதுவும் சொல்லாமல் 'வீட்டுக்கு வந்துட்டிங்களான்னு கேக்கதான் போன் பண்ணினேன்...' என்று சொல்லிச் சமாளித்துவிட்டு போனை வைத்தான்.

"மத்தியானம் நாங்க ரெண்டுபேரும் தான் தம்பி சாப்பிட்டோம்... இங்கதான் நின்னுச்சு... அதுக்குள்ள எங்க போனிச்சோ தெரியலையே...!" ராஜி கையைப் பிசைந்தாள்.

"மத்தியானம் மாட்டுக் கொட்டாயிக்குப் போயிட்டு வரயில பாத்தேன் ராசு... மரத்தடியில நின்னிச்சு... சரி... காத்துக்காவ நிக்கிது போலருக்குன்னு நா உள்ள வந்துட்டேன்... வந்தவ அப்புடியே செத்தக் கண்ணசந்துட்டேன்... பாவிமக எங்க போனாளோ தெரியலையே...!" வைதேகி பீதியுடன் புலம்பினாள்.

"அட என்னாத்துக்கு எல்லாரும் இப்புடிப் பதற்றிய...? அது என்னா ஒன்னுந்தெரியாத பச்சப்புள்ளையா...? இங்குட்டுதான் எங்கையாவது நிக்கும்... ஊரக் கூட்டிச் சேதி சொல்லாம... காதுங்காதும் வச்சமாரித் தேடிப்பாருங்க பொண்டுவளா(பெண்களே)..."

"ஆச்சி... என்ன சாதாரணமா சொல்ற...? நீதானே திண்ணையிலப் படுத்துருந்த... அண்ணி வெளியே போகும்போது பாத்தியா இல்லையா...?" தேவன் அதட்ட,

"ஆமாடாப்பா... எல்லாரையும் உலுக்கிப்புட்டு இப்ப என்ன புடிக்க வந்துட்டியா...? காலம் போன கடசில கண்ணுத் தெரியாம கெடக்குறவளுகிட்ட விசாரணப் பண்ணாம பெருமா கோயிலுப் பக்கம் போயித் தேடிப் பாருடா..." பாட்டி சாமர்த்தியமாகப் பேசித் தப்பித்துக்கொள்ளப் பார்க்க பேரன் விடாக்கண்டனாக அதற்கும் ஒரு பதிலடி கொடுத்தான்.

"ம்ம்ம்... இத்துனூண்டு டிவி பொட்டிலப் படத்தப் பாக்கும்போது மட்டும் நல்லா கண்ணுத் தெரியும்... அம்மாம்பெரிய உருவம் வெளியப் போகும் போது கண்ணுத் தெரியாமப் போய்டும்... பலே ஆளுதான் ஆச்சி நீ..."

"ப்ச்... தேவா... ஆச்சிக்கிட்டச் சண்டப் போடற நேரமா இது...? பெருமாள் கோயில்ல இருக்காளான்னு போயிப் பாத்துட்டு வா..." என்று தம்பியை அனுப்பி வைத்த ருத்ரன் சிந்தனையுடன் சோபாவில்

அமர்ந்தான்.

வீட்டில் நடக்கும் இவ்வளவு நாடகத்தையும் திண்ணையில் அமர்ந்துக் கடலை உடைத்துக் கொண்டிருந்த பெண்களும் கவனித்தார்கள். விஷயம் வெளியாட்களையும் சலசலக்க வைத்தது.

அவர்களின் சலசலப்பு அப்போது தான் வீட்டுக்குள் நுழைந்த ஒரு வேலைக்காரனின் காதிலும் விழ, அவன் விஷயத்தைக் கூர்ந்துக் கவனித்துவிட்டுத் திடீரெனச் சொன்னான்,

"அட... அண்ணி அங்க தெக்கித்தெருவுலல்ல இருக்காங்க... அந்தப் பக்கம் நடராசண்ணே வீட்டுக்கு வேலைக்குப் போன நா... இப்பதான் அங்கேருந்து வாரேன்... ".

சட்டெனத் திண்ணைப் பக்கம் தலையைத் திருப்பிய ருத்ரன் "சின்னப்பா... இங்க வா..." என்றான்.

முதல்முறையாக அந்த வீட்டுக்குள் நுழையும் சின்னப்பன் தயங்கித் தயங்கி கூச்சத்துடன் உள்ளே நுழைந்தான்.

"எங்க... யாரப் பார்த்த...?"

"நம்ப நடண்ணியதாண்ணே பாத்தேன்... சிதம்பரத்தையா வீட்டுக் கொல்லையில நின்னுகிட்டு இருந்தாங்க... நா இந்தப் பக்கம் நடராசண்ணே கொல்லையில வேலப் பாத்துகிட்டு இருந்தேண்ணே..."

"சரி நீ போ..." என்று அவனை அனுப்பினான்.

மான்விழி யாரிடமும் சொல்லாமல் தனியாகத் தாய்வீட்டிற்குச் சென்றிருக்கிறாள் என்கிற கோபம் எக்கச்சக்கமாக எழுந்தபோதும் அவள் பத்திரமாக இருக்கிறாள் என்கிற நிம்மதி அவனைக் கொஞ்சம் அமைதிப்படுத்தியது.

"இது என்னடாப்பா கூத்தா இருக்குது... கல்யாணம் முடிஞ்சு மொதமொதல்ல அம்மா வீட்டுக்குப் போறப்ப புருசனும் பொண்டாட்டியும் சேந்துப் போவாம... நீ வடக்கப் போ... நா தெக்கப் போறேன்னு... ரெண்டுபேரும் ரெண்டு தெசையிலப் போயி நிக்கிறிய...?" பாட்டி ருத்ரனைக் குற்றம் சொல்ல...

அவனோ, "இப்ப அதுனால என்ன கொறஞ்சுப் போயிட்டு... வேலையப் பாரு..." என்று முறைத்தான்.

"சரி விடுப்பா... அம்மா அப்பாவப் பாக்கணுமுன்னு தோணியிருக்கும்... இங்கதானே வீடு இருக்குன்னு போயிட்டுப் போலருக்கு... நீ போயி

அழைச்சுக்கிட்டு வந்துரு..." என்று வைதேகி இலகுவாகப் பேச, அதற்கும் எரிந்து விழுந்தான்.

"பாக்கத்தானே போயிருக்கா... பாத்துட்டு வருவா..."

இவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே அவனுடைய கைப்பேசி அலறியது.

"ஹலோ"

"மாப்ள... மானு இங்க வந்துருக்கு மாப்ள..."

"............................" அவன் எதுவும் பேசாமல் அமைதியாக இருந்தான்.

"நீங்க எதுவும் தப்பா எடுத்துக்காதிங்க மாப்ள... நா இப்பதான் இங்க வந்து சேர்ந்தேன். மானு வீட்டுக்கு வந்துருக்குன்னு சின்னப்புள்ள சொன்னிச்சு... ஒடனே உங்களுக்கு போனப் போட்டுட்டேன். மொதமொதல்ல பொண்ணும் மாப்ளையும் சேர்ந்துதான் வீட்டுக்கு வரணும்... மானு வெவரம் புரியாம அவசரப்பட்டு வந்துட்டு..."

"பரவால்ல மாமா.... அதுனால ஒன்னும் இல்ல... விடுங்க..." என்று அவன் சமாதானம் சொன்னதும்,

"சரி மாப்ள..." என்று எதையும் உடைத்துப் பேசாமல் பூசி மெழுகிப் பேசிவிட்டு போனை வைத்துவிட்டார் சிதம்பரம்.

'அப்பன் வீட்டுக்குப் போயிருக்கியா...? போடி... போ... நான் பனங்காட்டு நரிடி... உன் சலசலப்புக்கெல்லாம் அஞ்ச மாட்டேன்...' என்று நினைத்துக் கொண்டான் ருத்ரன்.

###

"மானு... நீ செஞ்சது கொஞ்சம் கூடச் சரியில்லடி... பெரியவங்க அத்தனை பேரு வீட்டுல இருக்கும்போது நீ எப்படி யாருகிட்டயும் சொல்லாம வந்த...? எங்கேருந்து வந்துச்சு உனக்கு இந்தத் துணிச்சல்...?" மான்விழியின் தாய் அவளைக் கண்டித்ததற்கு அவள் தயங்காமல் பதில் கொடுத்தாள்.

"நீங்க செஞ்சது மட்டும் சரியா... யாரக் கேட்டு நீங்க அந்தாளு பேர்ல நெலத்த எழுதிக் குடுத்திங்க...?"

"அந்த ஆளா...! என்னடிப் பேச்சல்லாம் ஒரு மாதிரி இருக்கு...?"

"சும்மா பேச்ச மாத்தாதம்மா... எதுக்கு நெலத்த அவருக்கு எழுதிக் குடுத்துட்டு வந்துருக்கிங்க...?"

மகளின் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாத தாய் கணவனைத் துணைக்கு அழைத்தாள்.

"என்னங்க நீங்க பேசாம நிக்கிறிங்க...? மாப்ளைக்குத்தானே குடுத்தோம். அதுக்கு எதுக்கு இவ இந்தக் குதிகுதிக்கிறா...?" என்று கணவனிடம் முறையிட்டுவிட்டு "பொம்பளப் புள்ளைக்கு இவ்வளவு கோவம் ஆகாதுடியம்மா... பாத்துக் கொஞ்சம் அடங்கிப் போ..." என்று மகளிடம் முடித்தாள்.

அவ்வளவுதான்... மான்விழிக்கு வந்ததே கோபம்... கண்களை உருட்டித் தாயை எரித்துவிடுவது போல் முறைத்து,

"ஓஹோ... பொம்பளைன்னா ஆம்பள என்ன செஞ்சாலும் அடங்கிப் போகணுமா...? அதுனாலத்தான் அன்னிக்கு அந்தாளு என்ன அடிச்சு மூஞ்சி முகரையெல்லாம் பேத்து வச்சிருந்தப்பவும்... அடங்கிப் போடி மகளேன்னு பேசாம வந்துட்டியா...?" என்றாள்.

"அடிப்பாவி... பேசாம வந்துட்டனா...! பேசாமலாடி வந்துட்டேன்...? எத்தன தடவக் கேட்டேன்... என்ன ஆச்சு... என்ன ஆச்சுன்னு... வாயத் தொறந்தியாடி நீ...?" தாய் பதற... மகள் சீறினாள்,

"ஆமா... அப்ப நா எதுவும் சொல்லலைதான்... ஆனா இப்பச் சொல்றேன். அந்தாளு என்ன அடிச்சுக் கொல்லப் பாத்தாரு... என்னோட கழுத்தப் பிடிச்சு நெரிச்சாரு... இதுக்கெலாம் ஞாயம் கெடச்சாதான் நான் அந்த வீட்டுக்குத் திரும்பப் போவேன்... இல்லன்னா போகவே மாட்டேன்... அதுமட்டும் இல்ல... இன்னிக்கு நீங்க அந்த ஆளுக்கு எழுதிக் குடுத்துருக்க நெலத்த என்னோட பேருக்கு மாத்தறதுக்கும் வழி பண்ணுங்க..." என்று ஒரு குண்டைத் தூக்கிப் போட்டுவிட்டுப் போய்விட்டாள்.

"என்னங்க இப்படிப் பேசிப்புட்டுப் போறா...? அங்க இவளக் காணமேன்னு தேட மாட்டாங்களா..?"

"நா மாப்ளைக்கு போன் பண்ணிப் பேசிட்டேன்... விடு..."

"என்னத்த விடு... இப்படிப் பேசிட்டுப் போறவள நீங்க கண்டிக்கக் கூடாதா...?"

"அது சொல்றதுலயும் ஞாயம் இருக்குல்ல... அவரும் பொண்டாட்டிய கை நீட்டியிருக்கக் கூடாது தானே..."

"ஊசிப்போன மொச்சையிலே உழக்கு வாங்க மாட்டாதவன், பாம்பே அல்வாயிலே பத்து டன் போடுன்னானாம்... பொண்டாட்டிக்கிட்ட

கைநீட்டாம இருக்க வக்குல்ல... இதுல மகளுக்கு ஞாயம் கேக்க வந்திட்டிங்களாக்கும்...? எல்லா ஜென்மமும் ஒரே குட்டையில ஊறின மட்டை தானே... நீங்க என்னத்த அவருகிட்டப் போயிக் கேக்கப் போறீங்க..."

சரியான நேரத்தில் மனைவி போட்டுத் தாக்கிவிட்டதை வெளியே காட்டிக் கொள்ளாமல்,

"அதெல்லாம் கேட்டுட்டேன் புள்ள... அவரு பண்ணினது தப்புதான்னு ஒத்துகிட்டாரு..."

"பரவால்ல... அந்த விதத்துல உங்களமாதிரி இல்லாம செஞ்சத் தப்ப ஒத்துக்கிட்டாரே... நல்ல மனுஷன்தான்..."

"சரி... சரி... பொலம்பாம நீ போயிப் படு... காலையிலப் பேசிக்கலாம்..." என்று அதட்டலாகவே பேசி மனைவியை அடக்கிவிட்டுப் படுக்கைக்குச் சென்றார் சிதம்பரம்.

###

"ந்தா வைதேயி... இப்புடி வா..." வேலைக்காரர்களுக்கு மாலை டீயை விநியோகித்துவிட்டு வீட்டுக்குள் நுழைந்த மருமகளைத் தடுத்துத் தன்னிடம் அழைத்தார் திண்ணையில் அமர்ந்திருந்த வள்ளி பாட்டி.

"என்னத்த...?"

"நீ பாட்டுக்கு இங்குட்டும் அங்குட்டும் போயிக்கிட்டு இருக்கியே... வீட்டுக்கு வந்த மருமவ அப்பமூட்டுக்குப் போயித் தங்கிப்புட்டாளே... அந்த வெசனமே இல்லையா ஒனக்கு...?"

"நேத்துதானத்த போனா... தம்பிதான் அவளா வரட்டுமுன்னு சொல்லிப்புட்டே.... நாம என்ன பண்ணுறது...?"

"அறுக்க மாட்டாதவன் இடுப்புல அம்பத்தெட்டு அருவாளாம்... அடிக் கூறுகெட்டவளே...! புருசனுக்கும் பொண்டாட்டிக்கும் ஏதோ மனக்கசப்புடி... அதான் ரெண்டுபேரும் ஆளுக்கு ஒரு பக்கமா இழுத்துக்கிட்டு நிக்கிதுங்க... இது புரியாம ரெண்டுங்கெட்டானா இருக்கியே... நீயெல்லாம் என்னடி பெரிய மனுஷி...?"

"நாம என்னத்த பண்ண முடியும்...?"

"அப்புடிக் கேளு..."

"சொல்லுங்க..."

"நீ கெளம்பிப் போயி அந்தப் பொண்ணைக் கூட்டியாந்துரு... நீ கூப்பிட்டா அவளுக்கும் வரமாட்டேன்னு சொல்ல முடியாது... இவனும் அவள எதுக்கு இங்க வந்தேன்னு கேக்க முடியாது..."

"அது சரியா வருமாத்த... தம்பிக்குத் தெரியாம நா அங்க போனா சத்தம் போட போறான்..."

"போட்டா வாங்கிக்க... என்னா பண்ணுறது... குடும்ப மரியாதையக் காப்பாத்தணுமுன்னா எல்லாத்தையும்தான் சமாளிக்கணும்..."

"சரித்த... நா கெளம்புறேன்... நீங்க டிரைவரைக் கூப்பிட்டு காரைக் கொண்டுவரச் சொல்லுங்க..."

"டிரைவரு பய எதுக்கு... அவனக் கூப்பிட்டுக்கிட்டுப் போக வேண்டாம்... நீ நம்ம தேவன வரச் சொல்லி அழைச்சுகிட்டுப் போ..." என்று மருமகளுக்குப் புத்திச் சொல்லி பேரனின் மனைவியை வீட்டிற்குக் கொண்டு வர வழிச் செய்தார் பாட்டி.

## அத்தியாயம் - 14

**"ஓணான் வேலிக்கு இழுக்கிறது; தவளைத் தண்ணீருக்கு இழுக்கிறது!"**

அன்று காலை எழுந்ததிலிருந்து மகளை, மாமியார் வீட்டிற்குக் கிளப்ப மான்விழியின் பெற்றோர் படாதபாடு பட்டார்கள். ஆனால் அவளை அசைக்கவே முடியவில்லை. நான் கேட்டது நடந்தால்தான் இங்கிருந்து நகருவேன் என்று உறுதியாகச் சொல்லிவிட்டாள். பெற்றவர்கள் செய்வதறியாது விழித்துக் கொண்டிருக்கையில் பெரியவீட்டின் கார் வாசலில் வந்து நின்றது.

"என்னங்க... மாப்ள வந்திருக்காரு போலருக்குங்க... "

"சரி வா... போயிப் பாக்கலாம்..." என்றபடி சிதம்பரம் வாசலுக்குச் செல்ல அவர் மனைவி அவரைப் பின்தொடர்ந்தார்.

வைதேகியும் தேவனும் காரிலிருந்து இறங்கினார்கள். மாப்பிள்ளையைக் காணாது ஏமாந்த சிதம்பரம் தம்பதியர் அதை முகத்தில் காட்டாமல், "வாங்க... வாங்க... வாங்க சின்ன மாப்ள... வாம்மா தங்கச்சி..." என்று வந்தவர்களைப் பலமாக வரவேற்று அமரச் செய்தார்கள்.

பரஸ்பரம் முகமன் விசாரித்த பிறகு "எங்க... மருமகளைக் காணும்..." என்று வைதேகி ஆரம்பிக்க,

"உள்ள இருக்கா... நா போயிக் கூட்டியாறேன்..." என்று சொல்லிவிட்டு உள்ளே செல்ல எத்தனித்த அவளுடைய தாயைத் தடுத்து... "இல்ல

இல்ல... நானே வந்து பார்க்குறேன்..." என்றபடி மருமகளைத் தேடி உள்ளறைக்குச் சென்றாள் வைதேகி.

ஏதோ புத்தகத்தைக் கையில் வைத்துக் கொண்டு ருத்ரனைப் பற்றிய சிந்தனையில் மூழ்கியிருந்த மான்விழி அறைக்குள் யாரோ நுழையும் அரவரம் கேட்டு நிமிர்ந்து பார்த்தாள். மாமியாரைக் கண்டதும் பரபரப்பாகி நாவலை ஒரு பக்கம் வைத்துவிட்டு "வாங்கத்த..." என்று எழுந்தாள்.

"நல்லா இருக்கியாம்மா...?" என்று வைதேகி சாதாரணமாகப் பேச்சை ஆரம்பித்ததும் அவளும் இலகுவாகி "ந... நல்லா இருக்கேன்த்த..." என்றாள் தெளிவில்லாமல்.

"உக்காருங்க அண்ணி... மானுகிட்டப் பேசிக்கிட்டு இருங்க. நா போயி காபிப் போட்டு எடுத்துட்டு வாரேன்..." என்று மான்விழியின் அன்னை சமயலறைக்குச் சென்றுவிட வைதேகியும் மான்விழியும் தனித்து விடப்பட்டார்கள்.

"என்னம்மா இப்புடிப் பண்ணிப்புட்ட... எங்களுகிட்ட ஒரு வார்த்தச் சொல்லிட்டு வந்திருக்கலாம்ல... உன்ன காணாம நாங்க எல்லாரும் தவிச்சுப் போய்ட்டோம்..."

"இல்லத்த... வந்து..." என்று மாமியாரின் கேள்விக்குப் பதில் சொல்லத் தெரியாமல் மான்விழி சங்கடமாக விழித்தாள்.

"தம்பிக்கும் உனக்கும் ஏதோ மனக்கசப்புன்னு தெரியுது. ஆனா எதுவா இருந்தாலும் நீ இப்புடித் திடுதுப்புன்னு கெளம்பி வந்திருக்கக் கூடாது..."

மாமியார் தன்னை மட்டும் குற்றம்சாட்டிப் பேசுவது பிடிக்காமல், "தப்பு என்மேல மட்டும் இல்லத்த... நான் அந்த வீட்டுலேருந்து வெளிய வர்ற மாதிரி நடந்துக்கிட்டது உங்க பையன்தான்" என்றாள் வெடுக்கென்று.

"தம்பி என்ன செஞ்சிச்சு...?"

"எங்கத் தெருவுல நாலு பேருகிட்ட அடாவடித்தனம் பண்ணி நெலத்த எழுதி வாங்கியிருக்காரு. எங்க அப்பாவையும் சேர்த்து... சொல்லப் போனா அந்த நெலத்துக்காகத்தான் எங்கக் கல்யாணமே நடந்திருக்கு..."

"மானு...! அப்புடியெல்லாம் இருக்காதும்மா... தம்பி அதுமாரி செய்ற ஆளு இல்ல... நம்மக்கிட்ட இல்லாத நெலமா...? நாம எதுக்கு மத்தவங்க நெலத்துக்கு ஆசைப்படப் போறோம்..."

"உங்களுக்குத் தெரியாம இருக்கலாம்த்த... இந்தத் தெரு

ஆளுங்கக்கிட்டக் கேட்டுப் பாருங்க... உங்க மகனோட லச்சணத்தப் புட்டுப் புட்டு வைப்பாங்க..."

"இல்லம்மா... அப்படியே தம்பி ஏதாவது நெலம் வாங்கியிருந்தாலும் யாருக்கும் அநியாயம் செஞ்சிருக்காது. முழுசா வெவரம் தெரியாம நீ வார்த்தைய விட்டுடாத..."

"விபரம் தெரிய வேண்டியது எனக்கு இல்லத்த... உங்களுக்குத்தான்... உங்க பையன்கிட்டையே போயி விசாரிச்சுப் பாருங்க... எல்லாம் புரியும்..."

"சரிம்மா... நா விசாரிக்கிறேன்... இப்ப நீ கௌம்பு... நேரமாவுது... ஆச்சிக்கு ஏழு மணிக்கெல்லாம் சாப்பாடுக் குடுக்கணும். நா அங்க இல்லன்னா ஒரு வேலையும் நடக்காது..." என்று இயல்பாகப் பேசிக் கொண்டே மருமகளை வீட்டிற்கு அழைத்தாள்.

"உங்க பையன் பண்ணிக்கிட்டு இருக்கத் தப்பையெல்லாம் சரி பண்ணாம நா இங்கிருந்து வரமாட்டேன்" அவள் பிடிவாதமாகச் சொன்னாள்.

அந்த நேரம் காபியுடன் உள்ளே நுழைந்த மான்விழியின் தாய் மகளின் பேச்சைக் கேட்டுவிட்டு அரண்டுப் போய் "ஏய்... மானு... என்ன பேச்சு இது... அத்த தான் கூப்பிட்றாங்கல்ல... கௌம்பு..." என்றாள் அதட்டலாக.

மான்விழி பதில் பேசாமல் தாயை முறைத்தாள். அவர்களின் பேச்சில் இடையிட்ட வைதேகி, "விடுங்கப் பரவால்ல... மானுக்கு மனசுலக் கொழப்பம். அது தெளியாம அங்க வந்தா ரெண்டுபேருக்கும் சச்சரவாத்தான் இருக்கும். நா போயித் தம்பிக்கிட்டப் பேசுறேன். ரெண்டுபேரும் மனசுவிட்டுப் பேசினா எல்லாப் பிரச்சனையும் பனி போல வெலகிடும். அதுவரைக்கும் மருமகளப் பத்தரமா பாத்துக்கங்க..." என்று சொல்லிவிட்டு ஹாலுக்கு வந்து சிதம்பரத்திடம் பேசிக் கொண்டிருந்த தேவனை அழைத்துக் கொண்டு வீடு திரும்பினாள்.

இந்த விஷயம் ருத்ரனின் காதுக்குச் சென்றபோது அவன் ருத்ர தாண்டவம் ஆடிவிட்டான்.

"என்ன கேக்காம எதுக்கு என்னோட விஷயத்துல தலையிடுறிங்க...? யாரக் கேட்டு அங்க போனிங்க...?" என்று குதித்தவனைப் பாட்டிதான் சமாதானம் செய்தார்கள்.

"என்ன ராசு நீ...? அந்த மானு பொண்ணு என்னாத்துக்கு

அப்பமூட்டுக்குப் போனிச்சோ தெரியாது... ஆனா... கல்யாணமாயி ரெண்டு மாசத்துக்குள்ள இப்புடி புருசனும் பொண்டாட்டியும் தனித்தனியா பிரிஞ்சு நின்னா நல்லாவா இருக்கும்... ஊர்ல நாலு பய நம்ப மூஞ்சிக்கு நேரா கைய நீட்டி பேசிப்புடமாட்டான்...?"

"ஆச்சி... அவளுக்குக் கொழுப்பு ஆச்சி... ஒடம்பு முழுக்கக் கொழுப்பு... ஆரம்பத்துலையே அடக்காம விட்டுட்டேன்... இப்ப ஆடறா..." என்றான் முகத்தில் கோபம் ஜொலிக்க.

"அய்யே...! ஒம் பொண்டாட்டிக்குக் கொழுப்பு இல்லன்னாதானே பிரச்சன... அது இல்லன்னா அவ எப்புடி ஒன்னச் சமாளிப்பா... எல்லாம் சாடிக்கு ஏத்த மூடிதான்..." என்று பாட்டி போட்டுத் தாக்க அவன் பதில் பேசாமல் முறைத்தான்.

"தம்பி... சொல்றேன்னு கோவப்படாத... மானு சின்னப் பொண்ணு. அதுக்கு விருப்பம் இல்லாம உம்புடிவாதத்துக்கு அந்தப் பொண்ணக் கல்யாணம் பண்ணியிருக்க. அப்படி இருக்கும்போது அந்தப் பொண்ணுக்கு எந்தக் கொறையும் வராம பாத்துக்க வேண்டியது உன்னோட கடமை..." வைதேகி புத்திச் சொன்னாள்.

"இங்க அவளுக்கு என்ன கொறையாம்...?" அவன் எரிச்சலுடன் கேட்டான்.

"நீ செய்ற எல்லாக் காரியத்துக்கும் உண்டான காரணத்த அந்தப் பொண்ணுக்கு சொல்லிப் புரிய வைக்காததுதான் கொற..." மறைமுகமாகத் தாய் சொன்ன விஷயத்தைப் புரிந்துகொண்ட ருத்ரன்,

"ஓஹோ..." என்றான் சிந்தனையுடன்.

"போய்யா... நாளைக்கு நீயே போயி அந்தப் பொண்ணுக்கிட்ட என்னா வெவரமுன்னு கேட்டுச் சமாதானம் பண்ணி வீட்டுக்குக் கூட்டியாய்யா..." என்று சொன்னப் பாட்டிக்குத் தலையை ஆட்டிவிட்டு மாடிக்குச் சென்றான்.

முதல்நாள் போலவே அன்றும் ருத்ரனுக்குச் சரியாக உறங்க முடியவில்லை. அந்த வீட்டில் மான்விழியின் நடமாட்டம் இல்லாதது பெரிய இழப்பாகத் தோன்றியது.

'திமிர் பிடிச்சக் கழுத... ஒன்னுமில்லாத விஷயத்த ஊதிப் பெருசாக்கிட்டாளே...!' என்று நினைத்தான். அதேநேரம் 'அவளைக் கைநீட்டி அடித்தது ஒன்னுமில்லாத விஷயமா...? அதைக் கூடச் சகித்துக் கொண்டு இங்கு இருந்தவளை இந்த நிலப் பிரச்சனை

விரட்டியடித்துவிட்டதா...? அவ்வளவு கடுமையாகவா இந்த விஷயம் அவள் மனதைப் புண்படுத்திவிட்டது?' என்று அவன் மனசாட்சிக் கேள்வி எழுப்பியது.

'எதைச் சொல்லி அவளைச் சமாதானம் செய்வது... எப்படித் தன்னை நியாயப்படுத்துவது... உண்மையிலேயே தன்னிடம் நியாயம் இருக்கிறதா...?' என்றெல்லாம் யோசித்து யோசித்து விடைத் தேடிக் கொண்டிருந்தவன் மனப்போராட்டத்தினூடே வெகுநேரம் கழித்துக் கண்ணுறங்கினான்.

# # #

வைதேகி தேவனுடன் சிதம்பரத்தின் வீட்டிலிருந்து புறப்பட்ட பிறகு மான்விழிக்கு அவளுடைய தாய் எடுத்துச் சொல்ல முயன்றாள்...

"மானு... எதுக்குடி இப்புடிப் புடிவாதம் புடிக்கிற...? "

"நீ எதுக்குப் புடிவாதம் புடிக்கிற...? நேத்து நீங்க ஏமாந்துப் போயி எழுதிக் குடுத்த நெலத்தத் திருப்பிக் குடுக்கச் சொல்றதுல உங்களுக்கு என்ன பிரச்சனை...?"

"அது எப்புடிடீ கேக்க முடியும்....? காச வாங்கிகிட்டுப் பத்திரம் பண்ணிக் குடுத்த நெலத்தத் திருப்பிக் குடுன்னு எப்புடிடீ கேக்க முடியும்...?"

"காச வாங்கிக்கிட்டா...? காச வாங்கிக்கிட்டா நெலத்தக் குடுத்திங்க...? அப்பா நெலத்த வித்தாரா?"

"அப்பா விக்கல... உம்புருஷந்தான் புடிவாதமா நெலத்துக்கு உண்டான காசக் குடுத்துட்டாராம்..."

"என்னம்மா சொல்ற? இவரு நெறைய பேருக்கிட்ட நெலத்த ஏமாத்தி எழுதி வாங்கியிருக்காரும்மா... நம்மக்கிட்ட அதுமாரி பண்ணலையா...?"

"யாரு சொன்னது...? அந்தக் குட்டிச் சாத்தானா...? அது ஒரு அரவேக்காடு. அவ பேச்சக் கேட்டுக்கிட்டுத்தான் இப்படி உளறிகிட்டு இருக்கியா...?"

"அம்மா... அவ ஒன்னும் பைத்தியகாரி இல்ல விஷயம் தெரியாமப் பேசுறதுக்கு..."

"மூடுடி வாய... நீயே ஊரக் கூட்டி அவரு பேரக் கெடுத்துவுட்ருவ போலருக்கே... அவ பைத்தியக்காரி இல்ல... ஆனா நல்லது கெட்டதப் முழுசாப் புரியாத சின்னப்புள்ள... அவ சொன்னாளாம்... இவ கேட்டாளாம்..." என்று திட்டிவிட்டு அவன் மற்றவர்களிடம் நிலம்

வாங்கிய விபரத்தையும் அதற்கான காரணத்தையும் விவரித்தாள்.

ருத்ரன் மீது கோபம் கொண்டதற்கான காரணங்கள் யாவும் பிசுபிசுத்துப் போய்விட்ட அதிர்ச்சியிலிருந்து மீளமுடியாமல் மான்விழி திகைத்துப் போய் அமர்ந்திருந்தாள்.

"என்னடி இப்படிப் பேய் முழிமுழிக்கற?"

"இந்த விஷயத்த நீ ஏன் நேத்தே என்னுகிட்டச் சொல்லல?"

"நீ எங்கடி என்ன பேசவிட்ட...? நா ஒன்னு சொன்னா நீ ஒன்ன பேசி சண்டப் போடறதல தானே குறியா இருந்த?"

தாய் சொல்வதில் இருந்த உண்மை உரைக்க மௌனமானாள் மான்விழி.

பணவிஷயத்தில் ருத்ரன் யாருக்கும் அநியாயம் செய்யவில்லை என்றாலும் நிலத்தை வலுக்கட்டாயமாகப் பிடிங்கியிருக்கிறான் என்று அவன் மீதானக் கோபத்தை இறுக்கிப் பிடித்துக்கொள்ள முயன்றாள்.

ஆனால் அவனுடைய அடாவடித்தனத்திற்குப் பின்னால் இருந்த பொதுநலம் அவளுடைய முயற்சியைச் சுக்குநூறாக்கிவிட்டது. அவன்மீது தவறில்லை என்பதை அவள் மனம் ஏற்றுக் கொண்டாலும் அவளால் அதை வெளிப்படையாக ஒத்துக்கொள்ள முடியவில்லை.

கோபத்துடன் அங்கிருந்து கிளம்பி வந்ததோடு சமாதானத்திற்கு வந்தவர்களையும் ரோஷத்துடன் திருப்பியனுப்பிவிட்டு இப்போது எந்த முகத்தை வைத்துக் கொண்டு அங்குச் செல்வது என்று தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

ஏதாவது ஒரு காரணத்தைக் காட்டி அவன் மீதானக் கோபத்தைத் தொடர்ந்தே ஆக வேண்டிய கட்டாயத்தில் இருந்தவள், மீண்டும் பழைய விஷயத்தைப் பிடித்துக் கொண்டாள்.

"என்ன யோசிக்கிற...? நாளைக்குக் காலையில உன்ன..." தாய் பேசிக் கொண்டிருக்கும் போதே மகள் இடையிட்டாள்.

"அய்யோம்மா... ஏம்மா என்ன தொரத்தறதுலையே குறியா இருக்க...? அவர் என்னைக் கன்னத்துல அடிச்சாரே அதைக் கேக்கமாட்டியா...? என் கழுத்தப் பிடிச்சு நெரிச்சாரே அதைப் பத்திப் பேசவே மாட்டியா...?" என்றாள் சோர்ந்து போய்.

மகளின் அந்தக் குரல் தாயின் மனதைப் பிசைந்தது. தனக்குள் உண்டான உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளச் சிறிதுநேரம் அமைதியாக இருந்தவள்,

"மானு... உங்க அப்பா அவருகிட்ட கேட்டுட்டாராம்டா... அவரும் செஞ்சது தப்புதான்னு ஒத்துக்கிட்டாரம்..."

மான்விழி பதில் பேசாமல் அமைதியாக இருந்தாள். மகளை இதற்கு மேல் கட்டாயப்படுத்துவது முறையல்ல என்று உணர்ந்த தாய் 'ஓணான் வேலிக்கு இழுக்குது... தவளைத் தண்ணிக்கு இழுக்குது... இதுகளை எப்படிச் சமாதானம் செஞ்சு சேத்து வைக்கப் போறோமோ...' என்கிற கவலையுடன் அங்கிருந்து அகன்றாள்.

## அத்தியாயம் - 15

"அறுபத்து நாலடிக் கம்பத்திலேறி ஆடினாலும்,

அடியில் இறங்கித்தான் தியாகம் வாங்க வேண்டும்."

மான்விழி தாய்வீட்டிற்கு வந்து இன்றோடு சரியாக ஏழு நாட்கள் முடிந்துவிட்டது. வைதேகி மருமகளை வந்து பார்த்துவிட்டுச் சென்ற பிறகு அந்த வீட்டிலிருந்து எந்தத் தகவலும் இல்லை. அவளுடைய பெற்றோரும் அவளுடைய திருமண வாழ்க்கைச் சம்மந்தமாகப் பேச்சை எடுக்கவில்லை.

ஆரம்பத்தில் ருத்ரன் தவறு செய்தவன் என்கிற எண்ணம் இருந்தவரை அவன்மீது கோபமாக இருந்தாலும் நிம்மதியாக இருந்தாள். ஆனால் அவன் குற்றமற்றவன் என்று தெரிந்தப் பின் அதை ஏற்றுக்கொள்ள முடியாமல் பிடிவாதமாக அவன்மீது கோபம் இருப்பது போல் காட்டிக் கொண்டு பொய்யான முகமூடியை அணிந்து கொண்டு நடமாடினாள்.

ஏதோவொரு இனம்புரியாத உணர்வு அவளைக் கணவனிடம் பிடித்து இழுத்துக் கொண்டிருக்க அதைச் செயல்படுத்தவிடாமல் ஈகோ பின்னுக்கு இழுத்துப் பிடித்து முரண்டுச் செய்தது.

ஒவ்வொரு நாள் காலையும் கண்விழிக்கும் போது, தான் ருத்ரனுடைய வீட்டில் அவனுடைய அறையில் உறங்கி எழுகிறோம் என்று நொடிநேரம் தோன்றி மறையும் உணர்வை விரட்ட முயன்று இன்பமாகத் தோற்றுக்கொண்டே இருந்தாள்.

காணும் இடங்களிலெல்லாம் கம்பீரமாக நிமிர்ந்து நிற்கும் உருவம் ஒன்று கணநேரம் தோன்றி மறையும் மாயத்தைக் கண்டு வெட்கத்துடன் வியந்து போனாள்.

வேலைக்கு வரும் நாலாங்கரை மக்களைப் பார்க்கும் பொழுதெல்லாம் 'உங்களுக்காக அங்கே ஒருவன் போராடிக் கொண்டிருக்கிறான். அவன்தான் என் கணவன்...' என்று அலறும் நெஞ்சம் முழுக்க, பெருமை

பூ பூத்து நிறைவதை ஆனந்தமாக அனுபவித்தாள்.

இந்தச் சுகானுபவங்கள் எல்லாம் மாமியார் அவளை வந்து பார்த்துவிட்டுச் சென்றதற்குப் பிறகு அடுத்த இரண்டு நாட்களுக்கு மட்டும்தான் சாத்தியமாக இருந்தது. அதன்பிறகு கணவன் வீட்டிலிருந்து எந்தத் தகவலும் வராததைத் தொடர்ந்து சுகமாகக் குளிர்வித்த அனுபவங்களெல்லாம் சுட்டெரிக்க ஆரம்பித்தது.

ஒவ்வொரு நாள் விடியலிலும் 'ஐயோ... இன்னமும் நாம் இங்கேதான் இருக்கிறோமா...!' என்கிற எண்ணம் தோன்றி அவளைச் சுணங்க வைத்தது.

மாயமாகத் தோன்றி இமைக்கும் நேரத்தில் மறைந்து போகும் அவன் உருவத்தை 'இன்னும் கொஞ்சநேரம் பார்க்க முடியாமல் போய்விட்டதே...' என்று ஏங்கும் போது' நிஜத்தைத் தொலைத்துவிட்டு நிழலைத் துரத்திக் கொண்டிருக்கும் முட்டாளடி நீ...' என்று அவள் மனமே அவளைக் குத்தும்.

நாலாங்கரை மக்களைப் பார்க்கும் பொழுதெல்லாம் 'உங்களுக்காக ஊரை எதிர்த்துப் போராடுபவன் எனக்காக ஒரு அடிக் கூட எடுத்து வைக்க மாட்டேனென்கிறான்...' என்கிற எண்ணம் தோன்றி அவள் கண்களைக் கண்ணீரால் நிறைக்கும்.

அந்த வாரம் முழுவதும் கோபம், எதிர்பார்ப்பு, ஏமாற்றம், வருத்தம், அழுகை என்று உணர்ச்சிகரமாகக் கழிந்தது மான்விழிக்கு.

இப்படிப் பிடிவாதமாக இருந்து எதைச் சாதிக்கப் போகிறோம் என்று அலுப்பாக இருந்தது. பேசாமல் தன்னுடைய முகமூடியைக் கழட்டி எறிந்துவிட்டு அவனிடம் சென்றுவிடலாமா என்று கூடத் தோன்றியது. ஆனால் முடியவில்லை.

பலமாகச் சிந்தித்ததால் வந்த தலைவலியை விரட்டத் தோட்டத்திற்கு வந்தாள். வெளிக்காற்றை ஆழமாக உள்ளே இழுத்து மனப்புழுக்கத்தைத் தணிக்க முயல்கையில் அவள் செவிகளில் புல்லட்டின் ஒலி கேட்டது. பிரம்மையோ என்று அவள் நினைத்து முடிப்பதற்குள், சிதம்பரத்தின் வீட்டுவாசலுக்கு ருத்ரனின் வண்டி வந்துவிட்டது.

பத்தடி தூரத்தில் வீட்டின் பக்கவாட்டில் அமைந்துள்ள சிறிய தோட்டத்தில் நின்றபடிக் கணவனைப் பல நாட்களுக்குப் பிறகு பார்த்தவளுக்கு வார்த்தைகள் தொண்டைக்குழியில் சிக்கிக்கொள்ள... மொழி மறந்து, விழி வியப்பில் விரிந்தது.

'ஹை... வந்துட்டானே...!' என்று மகிழ்ந்து... 'எப்படித் திடீர்னு வந்தான்...!' என்று வியந்து... 'இவ்வளவு நாளும் வரவில்லையே...' என்று வருந்தி 'இப்போ மட்டும் எதுக்கு வரணும்...?' என்று கடைசியாகக் கோபத்தை அவள் மனம் இறுக்கமாகப் பிடித்துக் கொள்ள, முகத்தில் பல்வேறு உணர்ச்சிகளின் பாவம் வந்து போனது.

வண்டியை வாசலில் நிறுத்தி நிதானமாக ஸ்டாண்ட் போட்டபடி மனைவியின் முகத்தில் தோன்றி மறைந்த உணர்வுகளைக் கணக்கெடுத்தான் ருத்ரன்.

வண்டிச் சத்தம் கேட்டுப் பின்பக்கத் தோட்டத்திலிருந்து வாசலுக்கு வந்த சிதம்பரம் மருமகனைக் கண்டு மகிழ்ந்து போய்,

"அடடே... வாங்க மாப்ள... வாங்க..." என்று அவர் போட்டச் சத்தத்தில் மான்விழியின் தாய் தங்கை என்று அனைவரும் வாசலுக்கு வந்துவிடப் பலமான வரவேற்புடன் அவன் மாமனார் வீட்டுக்குள் சென்றான்.

நடப்பதை ஆச்சர்யத்துடன் பார்த்துக் கொண்டிருந்த மான்விழி வீட்டிற்குள் நுழையாமல் பின்பக்க வழியாகச் சமையலறைக்குள் நுழைந்து கொண்டாள்.

"மானு... இந்தா... மாப்ளைக்குத் தண்ணிக் கொண்டுபோய்க் குடு..." என்ற தாயின் சொல்லுக்கு,

"முடியாது..." என்று மறுப்பு சொன்னாள்.

மகளின் மறுப்பை மதிக்காமல் தாய் கட்டாயப்படுத்த வேறுவழியின்றித் தண்ணீர் சொம்புடன் கூடத்திற்குச் சென்றாள். மருமகன் முதல்முறையாக வீட்டிற்கு வந்திருந்த மகிழ்ச்சியில் ஏதேதோ கதைத்துக் கொண்டிருந்த சிதம்பரம் மகள் வந்ததைப் பார்த்துவிட்டு "தண்ணியாம்மா... குடு... குடு... மாப்ளைக்குக் குடு..." என்று மகளை ஊக்கப்படுத்தினார்.

மான்விழி தண்ணீர் சொம்பை ருத்ரனிடம் நீட்ட அவன் அதைக் கையில் வாங்காமல் புருவம் உயர்த்திக் கண்களால் என்னவென்று கேட்டான்.

மாமனார் வீட்டில் உள்ள அனைவரிடமும் இன்முகமாகப் பேசிக்கொண்டிருப்பவன் மனைவியை மட்டும் அளவிடுவது போல் ஒரு மார்க்கமாகவே பார்த்துக் கொண்டிருந்தான்.

'வீட்டிற்கு வந்தவனை 'வாங்க...' என்று அழைக்கவில்லை. இப்போது மட்டும் என்ன கரிசனம்...' என்பது போல் அவன் பார்க்க அதைப் புரிந்தும் புரியாதது போல் "தண்ணி..." என்று அவனுடைய கேள்விக்குப்

பதில் சொல்லிவிட்டுக் கையிலிருந்த சொம்பை டீப்பாயில் வைத்துவிட்டுச் சென்றுவிட்டாள்.

மகளின் செய்கையில் உடன்பாடில்லாத சிதம்பரம் டீப்பாயில் இருந்த சொம்பை அவசரமாக எடுத்து மருமகனிடம் நீட்டி "தப்பா எடுத்துக்காதிங்க மாப்ள... சின்னப் பொண்ணு..." என்று சமாதானம் சொன்னார்.

"விடுங்க மாமா... அவளப் பத்தி எனக்குத் தெரியாதா..." என்று சிரித்துக் கொண்டே மாமனாரைச் சமாதானம் செய்துவிட்டுச் சகஜமாகப் பேசிக் கொண்டிருந்தான். அவரும் தன் மகளின் மீது மருமகனுக்குப் பெரிய அளவில் கோபமில்லை என்று தெரிந்து நிம்மதியடைந்தார்.

மாப்பிள்ளை வந்திருக்கும் விபரம் தெரிந்து அக்கம் பக்கத்திலிருக்கும் சிதம்பரத்தின் தம்பிகளும் நெருங்கிய பங்காளிகளும் அவருடைய வீட்டிற்கு வந்து மருமகனுடன் பேசிக் கொண்டிருந்துவிட்டுச் சென்றார்கள். இதற்கிடையில் உள்ளே விருந்து தயாராகிக் கொண்டிருந்தது.

இரண்டு மணிநேரம் கரைந்துவிட்டது. "வாங்க மாப்ள சாப்பிடலாம்..." என்று சிதம்பரம் அழைக்க ருத்ரன் மறுக்காமல் எழுந்து உணவுக் கூடத்திற்குச் சென்றான்.

உள்ளுக்குள் விருப்பத்தோடும், வெளியே தாயின் கண்டிப்பிற்கு இணங்கியும் மான்விழி கணவனுக்குப் பரிமாறினாள். சிதம்பரமும் அவனுடன் சேர்ந்து அமர்ந்து உணவருந்தினார். கொஞ்சமும் சங்கோஜமில்லாமல் ருத்ரன் அசைவ உணவை வெளுத்து வாங்க மான்விழி ரகசியமாக மகிழ்ந்தாள்.

மதிய உணவு முடிந்து மீண்டும் வெற்றிலைப் பாக்கை மென்றபடி சிதம்பரம் மருமகனிடம் பேச்சு வார்த்தையை ஆரம்பிக்க, அவனும் நிஜாம் பாக்கை மென்றபடி அவருடைய அறுவையைச் சகித்துக் கொண்டிருந்தான்.

"என்னங்க... இப்படிக் கொஞ்சம் வாங்க..." என்ற மனைவின் குரலைக் கேட்டுச் சமையலறைப் பக்கம் சென்ற சிதம்பரம் சிறிதுநேரத்தில் பேயறைந்த முகத்துடன் மருமகனிடம் வந்து "நீங்க கொஞ்சநேரம் போயிப் படுங்க மாப்ள..." என்றார்.

தன்னிடம் பிளேடு போட்டதற்காக உள்ளே அவர் மனைவியிடம் சரியாக மாத்து வாங்கியிருக்கிறார் என்பதை அவருடைய முகக்களையிலிருந்தே தெரிந்து கொண்டவன் லேசாகச் சிரித்தபடி

எழுந்தான்.

"மானு..." என்று மருமகனுக்குப் படுக்கையைத் தயார்படுத்திக் கொடுப்பதற்காக மகளை அழைத்தார்.

"இருக்கட்டும் மாமா... நானே போய்க்கிறேன்... மான்விழியோட ரூம் எது...?" என்று கேட்டுக்கொண்டு அவர் கைகாட்டிய அறைக்குள் நுழைந்தான்.

###

உள்ளே நுழைந்த ருத்ரன் அந்த அறையை ஒருமுறை கண்களால் வட்டமடித்தான். சின்னதாக ஒரு கட்டில். சரியாக விரிக்கப்படாத மெத்தை விரிப்பின் மேல், பக்கத்துக்கு ஒன்றாகக் கிடந்த தலையணைகள். ஓரமாக ஒரு மேஜை. அதில் ஒரு தண்ணீர் பாட்டில் மற்றும் இரண்டு கதைப் புத்தகங்கள். ஒருபுற சுவற்றில் பெரிதாக ஓர் அலமாரி. அதில் முதல் இரண்டு அடுக்குகள் நிறையப் புத்தகங்கள் தூசிப் படிந்த நிலையில். மீதி இரண்டு அடுக்குகளில் அலங்காரமாகவும் தேவையில்லாமலும் பல பொருட்கள். மறுபுற சுவற்றில் ஒரு ஜன்னல். அதற்குப் பக்கத்தில் ஒரு பிளாஸ்டிக் நாற்காலி. அதன்மீது கால்களை மடித்து வைத்துக்கொண்டு உள்ளே வருபவர்களுக்கு முதுகுக் காட்டி அமர்ந்திருக்கும் மான்விழி.

அறையை அளவெடுத்தபடி உள்ளே நுழைந்த ருத்ரன் நிதானமாகச் சட்டையைக் கழட்டி மேஜைமீது ஒருபக்கமாக வைத்துவிட்டுத் தலையணையை எடுத்து முதுகுப் பக்கம் வைத்துக் கொண்டு கட்டிலில் சாய்ந்தமர்ந்தான்.

அரவரம் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிய மான்விழி கணவனைத் தன்னறையில் கண்டுவிட்டு "இங்க என்ன செய்றிங்க...?" என்றபடி எழுந்தாள்.

"தெரியல...? கொஞ்சநேரம் தூங்கப் போறேன்... ஜன்னல அடச்சு உக்காராம அந்தப் பக்கமா போயி உக்காரு. காத்து வரட்டும்..." அலட்டிக்காமல் பேசினான்.

"ஹலோ... இது என்னோட ரூம்... நீங்க தூங்கறதுன்னா உங்க வீட்டுலப் போயி தூங்குங்க. இங்க எதுக்கு வந்திங்க...?"

"இது என்னம்மா கேள்வி... மாமனாரு வீட்டுக்கு எதுக்கு வருவாங்க? விருந்து சாப்பிடத்தான். சாப்பிட்டாச்சு... இப்போ ரெஸ்ட் எடுக்கப் போறேன். "

"மாமனாரு வீடா...? அது எப்போலேருந்து...?"

அவள் எரிச்சலுடன் கேட்க... அவனோ, "எனக்குக் கல்யாணம் ஆனதிலிருந்து..." என்றான் சிரித்தபடி.

அவள் பதில் பேசாமல் அவனை முறைத்தாள். அவனுடைய சிரிப்பு அதிகமானது. "இப்படி வா..." என்று அழைத்தான்.

"எதுக்கு...?" என்றாள் துடுக்காக.

அவனுக்குக் கோபம் வரவில்லை. "எதுக்கு வீட்லேருந்து திடீர்னு கெளம்பி வந்துட்ட...?" என்றான் இலகுவான குரலில்.

அவளுக்குப் பதில் சொல்ல முடியவில்லை. அதனால்... "அப்படித்தான் வருவேன்..." என்று வீம்புடன் சொல்லிவிட்டு அசையாமல் அவனை முறைத்தபடியே நின்றாள். அவனும் அவளுடைய கண்களிலிருந்து பார்வையை அகற்றவில்லை. அவளுடைய கண்கள் லேசாகப் கலங்கியது போல் இருந்தது.

அவன் எழுந்து அவளை நெருங்கி வந்தான். அவளுடைய ஒரு கையைப் பிடித்துத் தன் கைகளுக்குள் அடக்கிக் கொண்டு அவள் கண்களைப் பார்த்துச் சொன்னான்.

"மன்னிச்சுடு..." அறுபத்து நாலடிக் கம்பத்திலேறி ஆடினாலும், அடியில் இறங்கித்தானே தியாகம் வாங்க வேண்டும்... அவனும் இறங்கி வந்தான்... ஆனால் அவள் முறுக்கிக் கொண்டு,

"எதுக்கு...?" என்றாள்.

"எல்லாத்துக்கும்..."

"முடியாது" அவள் பட்டென்று சொன்னதும் அவனிடம் ஒரு ஆச்சர்யம் தோன்றியது. இதழ்களில் மீண்டும் சிரிப்பு எட்டிப் பார்த்தது.

"முடியாதா...!" என்றான்.

"ஆமாம்... மன்னிக்கமுடியாது..." என்றாள் அழுத்தமாக.

"ஏன்...?" என்றான் சிரிப்பு மாறாத முகத்துடன்.

"எதுக்கு மன்னிக்கணும்..." அழுத்தமாகக் கேட்டாள்.

"பாவமுன்னு மன்னுச்சுடேன்..."

"பாவமா...! நீங்களா...?" அவள் நக்கலாகக் கேட்டபடித் தன் கையை அவனிடமிருந்து உருவிக் கொண்டாள்.

"வீட்ல மருமக இல்லன்னு அம்மாவும் ஆச்சியும் என்ன போட்டுப் படுத்தறாங்க... என்ன பார்த்தா பாவமா இல்லையா...!" என்றான் முகத்தை அப்பாவி போல் காட்ட முயன்றபடி.

அவனுடைய அந்த முயற்சி அவள் முகத்தில் லேசாகச் சிரிப்பைக் கொண்டு வந்தது.

"ரொம்ப முயற்சி பண்ணாதிங்க... சகிக்கல.." என்றபடி அந்த இடத்திலிருந்து நகர்ந்து மேஜைக்கு அருகில் சென்று பாட்டிலை எடுத்துத் தண்ணீர் குடித்தாள்.

அவள் அவனுடைய மூக்கை உடைத்துவிட்டதில் கொஞ்சம் சோர்ந்தவன் "இப்ச்... சாயங்காலம் வீட்டுக்குக் கௌம்பலாம் மான்விழி... தயாராகு..." என்றான்.

"உங்க வீட்டுக்கு நான் வர மாட்டேன்..." என்றாள் அழுத்தமாக.

"வரலன்னா போடி... நீ ஒருத்திதான் எங்க வீட்டுக்கு மருமகளா...? நீ இல்லன்னா என்ன...? உன் தங்கச்சி இங்கதானே இருக்கா... அவளக் கல்யாணம் பண்ணி எங்க வீட்டு மருமகளா கூட்டிட்டுப் போறேன்..." என்று அவன் சொல்லி முடிப்பதற்குள் ஆவேசமானவள் "என்னது...!" என்று கையிலிருந்த காலி பாட்டிலை அவன் மீது தூக்கி எறிந்தாள்.

முதலில் திகைத்தவன் அனிச்சையாக அவள் எறிந்த பாட்டிலைக் கையில் பிடித்துவிட்டு "ஏய்... என்னடி அடிதடில எறங்கிட்ட...!" என்றான்.

"அடிக்கிறதா...! உங்களையெல்லாம் கொல்லாம விடக் கூடாது... எவ்வளவு திமிர் இருந்தா என்னுகிட்டயே இந்த மாதிரி பேசுவிங்க..." என்று கையில் கிடைத்த பொருட்களைக் கொண்டு அவனைச் சுற்றிச் சுற்றி அடித்தாள்.

"ஐயையோ... இருடி... அவசரப்படாத... சொல்றதக் கேட்டுட்டு அடிடி... ஏய்... நிறுத்துடி... நிறுத்து... நிறுத்து..." என்று சொல்லிக் கொண்டே அங்குமிங்கும் நகர்ந்து அவள் கொடுக்கும் அடிகளிலிருந்து தப்பித்துக் கொண்டிருந்தவன் ஒரு கட்டத்தில் அவளை எட்டிப் பிடித்துக் கட்டியணைத்து முத்திரையைப் பதித்துவிட்டதில் அவள் சிலையானாள்.

முதலில் தன்னிலைக்கு மீண்ட ருத்ரன் அவளை விடுவித்த நொடி அவனிடமிருந்து பதறியடித்து விலகிய மான்விழியின் இதயம் வேகமாக அடித்துக் கொள்ள கண்களில் நீர் கோர்த்துவிட்டது.

"என் தங்கச்சியக் கல்யாணம் பண்ணுறேன்னு சொன்னவர் என்னுகிட்ட இப்படி நடந்துக்கறிங்களே... அசிங்கமா இல்ல...?" என்றபடி அவன்

முகத்தை நேருக்குநேர் பார்த்தாள்.

விரிந்த அவள் விழிகளை ஆழமாகப் பார்த்து "உன் தங்கச்சிய என் தம்பிக்குக் கல்யாணம் பண்ணி என் வீட்டுக்கு மருமகளா கூட்டிட்டுப் போறதுக்கும்... இந்த மான்விழிகிட்ட நான் மயங்குறதுக்கும் என்னடீ சம்மந்தம் இருக்கு...?" என்று கிறக்கமான குரலில் கேட்டான்.

"சும்மா சமாளிக்காதிங்க... நம்ம கல்யாண விருந்தன்னைக்குக் கூட இதே மாதிரி காவ்யாவ உங்க வீட்டுக்கு மருமகளா கொண்டு வர்றதப் பத்திப் பேசினிங்க..."

"அன்னைக்கும் என் தம்பிக்கு காவ்யாவக் கல்யாணம் செய்றதப் பத்திதான் பேசுனேன்... நீ தப்பா நெனச்சா நா என்ன செய்ய முடியும்... சொல்லு..." என்றபடி பிடிவாதமாக அவளுடைய கையைப் பிடித்து அழைத்து வந்து கட்டிலில் அமர செய்தான்.

.அவள் பதில் பேசாமல் மௌனமாக அமர்ந்திருந்தாள்.

"மான்விழி... உனக்குப் படிக்கிறதுன்னா ரொம்பப் பிடிக்குமா...?" என்றபடி அவளுக்கருகில் அமர்ந்தான்.

"அது எதுக்கு இப்ப...?" சற்று எரிச்சலுடன் கேட்டாள்.

"இல்ல... இங்க இவ்வளவு புத்தகம் அடுக்கியிருக்கே... அதான் கேட்டேன்..."

"அதெல்லாம் காலேஜ் புக்ஸ்..."

"தூசி படிஞ்சுப் போயிருக்கு...?"

"ம்ம்ம்... காலேஜ் போனா தானே அதையெல்லாம் படிக்கலாம்..."

"மன்னிச்சிடு மான்விழி... என்னாலதான் உன்னோட படிப்புக் கெட்டுப் போச்சு... எதப் பத்தியும் யோசிக்காம உன்னோட மனநிலை என்னன்னு தெரிஞ்சுக்காம... உன் கழுத்துலக் கட்டாயப்படுத்தித் தாலிக் கட்டினது பெரிய தப்பு... என்னால நீ எதையும் இழந்ததா இருக்கக் கூடாது... நீ கண்டிப்பா படிப்பத் தொடரணும்... நான் ஏற்பாடு பண்ணுறேன்..." என்று அவன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அவள் அவனை உக்கிரமாக முறைத்தாள்.

"ஏய்... என்ன...?" அவளுடைய அக்னிப் பார்வையில் குழம்பிப்போன ருத்ரன் கேட்டான்.

"இந்தக் கல்யாணத்துல நடந்த ஒரே ஒரு நல்ல விஷயம்.... நான் இந்தப் புத்தகக் கூட்டத்துகிட்டேருந்து தப்பிச்சதுதான். அது பொறுக்கலையா

உங்களுக்கு...?"

"புத்தகக் கூட்டமா...! என்னடி இப்படிச் சொல்ற...?"

"வேற எப்படிச் சொல்றது...? படிக்கிறதுன்னா எனக்குச் சுத்தமாப் பிடிக்காது"

"அப்பறம் எதுக்குடி காலேஜுக்குப் போன...?"

"அது... அப்பாவோட கட்டாயத்துக்காகப் போனேன். அதோட ப்ரண்ட்ஸ் எல்லாரும் காலேஜ்ல சேர்ந்துட்டாங்க. நா மட்டும் வீட்டுல இருந்து என்ன செய்றது...? "

"எப்ப பார்த்தாலும் புக்கோடையே திரியுவியே... அது...?"

"அது கதை புக்கு... நாவல் படிக்க மட்டும் பிடிக்கும். மத்தபடி பாடப்புத்தகமுன்னா அலர்ஜி... படிகிடின்னு சொல்ற வேலைய இன்னையோட விட்டுடுங்க... சொல்லிட்டேன்..." என்று மிரட்டினாள்.

"என்ன இப்படி மெரட்டுற? ம்ஹூம்... நீ படிப்ப முடிச்சே ஆகணுமே...!"

"அதெல்லாம் முடியாது..."

"ஏன் முடியாது...? நம்ம கல்யாணம் நடக்கலன்னா நீ காலேஜ் போயிக்கிட்டுதானே இருந்திருப்ப... அதுமாதிரி நெனச்சுக்கோ..."

"முடியாது... முடியாது... முடியாது... நான் காலேஜுக்குத் திரும்பப் போகவே மாட்டேன்..."

"அப்படியா... சரி விடு... உன்ன எப்படி காலேஜுக்கு அனுப்பறதுன்னு எனக்குத் தெரியும்"

"என்ன தெரியும்?"

"உன்ன எப்படி காலேஜ்லேருந்து தூக்கிட்டு வந்தேனோ அதே மாதிரிக் கொண்டுபோய் விட வேண்டியதுதான்..." என்று அவன் சொல்லி முடிப்பதற்குள் அவள் அவனைத் தாக்க ஆரம்பித்துவிட்டாள்.

"கட...த்து...விங்களா... காலேஜ் போலன்னா... க... கடத்திட்டு... போயி... படிக்க... சொல்லு...விங்களா...?" என்று கேட்டபடி அவனுடைய தோள், கை என்று சரமாரியாக அடிக் கொடுத்தாள். நறுக்கென்று நகத்தால் கிள்ளினாள்.

"ஐயோ... விடுடி ராட்சசி... விட்டுடு..." என்று கத்திக் கொண்டு அவள் கொடுக்கும் அடிகளிலிருந்து தப்பிப்பது போல் பொய்யாக முயன்று சத்தமாகச் சிரித்தான்.

அவனை அடித்து அடித்து அவளுடைய கை வலித்த பிறகு சோர்ந்து அமர்ந்தாள். பூட்டிய அறைக்குள் மனைவியிடம் அவ்வளவு அடிகளையும் வாங்கிக் கொண்டு அதன் பிரதிபலிப்பாகப் பிரகாசமான பல்ப் ஒன்றை முகத்தில் எரியவிட்டு, அவளுடைய சிவந்திருந்த கைகளை எடுத்து இதழ்பதித்து "இப்பக் கோவம் போச்சா...?" என்றான்.

மான்விழிக்குப் பெரிய ஆச்சர்யம். 'முதல் நாள் அவனை மரியாதைக் குறைவாகப் பேசிய பொழுது அவ்வளவு ஆத்திரப்பட்டவன் இன்று இவ்வளவு அடிகளையும் வாங்கிக் கொண்டு சாந்தமாக இருக்கிறானே...!' என்று வியந்தாள்.

"அடிக்கடி இந்தக் கண்ண உருட்டி இப்படிப் பார்த்தா என்ன அர்த்தம்...? கோவம் போச்சா இல்லையா...?"

"போகல..." என்றாள் வீம்பாக.

"நாலாங்கர நெலத்தை எல்லாம் அந்த ஜனங்களுக்கே பொதுச் சொத்தா எழுதி வச்சிட்டேன்... "

அவளுடைய விழிகள் அடுத்த ஆச்சர்யத்தில் இன்னும் பெரிதாக விரிந்தன.

அவன் அவள் கண்களைக் காதலுடன் பார்த்து மீண்டும் கேட்டான்... "இப்பக் கோவம் போச்சா...?"

அவள் வேண்டுமென்றே "போகல..." என்றாள்.

"நாலாங்கரைக்கு நம்ம போர் தண்ணியும் ஆத்துத் தண்ணியும் தடையில்லாம போறதுக்கு ஏற்பாடு செஞ்சுட்டேன்... ஒரு வாரமா அந்த வேலையில மும்முரமா இருந்ததுனால இந்தப் பக்கம் வர முடியல... இப்பக் கோவம் போச்சா...?" என்றான் அவள் மனதைப் படித்தவன் போல்.

மனதில் சிறு அளவில் கூடக் கோபம் இல்லாதபோதும், சிரிக்கத் துடிக்கும் இதழ்களை முயன்று கட்டுப்படுத்திக் கொண்டு "போகவே இல்ல..." என்று பிடிவாதமாகச் சொன்னவளைக் கைகளுக்குள் சிறைச் செய்து செவ்விதழின் சுவையறிந்தான்.

இன்பமாகக் கழிந்த சில நொடிப்பொழுதில் நூறு ஜென்மம் வாழ்ந்து முடித்துவிட்ட நிறைவுடன் விலகிய இருவரும், வார்த்தைகளை மறந்து மௌனமொழியில் உணர்வுகளைப் பரிமாறிக் கொண்டு, அவர்களுக்குள்ளே பரவி படர்ந்திருந்த காதலைச் சிலிர்ப்புடன் உணர்ந்தார்கள்.

தன்னிலை மறந்து நின்றவளின் முகத்துக்கு நேராகக் கையை அசைத்து அவள் கவனத்தைக் கவர்ந்து "இப்பக் கோவம் போச்சா...?" என்றான் சிரிப்புடன்.

அப்போதும் வெட்கச் சிரிப்புடன் "இல்ல... போகல..." என்றாள்.

"அப்டியா...?" என்றபடி அவன் அவளை மீண்டும் நெருங்க "போய்டிச்சு... போய்டிச்சு..." என்று பதறியடித்துக் கொண்டு விலகி "என்ன திடீர்னு ரொம்ப காதல்ல கரைஞ்சுப் போறீங்க...?" என்றாள்.

"முதல் தடவ உன்ன பாலத்துல பாத்தப்ப எதுவும் தோணல... அதே மாதிரி புல்லட் கண்ணாடில உன்னோட முகத்தப் பாத்தப்பவும் பெருசா எந்த எண்ணமும் தோணல... அதுக்குப் பிறகு எப்போன்னு தெரியல... ஆனா பெருசா எனக்குள்ள மாற்றம் வந்துடுச்சு... கொஞ்சம் கொஞ்சமா... மயங்கிட்டேன்... இந்த மான்விழிகிட்ட..." என்றான்.

அவள் அவனை நம்பாமல் பார்த்தாள்.

"நம்ப முடியலையா...?"

அவள் 'ஆம்' என்பது போல் தலையசைத்தாள்.

"எனக்கும்தான் நம்ப முடியல... ஆனா நிஜம்... நீ வீட்ல இல்லாத இந்த ஒரு வாரமும் வீடு எனக்கு வெறுமையா ஆயிட்ட மாதிரி தோணிச்சு... உன்ன உடனே வந்து பாக்கணுமுன்னு மனசு அடிச்சுக்கிடுச்சு... வம்புப் பண்ண நீ பக்கத்துல இல்லாதது ஒரு கை உடஞ்ச மாதிரி இருந்துச்சு... தூக்கம் வரல... பசிக்கல... வேலை நேரத்துல கூட உன்னோட நெனப்பு நடுநடுவுல என்ன தொல்லை பண்ணும்... இதெல்லாம்தான் காதல்னா நா காதல்ல கரஞ்சுதான் போறேன்... முழுசாக் கரைஞ்சுக் காணாமப் போறதுக்குள்ள கொஞ்சம் காப்பாத்தும்மா..." என்று அவன் நீட்டமாக வசனம் பேச

'இங்க நானே கரஞ்சுக் காணாமப் போயிட்டேன்... இதுல நா எப்படி உங்களக் காப்பாத்துறது...?' என்று அவள் முணுமுணுத்தாள்.

அவளுடைய முணுமுணுப்பை அவன் புரிந்து கொண்டான்.

"ஏய்...! என்ன...! இப்போ என்ன சொன்ன நீ...?" என்று அவன் ஆர்வமுடன் அவளைப் பார்க்க அவளோ வெட்கத்துடன் விலகி ஓட... இவன் தடுக்க, அவள் திமிர அங்கே அவர்களின் காதல் நாடகம் ஆரம்பமானது. இனி அவளுக்காக அவனும்... அவனுக்காக அவளும் வாழ்வார்கள் என்பதில் ஐயமில்லை.

சுபம்